பொருளடக்கம்

நபிகளார் காலத்து யுத்தங்கள்

மொழி பெயர்ப்பு

முஃபஸ்ஸிருல் குர்ஆன்

எஸ்.எஸ்.முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி (ரஹ்)

உத்தமபாளையம்

வெளியீடு

இஸ்லாமிய நூல்கள் மலிவுப்பதிப்பு பப்ளிஷர்ஸ் & புக் செல்லர்ஸ்,

62/1 மலையப்பன் தெரு, மண்ணடி,

சென்னை - 600 001

செல் : 9840273818

பொருளடக்கம்

பொருளடக்கம்

பொருளடக்கம்

போர்கள் பற்றிய விளக்கம்

எம்மால் மொழி பெயர்க்கப்பட்டுள்ள ஹளரத் முஹம்மது ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்ற நூலில் முதல் மூன்று பாகங்களில் போர்கள் பற்றிய விபரம் பூரணமாக எழுதப்பட்டிருக்கிறது. அவற்றின் தலைப்புகளை மட்டும் பார்க்கும் எவரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருமதீனாவிற்கு வந்ததிலிருந்து இவ்வுலகை விட்டு மறையும் வரையில் ஏறத்தாழ பதினோறு வருட காலம் அரபு நாடு முழுவதிலும் போர் செய்திருக்கிறார்கள் என்றே நம்புவர். உண்மையில் போர்கள் யாவும் விரல் விட்டு எண்ணப்படக்கூடிய அளவில் ஒரு சிலவேயாகும். இவற்றால் இரண்டு தரப்பிலும் ஏற்பட்ட மொத்த உடல், உயிர் சேதங்களைக் கணித்துப் பார்த்தால் இரண்டு உலகப் போர்களைப் பற்றி

அறிந்தவர்கள் இவைகள் போர்கள் இல்லை என்றே கூறுவர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருமக்காவைத் துறந்து திருமதீனாவிற்கு குடியேறிய பின்னரே சன்மார்க்க விரோதிகள் போர்களைத் தொடங்கினர். நபித்துவத்தைப் பெற்று திருமக்காவில் தங்கி இருந்த பதிமூன்று வருட காலத்தில் பிரச்சாரம்தான் நடந்தது. மூடக் கொள்கைகளையும், இணை வைத்து வணங்குவதையும் கடைப்பிடித்து வந்தவர்களிடம் ஏக தெய்வக் கொள்கையையும் ஏக தெய்வ வணக்கத்தையும் பற்றிய உபதேசம்தான் செய்யப்பட்டது.

ஏக தெய்வ உபதேசங்கள்தான் விரோதத்திற்கும், பகைக்கும் காரணமாக அமைந்தன. உபதேசங்களைத் தடுப்பதற்காக பகைவர்கள் பலவித நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

கிண்டல் செய்தல், பரிகசித்தல், ஆகியவற்றிற்கு என ஒரு கூட்டம் தோற்றுவிக்கப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஒவ்வொரு செய்கையையும் பற்றிக் கிண்டல் செய்தல், கேலி செய்தல், பரிகசித்தல், நையாண்டி செய்தல் ஆகியவற்றுடன் வெளியூர்களிலிருந்து வருவோரிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப்பற்றி

தவறான எண்ணம் ஏற்படும்படி செய்தல் இவர்களின் வேலை. முஸ்லிம்களுடனும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடனும் பேசாமல் வெளியூர்க்காரரை விலக்கிவைக்க வேண்டும் என்பது இவர்களின் நோக்கம்.

இக்கூட்டத்தினர் மொத்தமாகச் சேர்ந்திருக்காமல், பலவாறாகப் பிரிந்து தங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொண்டு தங்களால் இயன்ற வரையில் முழு வீச்சுடன் செய்தனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உபதேசம்செய்யும்இடங்களுக்குச் சென்று கூச்சலிட்டு, கூட்டம் அமைதியாக இருந்து பிரசங்கத்தைக் கேட்க முடியாமல் குழப்பம் செய்வது ஒரு கூட்டத்தின் வேலை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வழக்கமாகச் செல்லும் பாதைகளிலும். தெருக்களிலும் முட்களைப் போட்டு வைத்தல், பொருப்புக் குழிகளை வெட்டி வைத்தல், அசுத்தங்களைக் கொட்டி வைத்தல் ஒரு கூட்டத்தாரின் வேலை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், ஏழை முஸ்லிம்கள் மீதும், மறைந்திருந்து கல்லெறிதல், தொழுகை போன்ற வணக்கங்களில் ஈடுபட்டிருக்கும் போது இடையூறு செய்தல், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களின் வீட்டில் இரவு நேரங்களில் மலம், சாணம் முதலியவற்றைக் கொட்டி வைத்தல் சிலரின் பணி.

இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வோருக்கு விதம் விதமான கஷ்டங்களையும், நஷ்டங்களையும் விளைவித்து தொல்லை கொடுத்தல், அடித்தல், வேதனை செய்தல், சந்தர்ப்பம் வாய்த்தால் அவர்களைக் கொலை செய்து உடலை மலைக்கணவாய், குகை முதலியவற்றில் மறைத்துக் காணாமல் ஆக்குதல் போன்ற காரியங்கள் சிலரிடம் இருந்தன.

பகைவரின் இத்தொல்லைகளை சகிக்க இயலாத அப்பாவி முஸ்லிம்கள் திருமக்காவை விட்டு வெளியிடத்திற்காவது செல்லலாம் என முடிவு செய்து, பக்கத்திலுள்ள அன்னிய நாட்டிற்கும் குடியேறினர். மக்காவாசிகளை எப்படியாவது திருத்தி விடலாம் என்ற நோக்கத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவிலேயே தங்கியிருந்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், அவர்கள் பால் அனுதாபம் உள்ளவர்களுக்கும் எதையும் கொடுக்கல் வாங்கல் செய்யலாகாது, எந்த விதமான உறவையும் வைத்துக் கொள்ளலாகாது என்று கூடிப்பேசி மூன்று வருட காலம் வரையில் பகிஷ்கார இயக்கத்தை ஊர்க் கட்டுப்பாடாக

நடத்தினர்.

மக்காவிலுள்ள இந்த எதிர்ப்புத் தணியும் வரையில் மக்காவிற்கு வெளியே உள்ள இடங்களிலாவது பிரச்சாரம் செய்யலாம் என முடிவு செய்து அக்கம் பக்கத்துக் கிராமங்கள், சந்தை கூடுமிடங்கள், திருவிழா நடக்கும் இடங்கள் முதலியவற்றிற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சென்று பிரச்சாரம் செய்தார்கள். அங்குள்ளோர் மக்காவாசிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டு இருந்ததால் அங்கு அவர்களின் உபதேசத்தை செவியிலேற்றுக் கொள்ளவில்லை. அங்கெல்லாம் அவர்களுக்குத் தோல்வி ஏற்பட்டதைக் கண்டு மக்காவாசிகள் மகிழ்ச்சியடைந்ததுடன் தங்களுடைய எதிர்ப்பையும், பகையையும் வளர்த்துக்கொண்டே இருந்தனர்.

பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உபதேசம், யதுரபு (மதீனா) வாசிகளைக் கவர்ந்தது. அங்குள்ளவர்கள் அதனை ஆதரிக்கிறார்கள் என்ற செய்தி அவர்களுக்கு எட்டிய போது அவருடைய பேச்சில் உயிர் இருக்கிறது. உள்ளூரில் இல்லாவிடினும் வெளியூர்களிலேனும் அது உரம் பெற்றுவிடக்கூடும் என்ற உணர்ச்சி ஏற்பட்டபோது, இதனைத் தடுப்பதற்கான வழி என்னவென ஆலோசித்து அன்னவர்களின் உயிரைக் குடித்து விடுவதே சிறந்தது என

உறுதி பூண்டனர்.

அரசாங்கமோ, சட்டமோ, ஒழுங்கோ, பாதுகாப்போ இல்லாத ஒரு நாட்டில், கல்வியறிவற்ற காட்டு மிராண்டிகள் பல நூற்றாண்டுகளாக கலகமும், கொலையும், கொள்ளையும், இரத்தம் சிந்துதலும், பழக்கமாகக் கொண்ட ஒரு நாட்டில் வாழுகிறவர்கள் எவ்வித ஆயுதமோ, தற்காப்போ, வலிமையோ இல்லாத ஒரு தனி நபரைக் கொலை செய்வது என முடிவு செய்து விட்டால் இக்கொலைச் செயலுக்கென குடும்பத்துக்கு ஒருவர் கூரிய ஆயுதத்துடன் வெளியில் வந்து குழுமி விட்டால், அவர்களை விட்டுத் தப்பிப் பிழைப்பது என்பது நடைபெற முடியாத ஒன்றாகவே இருக்கும் என்பது வெளிப்படை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோ, இக்கொலைகாரர்களின் எதிரிலேயே வெளியேறிச்சென்றார்கள். ஓடவோ, ஒளியவோ இல்லை. பகிரங்கமாகவே சென்றார்கள். பிறந்த ஊரைப் பிரிந்தார்கள். பகைவர்களிடம் பிடிபடாமல் மதீனாவை அடைந்தார்கள். இதனைச் சிந்திக்கும் பகைவர்கள் படைத்தவனின் பாதுகாப்பு அவருக்கு இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க மாட்டார்கள். இதனைச் சிந்திக்கும் சன்மார்க்கர்கள் இறைவனின் பாதுகாப்பு அஃவனுடைய சொந்த அடியார்களுக்கு எந்நாளும் இருக்கிறது என்பதற்கு இது

கண்கூடான உதாரணம் என நன்றி செலுத்துவர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களை விட்டுத் தப்பி திரு மதீனாவை அடைந்தது தங்களுக்கு இழிவு என எதிரிகள் கருதினர். ஆதலால், பகைமையும், துவேஷமும் மென்மேலும் அதிகமாயிற்று. கோபத்தால் கொளுந்து விட்டு எரிந்தது. இஸ்லாத்தின் திரு நபியையும், முஸ்லிம்களையும் இத்தரணியில் விட்டு வைக்கக் கூடாது என உறுதி பூண்டனர்.

இரத்தம் குடிக்கும் குணமுள்ள காட்டுமிராண்டிகளின் காலித்தனத்தை நன்கு உணர்ந்திருந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அவர்களின் நடமாட்டங்களை அறிந்து மாற்று ஏற்பாடு செய்வது அவசியமாக இருந்தது. பகைவர் செய்யும் சதி ஆலோசனைகள், படை திரட்டும் யுக்திகள், போர் முஸ்தீபுகள் முதலியவற்றைச் சீர்குலையச் செய்யும் காரியங்களில் அவர்களும் ஈடுபட்டார்கள்.

போர்கள் வராமல் தடுப்பதற்காகச் செய்யப்பட்ட ஒவ்வொரு முயற்சியையும் வரலாற்றாசிரியர்கள் போர் என்றே எழுதி வைத்து விட்டனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எடுத்துக் கொண்ட தற்காப்பு நடவடிக்கைகளின் தன்மைகள், அவற்றின் அந்தரங்க நோக்கம்

ஆகியவற்றில் எதையும் கவனிக்காமல் அவசர முடிவுக்கு வந்து விட்டனர். இத்தவறின் காரணமாக விஷயமறியாத உண்மை முஸ்லிம்களும் கூட அவர்களின் கூற்றை நம்பி யாவற்றையும் போர் என்றே ஆமோதித்து விட்டனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நேரடியாகக் கலந்து கொண்ட நடவடிக்கைகளுக்கு கஸ்வா என்றும், அவரகள் கட்டளைப்படி மற்றவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு ஸரிய்யா என்றும் ஆரம்ப கால வரலாற்று ஆசிரியர்கள் பெயரிட்டனர். இவ்வார்த்தைகளுக்கு பயணம், புறப்பாடு என்பதுதான் இயற்பொருள். என்றாலும், பிற்காலத்தில் உள்ளவர்கள் இவற்றிற்குப் போர் என்பதாக கருத்துக் கொண்டு இதே கருத்தை பிரபல்யப்படுத்தி விட்டனர்.

82 யுத்தங்களின் பட்டியல்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைகள் அனைத்தையும் தேதி வாரியாக அவர்கள் கொடுத்த அதே பெயருடன் கீழே தருகிறோம். பின்னர் அவற்றைப் பற்றிய விளக்கங்களையும் அறிவோம்.

01. பெயர் : ஸரிய்யா ஸைஃபுல் பஹ்ரீ

ஹிஜ்ரீ முதலாம் ஆண்டு ரமலான் மாதம், கி.பி.623.
முஸ்லிம்கள் முப்பது பேர்கள், (30)
தலைவர் ஹம்ஜத்துப்னு அப்தில் முத்தலிப்
ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் முன்னூறு பேர்கள், 300
தலைவர் அபூஜஹ்ல்,
மக்காவாசிகளின் நடமாட்டங்களை உளவு பார்க்கவே அனுப்பப்பட்டது. முஸ்லிம்களின் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை உணர்ந்த அபூஜஹ்ல் தன் படையை அழைத்துக் கொண்டு கலைந்து சென்று விட்டார். இரண்டு தரப்பிலும் எவரும் காயமடையவோ, கொல்லப்படவோ இல்லை.

02. பெயர் : ஸரிய்யத்து ராபிக்
ஹிஜ்ரீ முதலாம் ஆண்டு, ஷவ்வால் மாதம், கி.பி.623.
முஸ்லிம்கள் அறுபது பேர்கள், (60)
உபைதத்துப்னுல் ஹாரித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு தலைவர்.
பகைவர்கள் இருநூறு பேர்கள், 200
இக்ரிமத்துப்னு அபீ ஜஹ்ல், தலைவர்
அபூ ஸுஃப்யான் என்றும் சொல்லப்படுகிறது.
முஸ்லிம்கள் உளவு பார்த்து விட்டுத் திரும்ப வந்தனர்.

தனிய்யத்துல் முர்ராவில் பகைவர்கள் திரண்டிருப்பதாக செய்தி கொண்டு வந்தனர். போர் நடைபெறவில்லை.

03. பெயர் : ஸரிய்யத்து ளர்ரார்.
ஹிஜ்ரீ முதலாம் ஆண்டு, துல் கஃதா மாதம்,
முஸ்லிம்கள் எண்பது பேர்கள், 80
ஸஃதுப்னு அபீ வக்காஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு தலைவர்,ஜுஹ்ஃபா வரையில் சென்று உளவு பார்த்துத் திரும்பினர், போர் நடைபெறவில்லை.

04. பெயர் : கஸ்வத்து வுத்தான் அல்லது கஸ்வத்து அப்வாஉ.
ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ஸஃபர் மாதம்,
கி.பி.623, ஜூன்.
முஸ்லிம்கள் எழுபது பேர்கள், 70
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,
குரைஷியருக்கோ, முஸ்லிம்களுக்கோ, உதவி புரியாமல் நடுநிலையாக இருந்து விட வேண்டும் என அம்ருப்னு மக்ஷிய்யில் ளம்ரீ இடத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. போர் நடைபெறவில்லை.

05. பெயர் : கஸ்வத்து ஃபுவாத்,
ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு, ரபீஉல் அவ்வல் மாதம்,
முஸ்லிம்கள் இருநூறு பேர்கள். 200
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,
பகைவர்கள் நூறு பேர்கள், 100
தலைவர் உமய்யத்துப்னு கலஃப்,
திருமதீனாவின் துறைமுகப்பட்டிணமான யன்பூஃ துறைமுகத்திற்குப் பக்கத்திலுள்ள ரிள்வீ மலைப் பிரதேசம், ஃபுவாத் ஆகிய இடங்களுக்கு ரோந்து சென்றனர். வழியில் உமய்யத்துப்னு கலஃபின் தலைமையில் வந்த குரைஷியரைப் பார்த்தனர். தாக்குதலோ, போரோ நடைபெறவில்லை.

06. பெயர் : கஸ்வத்து ஸஃப்வான் அல்லது பத்ருல் ஊலா,
ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம்,
முஸ்லிம்கள் எழுபது பேர்கள். 70
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,
பகைவர்கள் குர்ஜுப்னு ஜாபிரில் பிஹ்ரீ
குர்ஜுப்னு ஜாபிரில் என்பவர் தம் தோழர்களுடன் வந்து

மதீனாவாசிகளின் கால் நடைகளை கொள்ளையடித்துக் கொண்டு சென்றார். அவற்றை மீட்டுவதற்காக அவரைத் துரத்திச் சென்றனர். அவர்கள் தாக்கப்படவில்லை.

07. பெயர் : கஸ்வத்து துல்அஷீரா,
ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ஜமாதுல் ஆகிர் மாதம்,
கி.பி.623 அக்டோபர்
முஸ்லிம்கள் நூற்றி ஐம்பது பேர்கள். 150
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.
திரு மக்காவிற்கும், மதீனாவிற்கும் இடையில் யன்பூஃ துறைமுகத்துக்குப் பக்கத்தில் மேற்குத் திசையில் துல் அஷீரா இருக்கிறது. அங்கு பனூமுத்லஜ், பனூ ளம்ரத் கோத்திரங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. போர் நடைபெறவில்லை.

08. பெயர் : ஸரிய்யா நக்லா.
ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ரஜப் மாதம்,
கி.பி.623 நவம்பர்.
முஸ்லிம்கள் பன்னிரெண்டு பேர்கள், 12
தலைவர் அப்துல்லாஹிப்னு ஜஹ்ஷ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பகைவர்கள் ஒரு வியாபாரக் கூட்டத்தினர்.

உமய்யாவின் புதல்வர்கள் தலைவர்கள்.

குரைஷியர்களின் ஏற்பாடுகளைத் தெரிந்து செய்தி அறிவிக்க இவர்கள் அனுப்பப்பட்டனர்.உண்மையில் உளவாளிகள்தான். எனினும், குரைஷிக் குலத்தார் முதலாவதாகத் தாக்கியதால் சண்டை ஏற்பட்டது. பகைவர்களில் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் கைதிகள் ஆயினர். பின்னர் இவ்விருவரும் விடுதலை அடைந்தனர்.

09. பெயர் : கஸ்வத்துல் பத்ரில் குப்ரா.

ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ரமலான் மாதம்.

கி.பி. 624 ஜனவரி

முஸ்லிம்கள் முன்னூற்றிப் பதிமூன்று பேர்கள். 313

தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

பகைவர்கள் ஆயிரம் பேர்கள். 1000

தலைவர் அபூஜஹ்ல்.

220

திரு மக்காவிற்கு வடக்கே, சுமார் இருநூற்றி இருபது மைல் தூரத்திலும், திருமதீனாவிற்கு தென் மேற்கில் சுமார் எண்பது மைல் தூரத்திலும் பத்ர் இருக்கிறது. பகைவர்கள்

80

படையுடன் வந்து கொண்டிருக்கிற செய்தியை அறிந்த பின்னர் முஸ்லிம்களின் படை திரண்டு இந்த இடத்தில் வந்து பகைவர்களைச் சந்தித்தது. முஸ்லிம்கள் வெற்றி அடைந்தனர். பகைவர்களில் எழுபது பேர் கொல்லப்பட்ட 70 துடன், எழுபது பேர் கைதிகளாயினர். முஸ்லிம்களில் இருபத்தி இரண்டு பேர் ஷஹீதானார்கள். 22

10. பெயர் : ஸரிய்யத்து உமைரிப்னில் அதிய்யில் குத்மீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு
ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ரமலான் மாதம்
முஸ்லிம் ஒருவர் உமைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர் ஒரு பெண். அஸ்மாஉ பின்து மர்வானில் குத்மிய்யா.
இந்தப் பெண் உமைர் ரலியல்லாஹு த ஆலா அன்ஹு அவர்களின் உறவினர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு விரோதமாக மக்களைப் போருக்கு தூண்டி விட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்து அவளை அவர் கத்தியால் குத்திக் கொன்றார். இது தனி நபர் சண்டையே அன்றி, இரு தரப்பினரின் சண்டை அல்ல.

11. பெயர் : ஸரிய்யா ஸாலிமிப்னி உமைரினில் அன்ஸாரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு

ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ஷவ்வால் மாதம்

முஸ்லிம்களுக்கு விரோதமாக அபூ அப்கத் என்ற யூதர் மக்களை தூண்டி விட்டுக் கொண்டிருந்தார்.இதனைப் பார்த்த ஸாலிம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவரைக் கொன்று விட்டார்.

12. பெயர் : கஸ்வத்து பனூ கைனுகாஃ

ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு ஷவ்வால் மாதம்.

கி.பி.624 பிப்ரவரி மாதம்.

முஸ்லிம்கள் உள்ளூரிலேயே இருந்ததால் முஸ்லிம்கள் எத்தனை பேர் என்பது தெரியவில்லை.

தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

பகைவர்கள் பனூ கைனூகாஃ கோத்திரத்தார்

பத்ருப்போருக்கு முஸ்லிம்கள் சென்று இருந்த போது மதீனா நகரில் குழப்பத்தை ஏற்படுத்த முயன்றனர். இது அவர்களுடைய ஒப்பந்தத்திற்கு விரோதமானது. ஆதலால் அவர்கள் நாடு கடத்தப்பட்டனர்.

13. பெயர் : கஸ்வத்துஸ் ஸவீக்,

ஹிஜ்ரீ இரண்டாம் ஆண்டு துல்ஹஜ் மாதம்

கி.பி.624 ஏப்ரல்

முஸ்லிம்கள் இருநூறு பேர்கள். 200

தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

பகைவர்கள் இருநூறு குதிரை வீரர்கள். 200

தலைவர் அபூ சுஃப்யான்.

திருமதீனா வரையில் அபூசுஃப்யான் வந்து இரண்டு முஸ்லிம்களைக் கொன்று பழ மரங்களை வெட்டி வீழ்த்தி விட்டுத் தப்பி ஓடினார். அவரை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தலைமையின் கீழில் இருநூறு பேர் துரத்திச் சென்றனர். பகைவர்கள் தப்பி விட்டனர்.

14. பெயர் : கஸ்வத்து கர்கரத்துல் குத்ர் அல்லது பனூ ஸுலைம்.

ஹிஜ்ரீ மூன்றாம் ஆண்டு, முஹர்ரம் மாதம்,

முஸ்லிம்கள் இருநூறு பேர்கள். 200

தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

பகைவர்கள் பனூ கத்ஃபான், பனூஸுலைம்,
கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள்.
திருமதீனாவின் மீது படையெடுப்பதற்காக இக்
கோத்திரங்கள் ஒன்று திரண்டு கொண்டிருந்தன.
இவற்றைக் கலைப்பதற்காக அங்கு செல்லப்பட்டது.
யஸார் என்ற ஒரு அடிமை பிடிபட்டார். மற்றவர்கள்
கலைந்து விட்டனர். பின்னர் இந்த அடிமையும்
விடுதலையடைந்தார்.

15. பெயர் : கர்கரத்துல் குத்ர் அல்லது பனூ ஸுலைம்.
ஹிஜ்ரீ மூன்றாம் ஆண்டு முஹர்ரம் மாதம்.
தலைவர் காலிஃபுப்னு அப்தில்லாஹில் லைதீ
ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் பனூ கத்ஃபான், பனூஸுலைம்
கோத்திரங்கள். பதினான்காம் எண்ணில் கண்டபடி
கலைக்கப்பட்ட அக்கோத்திரங்கள் மீண்டும் ஒன்று
திரளுவதாகத் தகவல்கள் வந்தபோது அவர்களைக்
கலைப்பதற்காக மீண்டும் முஸ்லிம்கள் சென்றனர்.
இப்பொழுது கைகலப்பு ஏற்பட்டது. மூன்று முஸ்லிம்கள்
ஷஹீதானார்கள். பகைவர்களிலும் சேதம் ஏற்பட்டது.
அவர்கள் கலைந்தனர்.

16. பெயர் : ஸரிய்யா முஹம்மதுப்னு மஸ்லமா
ரலியல்லாஹு தஆலா அன்ஹு
ஹிஜ்ரீ மூன்றாம் ஆண்டு ரபீ உல் அவ்வல் மாதம்.
முஸ்லிம்கள் ஐந்து பேர்கள். 5
தலைவர் முஹம்மதுப்னு மஸ்லமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் கஃபுப்னுல் அஷ்ரஃப் என்ற ஒரு யூதர். யூதர்களிலுள்ள பிரபல வியாபாரி. இவர் முஸ்லிம்களுக்கு விரோதமாக மக்களை தூண்டி விடுவதில் பிரசித்தி பெற்றவர். பத்ருப் போரில் தோல்வி அடைந்த குரைஷியரிடம் சென்று அந்தப் பழியைத் தீர்துக் கொள்ள வேண்டும் என அவர்களைத் தூண்டி விட்டுக்கொண்டிருந்தார். அவருடைய தூண்டுதலின் காரணமாக உஹதுப் போருக்கு அவர்கள் ஆயத்தமானார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கட்டளைப்படி அவருடைய பால்குடி சகோதரரான முஹம்மதுப்னு மஸ்லமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்ற கஜ்ரஜ் கோத்திரத்து அன்ஸாரி வேறு நால்வரின் துணை யுடன் அவரைக் கொன்றார்.

17. பெயர் கஸ்வத்து தீ அமர் அல்லது கஸ்வத்து கத்ஃபான் அல்லது கஸ்வத்து அன்மார்.

ஹிஜ்ரீ மூன்றாம் ஆண்டு ரபீ உல் அவ்வல் மாதம்.

முஸ்லிம்கள் நானூற்று ஐம்பது சவாரி வீரர்கள். 450

தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

பகைவர்கள் பனூ தஃலபா பனூ மஹாரிம் ஆகிய கோத்திரங்கள்.

திருமதீனாவின் மீது படையெடுப்பதற்காக இக்கோத்திரங்கள் ஒன்று திரண்டு கொண்டிருந்தன. அதனைக் கலைப்பதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் படையுடன் சென்றார்கள். இவர்கள் நஜ்த் (ரியாத்) நாட்டுத் திசையில் வாழ்பவர்கள். போர் எதுவும் நிகழவில்லை. திரும்ப வரும்போது ஓரிடத்தில் பகலில் தூங்கும் போது அஷ்ர் என்ற பெயருள்ள ஒருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாளை எடுத்து ஓங்கிக் கொண்டு இப்பொழுது என்னை விட்டு உம்மைக் காப்பாற்றுவது யார் என்று வினவினார். அல்லாஹ் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அவர் கரத்திலிருந்து வாள் கீழே

விழுந்தது. அதனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எடுத்துக்கொண்டு அதே கேள்வியை திரும்பக் கேட்டார்கள். அவர் இஸ்லாமைத் தழுவினார்.

18. பெயர் ஸரிய்யத்து கர்த்தத்.
ஹிஜ்ரீ மூன்றாம் ஆண்டு ஜமாதுல் ஆகிர் மாதம்.
கி.பி.624 செப்டம்பர் மாதம்.
முஸ்லிம்கள் நூறு பேர்கள். 100
பகைவர்கள் பனூ உமய்யா கோத்திரத்து அபூ சுஃப்யான்.
குறைஷியரின் வியாபாரக் கூட்டத்திற்கு தொல்லை கொடுப்பதுதான் நோக்கம். அதற்கு வழிகாட்டியாக வந்த பர்வத்துப்னு ஹய்யான் என்பவர் பிடிபட்டார். அவர் இஸ்லாமைத் தழுவி விடுதலையடைந்தார்.

19. பெயர் கஸ்வத்து உஹுத்.
ஹிஜ்ரீ மூன்றாம் ஆண்டு ஷவ்வால் மாதம். கி.பி.625 ஜனவரி மாதம் முஸ்லிம்கள் அறுநூற்றி ஐம்பது காலாட் படையினர். 650
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.
பகைவர்கள் இருநூறு குதிரை வீரர்கள்.2800 காலாட்

படையினர். மொத்தம் மூவாயிரம் பேர்கள்.

தலைவர் அபூசுஃப்யான்.

திருமதீனா நகருக்கு மூன்று மைல் தூரத்திலுள்ள இந்த இடத்திற்கு பகைவர்கள் மக்காவிலிருந்து வந்து விட்டனர். முஸ்லிம்கள் எதிர்த்தனர். பகைவர்கள் முப்பது பேர்கள் உயிரிழந்தனர். முஸ்லிம்களில் எழுபது பேர் உயிர் இழந்தனர். நாற்பது பேர்கள் காயமடைந்தனர். முஸ்லிம்கள் தோல்வியடைந்த போதிலும் பகைவர் பீதியடைந்து ஓடி விட்டனர்.

20. பெயர் கஸ்வத்து ஹம்ரஇல் அஸ்வத்.

ஹிஜ்ரீ மூன்றாம் ஆண்டு ஷவ்வால் மாதம் ஏழாம் நாள்.

முஸ்லிம்கள் ஐநூற்றி நாற்பது பேர்கள். 540

தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

பகைவர்கள் இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து எழுபது பேர்கள். 2970

தலைவர் அபூ சுஃப்யான்.

முதல் நாள் நடைபெற்ற உஹதுப் போரிலிருந்து ஊர் திரும்பிய பகைவர்களுக்கு மீண்டும் படை எடுக்கும் துணிச்சல் ஏற்படாதிருக்கும் பொருட்டு அவர்களை இந்த இடம் சென்று துரத்தப்பட்டது. இதில் பத்ருப் போரில்

கைதியாக இருந்த அபூ இஸ்ஸா **Abu Izza** என்ற புலவர் இனிமேல் பகைவர்களுடன் சேருவதில்லை என்று வாக்களித்து நஷ்ட ஈடு கொடுக்காமல் விடுதலை அடைந்தார். அதன் பின்னர் அமைதியாக இருக்காமல் மக்காவாசிகளைத் தூண்டிவிட்டு உஹதுப் போருக்கு ஏற்பாடு செய்ததுடன் ஒரு வீரராகவும் போருக்கு வந்தார். இங்கு அவர் முஸ்லிம்களால் கைது செய்யப்பட்டு வாக்குறுதிக்கு மாறு செய்த குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டார். அங்கிருந்து திரும்பும்போது மர்வானுடைய பாட்டனாரான முஆவிய்யத்துப்னு முஙய்யரா என்பவர் கைது செய்யப்பட்டு அவருடைய முந்தைய குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டார். முஸ்லிம்களின் குதிரைப்படையினரில் சென்ற மூவரில் இருவரைப் பகைவர்கள் பிடித்துக் கொன்று விட்டனர். போர் நிகழவில்லை.

21. பெயர் ஸரிய்யது குத்ன் அல்லது ஸரிய்யத்து அபீஸலமா (அப்துல்லாஹிப்னு அஸதினில்) மக்ஜுமி ரலியல்லாஹு தஆலா அன்ஹு

ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு முஹர்ரம் மாதம் முதல் நாள். முஸ்லிம்கள் நூற்றைம்பது பேர்கள். 150

தலைவர் அபூஸலமத்தில் (அப்துல்லாஹிப்னு

அஸதினில்) மக்ஜூமி ரலியல்லாஹு தஆலா அன்ஹு. பகைவர்கள் தல்ஹா, ஸலமா ஆகியவர்களின் தலைமையின் கீழுள்ள கொள்ளைக்காரர்கள். திருமதீனாவைக் கொள்ளையடிக்கும் நோக்கத்தில் இவ்விருவரும் தங்கள் தோழர்களை ஒன்று திரட்டிக் கொண்டிருந்தனர். இவர்களைக் கலைப்பதற்காக இவர்களின் முக்கிய இடமான குத்னு வரையில் முஸ்லிம்கள் சென்றனர். இவர்களின் வருகையை அறிந்து அவர்கள் தங்கள் முயற்சிகளைக் கைவிட்டு கலைந்தனர்.

22. பெயர் அப்துல்லாஹிப்னு உனைஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு முஹர்ரம் மாதம் ஐந்தாம் நாள் சுஃப்யான் ஹுத்லீ என்பவர் முஸ்லிம்களுக்கு விரோதமாகப் போரிட்ட மக்களை ஒன்று திரட்டிக் கொண்டிருக்கிறார் என்று கேள்விப்பட்டு அப்துல்லாஹ் இப்னு உனைஸினில் ஜுஹனீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அங்கு சென்று அவரைக் கொன்று விட்டு வந்தார். இது தனி நபர் செய்கையாகும். போர் அல்ல.

23. பெயர் ஸரிய்யா ரஜீஃ.

ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு ஸஃபர் மாதம். கி.பி.625 மே.

முஸ்லிம்கள் ஆறு பேர்கள். ௬

தலைவர், ஆஸிமுப்னு தாபித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அல்லது முர்ததுப்னு அபீ முர்தத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

பகைவர்கள் இருநூறு பேர்கள் ௨௦௦

அள்ல் காரா ஆகிய கோத்திரங்கள். ஆஸிமுப்னு தாபித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரைக் கொலை செய்தவருக்கு நூறு ஒட்டகங்களைப் பரிசு அளிப்பதாக தல்ஹாவின் மனைவி ஸலமா என்பவர் விளம்பரம் செய்திருந்தாள். இப்பரிசை அடையும் நோக்கத்துடன் இக்கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் குழு திருமதீனாவிற்கு வந்து தங்கள் கோத்திரங்களுக்கு சன்மார்க்கத்தைக் கற்றுக்கொடுக்க ஆசிரியர்கள் வேண்டுமெனக் கூறி ஆறு பேர்களை அழைத்துச் சென்றனர். வழியில் மேற்கண்ட இருநூறு பேர்கள் ஆறு பேரை தாக்கி நான்கு பேர்களைப் பிடித்து மக்காவாசிகளிடம் விற்பனை செய்து விட்டனர். அவ்விருவரையும் அவர்கள் தூக்கிலிட்டனர். ஆகவே இது போரல்ல, சதிச் செயல்.

24. பெயர் ஸரிய்யா பீர்மஊனா அல்லது ஸரிய்யா தர்ஜ்,
ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு ஸஃபர் மாதம் கி.பி.625 மே.
முஸ்லிம்கள் எழுபது பேர்கள்.
தலைவர் முன்திருப்னு அம்ர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் ஆமிருப்னு மாலிக் என்பவர்.முலாஇபுல் அஸின்னா என்றும் கூறுவர்.நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து தமது கோத்திரத்தாருக்கு இஸ்லாமைக் கற்றுக்கொடுக்க ஆசிரியர்கள் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அங்கு பிரச்சாரம் செய்வதற்காக எழுபது அறிஞர்கள் அனுப்பப்பட்டனர். அவருடைய நாட்டிற்குச் சென்றவுடன் ரஃல், தக்வான், பனூஸலிமா முதலிய கோத்திரங்கள் ஒன்று சேர்ந்து இவர்களைத் தாக்கி அறுபத்தொன்பது பேர்களைக் கொன்று விட்டனர். அம்ருப்னு உமய்யத்தல் ளம்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு எனும் ஸஹாபி ஒருவர் மட்டும் காயமடைந்து உயிர் தப்பி திரு மதீனாவிற்கு வந்து செய்தி அறிவித்தார்.

25. பெயர் ஸரிய்யத்துல் அம்ரிப்னி உமய்யத்தல் ளம்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம்.
மேற்கண்ட 24ம் எண்ணில் காயத்துடன் உயிர் தப்பி ஊ
வந்து கொண்டிருந்த அம்ருப்னு உமய்யத்ல் ளம்ரீ
ரலியல்லாஹு த ஆலா அன்ஹு வழியில் ஓரிடத்தில்
இருவர் தூங்குவதைப் பார்த்து இவர்கள் பகைவரின்
ஆட்கள் என நினைத்துக் கொன்று விட்டார். இவர்கள்
பனூ கிலாப் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இக்கொலை
தவறுதலாக நடந்தமையால் நபி ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லம் அவர்கள் நஷ்ட ஈடு அளித்தார்கள்.

26. பெயர் கஸ்வா பனூ நுளைர்.
ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம்.
கி.பி.625 ஜுன்.
திருமதீனாவில் வசித்து வந்த யூதர்களில் பனூ நுளைர்
கோத்திரத்தார் ஒப்பந்தத்திற்கு மாறாக சதி செய்வதில்
ஈடுபட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்
அவர்களையே கொலை செய்ய முயன்றதால் அவர்க
திரு மதீனாவை விட்டு அப்புறப்படுத்தப்பட்டனர். இவர்க
ஷாம் தேசம் செல்லும் வழியிலுள்ள கைபரில்
குடியேறினர்.

24. பெயர் ஸரிய்யா பீர்மஊனா அல்லது ஸரிய்யா தர்ஜ்,
ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு ஸஃபர் மாதம் கி.பி.625 மே.
முஸ்லிம்கள் எழுபது பேர்கள்.
தலைவர் முன்திருப்னு அம்ர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் ஆமிருப்னு மாலிக் என்பவர்.முலாஇபுல் அஸின்னா என்றும் கூறுவர்.நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து தமது கோத்திரத்தாருக்கு இஸ்லாமைக் கற்றுக்கொடுக்க ஆசிரியர்கள் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அங்கு பிரச்சாரம் செய்வதற்காக எழுபது அறிஞர்கள் அனுப்பப்பட்டனர். அவருடைய நாட்டிற்குச் சென்றவுடன் ரஹ்ல், தக்வான், பனூஉஸலிமா முதலிய கோத்திரங்கள் ஒன்று சேர்ந்து இவர்களைத் தாக்கி அறுபத்தொன்பது பேர்களைக் கொன்று விட்டனர். அம்ருப்னு உமய்யத்தல் ளம்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு எனும் ஸஹாபி ஒருவர் மட்டும் காயமடைந்து உயிர் தப்பி திரு மதீனாவிற்கு வந்து செய்தி அறிவித்தார்.

25. பெயர் ஸரிய்யத்துல் அம்ரிப்னி உமய்யத்தல் ளம்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம்.

மேற்கண்ட 24ம் எண்ணில் காயத்துடன் உயிர் தப்பி ஊர் வந்து கொண்டிருந்த அம்ருப்னு உமய்யத்ல் ளம்ரீ ரலியல்லாஹு த ஆலா அன்ஹு வழியில் ஓரிடத்தில் இருவர் தூங்குவதைப் பார்த்து இவர்கள் பகைவரின் ஆட்கள் என நினைத்துக் கொன்று விட்டார். இவர்கள் பனூ கிலாப் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இக்கொலை தவறுதலாக நடந்தமையால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நஷ்ட ஈடு அளித்தார்கள்.

26. பெயர் கஸ்வா பனூ நுளைர்.

ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம்.

கி.பி.625 ஜுன்.

திருமதீனாவில் வசித்து வந்த யூதர்களில் பனூ நுளைர் கோத்திரத்தார் ஒப்பந்தத்திற்கு மாறாக சதி செய்வதில் ஈடுபட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையே கொலை செய்ய முயன்றதால் அவர்கள் திரு மதீனாவை விட்டு அப்புறப்படுத்தப்பட்டனர். இவர்கள் ஷாம் தேசம் செல்லும் வழியிலுள்ள கைபரில் குடியேறினர்.

27. பெயர் கஸ்வத்து பத்ரில் உக்ரா.

ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு துல்கஃதா மாதம்.

முஸ்லிம்கள் ஆயிரத்து ஐனூற்று பத்துப் பேர்கள். 1510

தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

பகைவர்கள் இரண்டாயிரத்து ஐம்பது பேர்கள். 2050

தலைவர் அபூ சுஃப்யான்.

உஹதுப் போரில் சபதம் செய்து விட்டுச் சென்றதை நிறைவேற்றுவதற்காக அபூசுஃப்யான் திருமக்காவிலிருந்து படையெடுத்து வந்தார். இச்செய்தியை அறிந்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், படையுடன் சென்றார்கள். அபூ சுஃப்யான் லிஹ்முன், அல்லது அஸ்பான் வரையில் வந்து விட்டுத் திரும்பினார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பத்ரு வரை வந்து விட்டு சில நாட்கள் காத்திருந்த பின்னர் திரும்பினார்கள். போர் நிகழவில்லை.

28. பெயர் கஸ்வத்து தூமத்தல் ஜன்தல்.

ஹிஜ்ரீ ஐந்தாம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம்.

கி.பி. 626 ஜுலை.

முஸ்லிம்கள் ஆயிரம் பேர்கள். 1000

தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் .

பகைவர்கள் தூமத்துல் ஜன்தல்வாசிகள்.

முஸ்லிம்கள் மீது படையெடுப்பதற்காக தூமத்துல் ஜன்தல் வாசிகள் பெரும் திரளாக கூடுகிறார்கள் என்ற செய்தி கிடைத்ததன் காரணமாக இப்படையெடுப்பு நிகழ்ந்தது. வழியில் இச்செய்தி பொய் எனத் தெரிய வந்ததால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திரும்பிவிட்டார்கள். திரும்ப வருகையில் உயைனத்துப்னு ஹஸீன் என்பவருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. போர் நிகழவில்லை.

29. பெயர் கஸ்வத்து பனீ முஸ்தலக் அல்லது கஸ்வத்து முரீஸீஃ.

ஹிஜ்ரீ ஐந்தாம் ஆண்டு ஷஃபான் மாதம் மூன்றாம் நாள் கி.பி.626 செப்டம்பர்.

தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

பகைவர்கள் பனூ முஸ்தலக் கோத்திரத்துத் தலைவர் ஹாரிதுப்னு ளிர்ரார்.

பனூ முஸ்தலக் கோத்திரத்துத் தலைவரான ஹாரிது முஸ்லிம்களிடம் போரிட படை திரட்டிக் கொண்டு இருக்கிறார் என்ற செய்தியை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிந்து அதனைக் கலைத்து விடுவதற்காகப் படையுடன் சென்றார்கள். முஸ்லிம்களின் வருகையை அறிந்து மற்றவர்கள் கலைந்து விட்டனர். ஹாரிது தன் கோத்திரத்தாரை மட்டும் வைத்துக்கொண்டு எதிர்த்தார். பத்துப்பேர் கொல்லப்பட்டனர். எழுநூறுக்கும் அதிகமானவர்கள் கைதிகளாயினர். பின்னர் யாவரும் விடுதலை அடைந்தனர். ஒரு முஸ்லிம் முஸ்லிம்களாலேயே தவறுதலாகக் கொல்லப்பட்டார்.

30. பெயர் கஸ்வத்து அஹ்ஜாப் அல்லது அகழி யுத்தம்.
ஹிஜ்ரீ ஐந்தாம் ஆண்டு துல்கஃதா மாதம்.
கி.பி.627 பிப்ரவரி.
முஸ்லிம்கள் மூவாயிரம் பேர்கள். 3000
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.
பகைவர்கள் பத்தாயிரம் பேர்கள். 10,000
தலைவர் அபூ சுஃப்யான்.

திருமதீனாவைப் பகைவர்கள் தாக்கினர். அகழியை வெட்டி வைத்துப் பகைவர்களை முஸ்லிம்கள் தடுத்தனர். பல நாட்களாக முற்றுகையிடப்பட்டு பகைவர்கள் தாங்களாகக் கலைந்து சென்றனர். பகைவர்களில் பத்துப் பேர் கொல்லப்பட்டனர். முஸ்லிம்களில் அறுவர் ஷஹீதானார்கள்.

31. பெயர் ஸரிய்யா அப்துல்லாஹிப்னு அத்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

ஹிஜ்ரீ ஐந்தாம் ஆண்டு துல்கஃதா மாதம்.

முஸ்லிம்கள் ஐவர்.

தலைவர் அப்துல்லாஹிப்னு அத்தீக் அன்ஸாரி கஜ்ரஜீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

பகைவர்கள் ஒருவர்.

ஸல்லாமுப்னு அபில்ஹக்கீக் என்ற யூதர்.

அகழ் யுத்தத்தைத் தூண்டிவிட்டதில் இவர் முக்கிய பங்கு வகித்தார். மீண்டும் போர் ஏற்படுவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அப்துல்லாஹிப்னு அபில் ஹக்கீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு தம் துணைவர்களுடன் சென்று இவரைக் கொன்றார்.

32. பெயர். கஸ்வா பனூ குறைளா
ஹிஜ்ரீ ஐந்தாம் ஆண்டு. துல்ஹஜ் மாதம்.
கி.பி.627 ஏப்ரல்.
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.
பகைவர்கள் பனூ குறைளா வகுப்பு யூதர்கள்.
ஒப்பந்தத்தை மீறிக் கலகம் செய்ததற்காக பனூ குறைளா வகுப்பு யூதர்கள் முற்றுகையிடப்பட்டனர். இரு கட்சியும் ஏற்றுக் கொண்ட பஞ்சாயத்துக்கு இணங்கும் நிபந்தனையின் காரணமாக முற்றுகை அகற்றப்பட்டது. பஞ்சாயத்துத் தீர்ப்புப்படி நானூறு பேர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இருநூறு பேர்கள் கைதிகளாயினர். முஸ்லிம்களில் நால்வர் மரணம் அடைந்தனர்.

33. பெயர் ஸரிய்யத்து கர்த்தா.
ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு. முஹர்ரம் மாதம்.
முஸ்லிம்கள் முப்பது பேர்கள். 30
தலைவர் முஹம்மதுப்னு மஸ்லமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் இருபது பேர்கள். 20
தலைவர். துமாமத்துப்னு உதால்.

துமாமத்துப்னு உதால் மதீனாவின் திசையில் தன் தோழர்களுடன் வருவதைப் பார்த்து அவரை முஹம்மதுப்னு மஸ்லமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு கைது செய்து கொண்டு வந்தார். திருமதீனாவில் மூன்று அல்லது நான்கு நாட்கள் கைதியாக இருந்து விடுதலை அடைந்தார். அதே தினத்தில் இஸ்லாமைத் தழுவினார்.

34. பெயர் கஸ்வத்து பனீ லஹ்யான்.
ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு. ரபீஉல் அவ்வல் மாதம்.
கி.பி.627 ஜுன் ஜுலை மாதம்.
முஸ்லிம்கள் இருநூறு வாகனக்காரர்கள். ௨௦௦
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.
பகைவர்கள் ஹுதைல் கோத்திரத்துக் கிளையான பனூ லஹ்யான் கோத்திரம்.
23 வது இலக்கத்தில் குறிப்பிட்டபடி சன்மார்க்க அறிஞர்களை ஏமாற்றி அழைத்துச் சென்று கொலை செய்ததற்காக ரஜீஹ் என்ற ஊரார் மீது படையெடுக்கப் பட்டது. அவர்கள் தப்பி ஓடிவிட்டனர். ஆதலால், தாக்குதல் எதுவும் நிகழவில்லை.

35. பெயர். கஸ்வத்து தீ கர்தா அல்லது காபா.
ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ரபீஉல் ஆகிர் மாதம்.
கி.பி.627 ஜுலை.
முஸ்லிம்கள் ஐனூறு பேர்கள். 500
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.
பகைவர்கள் பனூ கத்ஃபான் கோத்திரத்து வாகனக்காரர்கள்.
தலைவர் உஜனத் பஜாரீ. இவர்கள் கொள்ளைக்காரர்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஒட்டகங்களை ஓட்டிக் கொண்டு அதற்குக் காவலாக இருந்த தர்இப்னு அபீதர்ரில் கிபாரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரைக் கொன்று விட்டு அவருடைய மனைவி லைலாவையும் அழைத்துக் கொண்டு சென்றனர். அந்தப் பெண்ணையும் ஒட்டகங்களையும் மீட்பதற்காக முஸ்லிம்கள் சென்றனர். அவர்களுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் சென்றார்கள். கொள்ளைக்காரர்களிடம் இருந்து யாவும் மீட்கப்பட்டன. அவர்களில் ஒருவர் கொல்லப்பட்டார்.

36. பெயர் ஸரிய்யா உக்காஷத்திப்னு மிஹ்ஸன் அல்லது

கம்ர்

ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம்

முஸ்லிம்கள் நாற்பது பேர்கள். 40

தலைவர் உக்காஷத்திப்னு மிஹ்ஸன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பகைவர்கள் பனூஅஸத் கோத்திரத்தார்.

திருமதீனாவின் மீது படையெடுக்க பகைவர்கள் ஒன்று திரண்டு கொண்டிருந்தனர். அவர்களைக் களைப்ப தற்காக இப்படையெடுப்பு நிகழ்ந்தது. பகைவர்கள் கலைந்தனர். போர் நடைபெறவில்லை.

37. பெயர் ஸரிய்யா தில் கஸ்ஸா,

ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ரபீஉல் ஆகிர் மாதம்.

கி.பி.627 ஆகஸ்ட்.

முஸ்லிம்கள் பத்துப்பேர்கள், 10

தலைவர் முஹம்மதுப்னு மஸ்லமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பகைவர்கள் நூறு பேர்கள், 100

பனூதஃலபா கோத்திரத்தார். சன்மார்க்கப்போதனைக்கு என பத்து அறிஞர்களை அழைத்துக் கொண்டு போய் ஒன்பது பேர்களைக் கொன்று விட்டனர். முஹம்மதுப்னு

மஸ்லமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஒருவர் மட்டும் காயமடைந்து உயிர் தப்பினார்.

38. பெயர். ஸரிய்யா பனூ தஃலபா,
ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு, ரபீஉல் ஆகிர் மாதம்,
முஸ்லிம்கள் நாற்பது பேர். 40
தலைவர் அபூ உபைதத்துப்னுல் ஜர்ராஹ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் பனூ தஃலபா கோத்திரத்தார்.
37 வது எண்ணில் கண்ட சதிக்குப் பழி வாங்க அனுப்பப்பட்டார். பகைவர்கள் ஓடிவிட்டனர். ஒருவர் பிடிபட்டார். அவர் இஸ்லாமைத் தழுவியதால் விடுதலை அடைந்தார்.

39. பெயர் ஸரிய்யா ஜமூம்,
ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ரபீஉல் ஆகிர் மாதம்.
கி.பி.627 செப்டம்பர்.
தலைவர் ஜைதுப்னு ஹாரிதா ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் பனூ ஸுலைம் கோத்திரத்தார்.
பனூ ஸுலைம் கோத்திரத்தார் படை திரட்டுவதாகக் கேள்விப்பட்டு அவர்களைக் கலைப்பதற்காக ஜைதுப்னு ஹாரிதா ரலியல்லாஹு தஆலா அன்ஹு தலைமையின்

கீழ் சிலர் அனுப்பப்பட்டனர். சிலர் கைது செய்யப்பட்டுக் கொண்டு வரப்பட்டனர். பின்னர் விடுதலை அடைந்தனர்.

40. பெயர். ஸரிய்யத்து தர்ப் அல்லது துர்க்.
ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ஜமாதுல் ஆகிர் மாதம்.
கி.பி.627 செப்டம்பர்.
முஸ்லிம்கள் பதினைந்து பேர்கள். 15
தலைவர் ஜைதுப்னு ஹாரிதா ரலியல்லாஹு தஆலா அன்ஹு.
பகைவர்கள் பனூ தஃலபா கோத்திரத்தார்.
37-வது நம்பரில் நடந்த சம்பவத்திற்காக அவர்களைத் தண்டிக்கும் பொருட்டு இவர்கள் அனுப்பப்பட்டனர். பகைவர்கள் ஓடி விட்டதால் தாக்குதலின்றி திரும்பி வந்தனர்.

41. பெயர் ஸரிய்யத்து வாதியுல் குரா, ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு, ரஜபு மாதம்,
கி.பி.627 அக்டோபர்.
முஸ்லிம்கள் பன்னிரெண்டு பேர்கள். 12
தலைவர் ஜைதுப்னு ஹாரிதா ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் வாதியுல் குராவில் வசிப்பவர்கள்.

இவர்கள் ரோந்துக்காகச் சென்றனர். எதிர்பாராவண்ணம் பகைவர்கள் திடீர்த்தாக்குதலை நடத்தியதால் முஸ்லிம்களில் ஒன்பது பேர்கள் மரணமடைந்தார்கள். ஒருவர் காயமடைந்தார்.

42. பெயர். ஸரிய்யத்து தூமத்தில் ஜன்தல்
ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ஷஃபான் மாதம்.
கி.பி.627 நவம்பர்.
முஸ்லிம்கள் எழுநூறு பேர்கள். 700
தலைவர் அபதுர் ரஹ்மானிப்னு அவ்ஃபினில் கர்ஷி ரலியல்லாஹு தஆலா அன்ஹு.
பகைவர்கள் பனூ கல்ப் கோத்திரத்தார்.
இவர்கள் குறிப்பிட்ட இடம் சென்று மூன்று நாட்கள் தங்கியிருந்து உபதேசம் செய்தனர். அவர்களின் தலைவர் இஸ்லாமைத் தழுவினார். மற்றவர்களும் சேர்ந்தனர். இஸ்லாம் இப்பிரதேசத்தில் ஏராளமாகப் பரவிற்று. போர் நடைபெறவில்லை.

43. பெயர். ஸரிய்யத்து ஃபிதக்,
ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ஷஃபான் மாதம்.
முஸ்லிம்கள் நூறு பேர்கள். 100
தலைவர் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு.

பகைவர்கள் பனூ ஸஃப்திப்னி பனீபக்ர் கோத்திரத்தார். போருக்குத் தூண்டி விடுவதாகவும் அவர்களுக்கு உதவி செய்வதாக வாக்களித்திருப்பதாகவும் செய்தி வந்தது. அவர்களிடம் சென்று ஆர்ப்பாட்டம் செய்வதற்காக முஸ்லிம்கள் அனுப்பப்பட்டனர். பகைவர்கள் ஓடிவிட்டனர். போர் நடைபெறவில்லை.

44. பெயர். ஸரிய்யத்து உம்மி கிர்ஃபா,
ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ரமலான் மாதம்,
தலைவர் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.
பகைவர்கள் பஜாரா கோத்திரத்தார்.
தலைவர் உம்மு கர்பா.
ஜைதுப்னு ஹாரிதா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் தலைமையில் ஷாம் தேசத்திற்கு வியாபாரக் கூட்டம் சென்றது. அதனை பஜாராக் கோத்திரத்தார் கொள்ளையடித்து எல்லாப் பொருட்களையும் பிடுங்கிக் கொண்டனர். ஜைதுப்னு ஹாரிதா ரலியல்லாஹு தஆலா அன்ஹு திரும்ப வந்து தகவல் கொடுத்தார். எனவே, அவர்களைத் தண்டிக்க ஒரு கூட்டம் சென்றது. அதில் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹுவும்

பொருட்களைக் கொள்ளை கொடுத்த ஜைதுப்னு ஹாரிதா ரலியல்லாஹு தஆலா அன்ஹுவும் சென்றனர். போர் நடந்தது. அக்கூட்டத்தின் தலைவி உம்மு கிர்பாவும் அவரின் சகோதரியும் பிடிபட்டனர். மற்றவர்கள் உயிர் தப்பி ஓடிவிட்டனர் என்ற விபரம் ஸஹீஹு முஸ்லிமில் காணப்படுகிறது. இதைப் பற்றிய இதர விபரங்களை எம்மால் எழுதப்பட்ட ஹளரத் முஹம்மது ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இரண்டாம் பாகத்தில் காண்க.

45. பெயர் ஸரிய்யத்து அப்தில்லாஹிப்னு ரவாஹா ரலியல்லாஹு தஆலா அன்ஹு
ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ஷவ்வால் மாதம்
கி.பி.628 ஜனவரி.
முஸ்லிம்கள் முப்பது பேர்கள். 30
தலைவர் அப்துல்லாஹிப்னு ரவாஹா ரலியல்லாஹு தஆலா அன்ஹு.
பகைவர்கள் முப்பது பேர்கள். 30
தலைவர் உஸ்யருப்னு ரிஜாம்.
உஸ்யருப்னு ரிஜாம் என்பவரை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவருடைய கோத்திரத்துத் தலைவராக அங்கீகரித்தார்கள்.

அவருக்கு அப்பதவியை அளிப்பதற்காக அப்துல்லாஹிப்னு ரவாஹா ரலியல்லாஹு தஆலா அன்ஹு முப்பது முஸ்லிம்களுடன் சென்று அழைத்து வரும் போது இரண்டு கட்சியினரும் தவறாக எண்ணிப் போரிட்டனர். இதில் அவரும் அவருடன் வந்த முப்பது யூதர்களும் கொல்லப்பட்டனர். முஸ்லிம்களில் ஒருவர் காயமடைந்தார்.

46. பெயர். ஸரிய்யா உரைஸிய்யா.
ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ஷவ்வால் மாதம்,
முஸ்லிம்கள் இருபது பேர்கள். ௨0
தலைவர் குர்ஜுப்னு ஜாபிருல் பிஹ்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள்.
பகைவர்கள் அக்தல் உரைனா கோத்திரங்களைச் சேர்ந்த சிலர்.
இவர்கள் நோயாளிகளாக வந்தனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஒட்டகை மந்தை இருக்குமிடத்தில் தங்க வைத்து சிகிச்சையளிக்கப்பட்டது. சில் நாட்களுக்குப் பின்னர் குணமடைந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஒட்டகை மந்தைக் காவலாளியைக் கொன்று விட்டு ஒட்டகங்களை ஓட்டிச் சென்றனர். இவர்களை குர்ஜுப்னு

ஜாபிரில் பின்றரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு சிலருடன் சென்று கைது செய்து ஒட்டகங்களையும் திரும்பக் கொண்டு வந்தார். இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

47. பெயர் ஸரிய்யா அம்ருப்னு உமய்யா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு ஷவ்வால் மாதம்,

தலைவர் அம்ருப்னு உமய்யா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொல்வதற்காக திருமக்காவிலிருந்து திருமதீனாவிற்கு வந்தார். வந்த இடத்தில் இஸ்லாமைத் தழுவினார். சில நாட்களுக்குப் பின்னர் மீண்டும் திருமக்கா சென்று இஸ்லாமியப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார். அபூ ஸுஃப்யானைக் கொலை செய்து விடுமாறு இவருக்கு கட்டளையிட்டு அனுப்பியதாக சன்மார்க்க விரோதிகள் எழுதி இருக்கின்றனர். இதற்கு வரலாற்றில் ஆதாரமில்லை.

48. பெயர் கஜ்வத்து ஹுதைபிய்யா

ஹிஜ்ரீ ஆறாம் அண்டு ஷவ்வால் மாதம்

கி.பி.628 பிப்ரவரி.

முஸ்லிம்கள் ஆயிரத்து நானூறு பேர்கள். 1400

தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

பகைவர்கள் மக்காவாசிகள்.

தலைவர் ஸஹ்லுப்னு அம்ர்.

உம்ராச் செய்வதற்காக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்லிம்களுடன் சென்றார்கள். ஹுதைபிய்யா என்ற இடத்தில் குரைஷியருக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் பத்து வருடப் போர் ஓய்வு ஒப்பந்தம் ஏற்பட்டது. உம்ராச் செய்யாமல் திரும்ப வந்தார்கள்.

49. பெயர் கஸ்வத்து கைபர்.

ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு முஹர்ரம் மாதம்

கி.பி.628 ஆகஸ்டு.

முஸ்லிம்கள் ஆயிரத்து நானூறு பேர்கள். 1400

தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.

பகைவர்கள் பத்தாயிரம் யூதர்கள். 10,000

போரில் முஸ்லிம்களில் 18 பேர்கள் ஷஹீதானார்கள். 50

பேர் காயமடைந்தனர். பகைவர்களில் 93 பேர் கொல்லப் பட்டனர். பரிபூரண வெற்றி ஏற்பட்டது. யூதர்களின் விஷமம் ஒடுக்கப்பட்டது.

50. பெயர் கஸ்வத்து வாதியில் குர்ரா.
ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு முஹர்ரம் மாதம்.
முஸ்லிம்கள் ஆயிரத்து முன்னூற்றி எண்பத்தி இரண்டு பேர்கள். 1382
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.
பகைவர்கள் வாதியுல் குர்ராவில் வாழ்ந்த யூதர்கள்.
கைபரிலிருந்து திரும்பும் போது இங்குள்ள யூதர்கள் எதிர்த்தனர். சிறு கைகலப்பு ஏற்பட்டது. முஸ்லிம்களில் ஒருவர் மரணமடைந்தார். பகைவரில் பதினோரு பேர் கொல்லப்பட்ட பின்னர் பணிந்தனர். இங்கு முஸ்லிம்கள் இருக்கும் போது தீமா வாசிகள் வந்து சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

51. பெயர் கஜ்வத்து தாத்திர்ரிக்கா,
ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு முஹர்ரம் மாதம்,
முஸ்லிம்கள் நானூறு பேர்கள், 400
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்கள் ,
பகைவர்கள் பனு கத்ஃபான், பனூ அன்மார், பனூ தஃலபா, பனூ மகாரிபு.
முஸ்லிம்களைத் தாக்குவதற்காக அவர்கள் ஒன்று திரண்டு கொண்டிருந்தனர். அவர்கள் வாழும் பிரதேசங்களிலெல்லாம் சென்று ஆர்ப்பாட்டம் செய்ததின் காரணமாக கலைந்தனர். போர் நடைபெறவில்லை.

52. பெயர் ஸரிய்யத்து ஈஸ்,
ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு ஸஃபர் மாதம்,
முஸ்லிம்கள் அபூஜன்தல் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, அபூபுஸைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் குரைஷித் தாவளக்காரர்கள்.
இவர்கள் ஷாம் தேசம் செல்லும் வழியில் ஒரு மலையின் மீது தங்கியிருந்து கொண்டு இஸ்லாமியப் பிரச்சாரம் செய்து ஒரு பெருங் கூட்டமாயினர். குரைஷியரின் வியாபாரக் கூட்டத்தைக் கொள்ளையிட்டனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு குரைஷியர் தகவல் தெரிவித்ததன் காரணமாக கொள்ளையிடப்பட்ட பொருட்களைத் திரும்பக் கொடுக்கச் செய்ததுடன் அபூ ஜன்தல் ரலியல்லாஹு தஆலா

அன்ஹு முதலியவர்கள் அங்கிருந்து திருமதீனாவிற்கு அழைத்துக் கொள்ளப்பட்டனர்.

53. பெயர் ஸரிய்யத்து குதைர்.

ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு ஸஃபர் மாதம்.

முஸ்லிம்கள் அறுபது வாகனக்காரர்கள். ௬0

தலைவர் காலிபுப்னு அப்தில்லாஹில்லைதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

பகைவர்கள் பனூ லும்மூஹ் கோத்திரத்தார்.

புஷைருப்னு ஸுவைத் ரலியல்லாஹு தஆலா அன்ஹுவின் தோழர்களை பனூ லும்மூஹ் கோத்திரத்தார் கொன்று விட்டனர். அவர்களைத் தண்டிப்பதற்காக இவர்கள் அனுப்பப்பட்டனர். சிறு கைகலப்பு நடந்தது. சேதம் இல்லை.

54. பெயர். ஸரிய்யத்து ஃபிதக்.

ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு, ஸஃபர் மாதம்,

முஸ்லிம்கள் காலிபுப்னு அப்தில்லாஹில்லைதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பகைவர்கள் ஃபிதக் வாசிகள்,

பகைவரில் சிலருக்கு சேதம் ஏற்பட்டது.

55. பெயர் ஸரிய்யத்து ஹஸ்மா.
ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு, ஜமாதுல் அவ்வல் மாதம்,
முஸ்லிம்கள் ஐநூறு பேர்கள். 500
தலைவர் ஜைதுப்னு ஹாரிதா ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் நூற்றி இரண்டு பேர்கள். 102
தலைவர் ஹுனைது அவ்ஸில் ஜஸ்ரீ
கைஸர் சக்கிரவர்த்தியிடம் தூது சென்று திரும்பி வந்த திஹ்யத்துப்னு கலீபத்தல் கல்பீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரை ஹுனைதுப்னு அவ்ஸில் ஜஸ்ரீ கொள்ளையடித்து வழிப்பறி செய்தார். அவரைத் தண்டிப்பதற்காக படை அனுப்பப்பட்டது. போர் நடந்தது. ஹுனைதும் அவர் புதல்வரும் கொல்லப்பட்டனர். மற்றவர்கள் மன்னிப்புக் கேட்டதன் காரணமாக விடுதலை செய்யப்பட்டனர்.

56. பெயர். ஸரிய்யத்து தர்பா,
ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு கி.பி.628
முஸ்லிம்கள் 30 முப்பது பேர்கள்,
தலைவர் உமர் ஃபாரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் தர்பா வாசிகள்,

திருமக்காவிற்கு இரண்டு மன்ஜில் தூரத்திலுள்ள இவர்கள் பனூ கத்ஃபான் கோத்திரத்தாருடன் சேர்ந்து (51 பேர்) போருக்கு வந்தனர். இவர்களை எச்சரிக்கை செய்வதற்காக இப்படையெடுப்பு நிகழ்ந்தது. வெறும் ஆர்ப்பாட்டம்தான் செய்யப்பட்டது. பகைவர்கள் கலைந்தனர்.

57. பெயர். ஸரிய்யத்து பனூ கிலாப்,
ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு,
முஸ்லிம்கள் தலைவர் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு,
பகைவர்கள் பனூ மஹாரிப் பனூ அன்மார் ஆகிய கோத்திரங்களுடன் சேர்ந்திருந்தவர்கள். முஸ்லிம்களைத் தாக்க ஏற்பாடு செய்து கொண்டு இருந்தனர். போர் நடந்தது. பகைவரில் பலர் கைதிகள் ஆயினர். மற்றவர்கள் உயிர் தப்பி ஓடினர்.

58. பெயர் ஸரிய்யத்து முன்கஇஆ,
ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு, ரமலான் மாதம்,
முஸ்லிம்கள் காலிபுப்னு அப்தில்லாஹில்லைதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் முன்கஆ வாசிகள், கைபர் வாசிகளின் தோழர்களான இவர்களுடன் சிறிய போர் நிகழ்ந்தது. பகைவர்கள் சிதறி ஓடினர்.

59. பெயர் ஸரிய்யத்து கர்பா,
ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு, ரமலான் மாதம்,
முஸ்லிம்கள் உஸாமத்துப்னு ஜைத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு,
பகைவர்கள் கர்பா வாசிகள்,
உஸாமத்துப்னு ஜைத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு தம் துணைவர்களுடன் வந்து கொண்டிருந்த போது வழியில் ஒருவர் மலையிலிருந்து இறங்கி நேராக அவரை நோக்கி வந்தார். உஸாமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு வாளை உருவி ஓங்கினார். அவர் கலிமாவை ஓதினார். எனினும், அதை அவர் நம்பாமல் வெட்டிக் கொன்று விட்டார். இதனைநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கண்டித்ததுடன் கலிமா சொல்கிற எவரையும் கொல்லக்கூடாதென கட்டளை இட்டார்கள்.

60. பெயர் ஸரிய்யத்து பனீமுர்ரா
ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு ஷவ்வால் மாதம் ,
முஸ்லிம்கள் முப்பது பேர்கள், 30
தலைவர் புஷைருப்னு ஸஃத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் பனூ முர்ரா கோத்திரத்தார்.

கைபர் வாசிகளின் தோழர்களான இவர்களுடன் சிறிய யுத்தம் நடந்தது. முஸ்லிம்களின் தலைவர் காயம் அடைந்தார்.

61. பெயர் ஸரிய்யத்து புஷைரிப்னு ஸஃதினில் அன்ஸாரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு
ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு ஷவ்வால் மாதம்
முஸ்லிம்கள் முப்பது பேர்கள், காலாட்படையினர், 38
தலைவர் புஷைருப்னு ஸஃதினில் அன்ஸாரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் பராஜா அத்ரா கோத்திரத்தார்.
கைபர் போரில் யூதர்களுக்கு இவர்கள் உதவி புரிந்தனர். இவர்களை அச்சுறுத்த முஸ்லிம்கள் அனுப்பப்பட்டனர். ஆர்ப்பாட்டம்தான் நோக்கம். முஸ்லிம்கள் யாவரும் அம்புக் காயமடைந்தனர். பகைவரில் இருவர் கைதிகளாயினர்.

62. பெயர் ஸரிய்யத்துல் அக்ரம் இப்னு அபீ அவ்ஜா,
ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டு துல்ஹஜ்ஜு மாதம்
கி.பி.629 ஏப்ரல்.
முஸ்லிம்கள் ஐம்பது பேர்கள். 50
தலைவர் இப்னு அபில் அவ்ஜா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இஸ்லாமியப் பிரச்சாரத்திற்காகச் சென்றனர். இவர்களின் வருகையை அறிந்த பகைவர்கள் முன்னேற்பாட்டுடன் தயாராக இருந்தனர். ஆதலால், இவர்கள் சூழ்ந்து கொள்ளப்பட்டு தாக்கப்பட்டனர். தலைவர் காயம் அடைந்தார். மற்றைய யாவரும் ஷஹீதானார்கள்.

63. பெயர் ஸரிய்யத்து தாத்து அத்லஹ்,
ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு, ரபீல் அவ்வல் மாதம்,
முஸ்லிம்கள் பதினைந்து பேர்கள், 15
தலைவர் கஃபுப்னு உமைரினில் அன்ஸாரி
ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் தாத்து அத்லஹில் வசிக்கிற பனூ குஜாஆ கோத்திரத்தார்.
இங்குள்ளவர்கள் முன்னேற்பாட்டுடன் பெருங்கூட்டமாக இருந்தனர். முஸ்லிம்கள் மிகச் சொற்பம். யாவரும் ஷஹீதாகி விட்டனர். ஒருவர் மட்டும் உயிர் தப்பினார் என்று சொல்லப்படுகிறது.

64. பெயர் ஸரிய்யத்து தாத்தில் அர்க்,
ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம்
கி.பி.629 ஜுலை,
முஸ்லிம்கள் இருபத்தைந்து பேர்கள், 25

தலைவர் ஷுஜாஉ ப்னு வஹ்பினில் அஸதீ.
ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் தாத்து அர்க்கில் வாழ்கிற பனூ ஹவாஜின் கோத்திரத்தார்.

X பனூ ஹவாஜின் கோத்திரத்தார் பலமுறை பகைவருக்கு உதவி புரிந்தனர். திருமதீனாவிற்கு ஐந்து மன்ஜில் தூரத்தில் மீண்டும் ஒன்று கூடுவதாகத் தகவல் வந்தது. எனவே, அவர்களைக் கலைக்க முஸ்லிம்கள் அனுப்பப் பட்டனர். பகைவர்கள் கலைந்து சென்றனர். போர் நடைபெறவில்லை.

65. பெயர் ஸரிய்யத்து மூத்தா,
ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு, ஜமாதுல் அவ்வல் மாதம், கி.பி.629 செப்டம்பர்.
முஸ்லிம்கள் மூவாயிரம் பேர்கள். 3000
✓ தலைவர் ஜைதுப்னு ஹாரிதா ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் ஒரு லட்சம் பேர்கள். 1,00,000
தலைவர் ஷர்ஹபீ கஸ்ஸானில்
முஸ்லிம்களில் 12 பேர் ஷஹீதாயினர். எதிரிகளின் சேதம் தெரியவில்லை. இறுதியில் முஸ்லிம்கள் வெற்றி பெற்றனர்.

66. பெயர். ஸரிய்யத்து தாத்திஸ் ஸலாஸில்,
ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு, ஜமாதுல் ஆகிர் மாதம்
கி.பி.629 அக்டோபர்.
முஸ்லிம்கள் ஐநூறு பேர்கள். 500
தலைவர் அம்ருப்னுல் ஆஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் தாத்துஸ் ஸலாஸிலுள்ள பனூ குஜாஆ கோத்திரத்தார்கள்.
திருமதீனாவின் மீது படையெடுக்கும் நோக்கத்துடன் இவர்கள் ஒன்று திரண்டு கொண்டிருந்தனர். அம்ருப்னுல் ஆஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் தந்தை வழிப்பாட்டி இக்கோத்திரத்தைச் சேர்ந்தவர். ஆதலால், இப்பிரதேசத்தில் இளமையில் அவர் அங்கு வசித்தார். எனவே, அவரைத் தலைவராக நியமித்தனர். முஸ்லிம்கள் வந்து ஆர்ப்பாட்டம் செய்ததில் பகைவர்கள் கலைந்தனர்.

67. பெயர் ஸரிய்யத்து ஸைஃபுல் பஹ்ர்,
ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ரஜபு மாதம்,
கி.பி.627 நவம்பர்.
முஸ்லிம்கள் முன்னூறு பேர்கள். 300

தலைவர் அபூ உபைதத்தப்னுல் ஜர்ராஹ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பகைவர்கள் குரைஷியர்.

குரைரஷியரின் நோக்கத்தைச் சிதறடிப்பதுதான் இப்படையெடுப்பின் நோக்கம். கடற்கரைப்பக்கமாக சில நாட்கள் ரோந்து சுற்றி விட்டுத் திரும்பினர்.

68. பெயர் ஸரிய்யத்து மஹாரிப்,

ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ஷஃபான் மாதம்,

கி.பி.629 டிசம்பர்.

முஸ்லிம்கள் பதினைந்து பேர்கள், 15

தலைவர் அபூ கத்தாதா அல் அன்ஸாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பகைவர்கள் நஜ்த் தேசத்திலுள்ள ஹுராவில் வாழும் பனூ கத்ஃபான் கோத்திரத்தார்

பனூ கத்ஃபான் கோத்திரத்தார் பல முறை படையெடுத்து இருக்கின்றனர். மீண்டும் படை திரட்டிக்கொண்டிருந்தனர் இதனை உளவறிய இவர்கள் சென்றனர். பகைவர்கள் பீதியடைந்து கலைந்தனர்.

69. பெயர் கஸ்வத்து ஃபத்ஹி மக்கா,

ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ரமலான் மாதம்

கி.பி.630 ஜனவரி,

முஸ்லிம்கள் பத்தாயிரம் பேர்கள் 10,000
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,
பகைவர்கள் மக்கா வாழ் குரைஷியர்.
எதிர்ப்பின்றி மக்கா வெல்லப்பட்டது. ஓரிடத்தில் சிறிய எதிர்ப்பு ஏற்பட்டு இருவர் ஷஹீதானார்கள். பகைவரில் பன்னிரெண்டு பேர் கொல்லப்பட்டனர்.

70. பெயர் ஸரிய்யத்து காலித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு,
ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ரமலான் மாதம் 25ம் நாள்,
முஸ்லிம்கள் காலிதுப்னுல் வலீத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு மற்றும் 30 பேர்கள்.
பகைவர்கள் உஸ்ஸா என்ற விக்கிரஹம்.
பனூ கினானா கோத்திரத்தைச் சேர்ந்த இச்சிலையை காலிதுப்னுல் வலீத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு உடைத்தெறிந்தார்.

71. பெயர் ஸரிய்யத்து அம்ரிப்னில் ஆஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ரமலான் மாதம்.
முஸ்லிம்கள் அம்ருப்னுல் ஆஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பகைவர்கள் ஸுவாஉ என்ற விக்கிரஹம்.
பனூஹுதைல் கோத்திரத்திற்குச் சொந்தமான ஸுவாஉ என்ற விக்கிரஹத்தை அம்ருப்னுல் ஆஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு உடைத்தெறிந்தார்.

72. பெயர் ஸரிய்யத்து ஸஃதினில் அஷ்ஹலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு
ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ரமலான் மாதம் 24ம் நாள்
முஸ்லிம்கள் ஸஃதுப்னு ஜைதினில் அஷ்ஹலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு மற்றும் இருபது குதிரை வீரர்கள். 20
பகைவர்கள் மனாத் என்ற விக்ரஹம்.
அவ்ஸ், கஜ்ரஜ் கோத்திரங்களுக்குச் சொந்தமான மனாத் என்ற விக்கிரஹத்தை ஸஃதுப்னி அஷ்ஹலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு உடைத்தெறிந்தார்.

73. பெயர் ஸரிய்யத்து காலிதிப்னில் வலீத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ஷவ்வால் மாதம்
முஸ்லிம்கள் முன்னூற்று ஐம்பது பேர்கள். 350
தலைவர் காலிதுப்னுல் வலீத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் பனூ கினானா கோத்திரத்தார்.

இஸ்லாமியப் பிரச்சாரத்திற்காக காலிதுப்னுல் வலீத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அனுப்பப்பட்டார். பனூ கினானா கோத்திரத்தார் இஸ்லாமைத் தழுவியதை நம்பாமல் காலிதுப்னுல் வலீத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களில் தொண்ணூற்று ஐந்து பேர்களைக் கொன்று விட்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரைக் கண்டித்து விட்டு நஷ்ட ஈடு கொடுத்தார்கள்.

பெயர் கஸ்வத்து ஹுனைன் அல்லது அவ்த்தாஸ் அல்லது ஹவாஜின்.
ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ஷவ்வால் மாதம்.
கி.பி.630 பிப்ரவரி,
முஸ்லிம்கள் பன்னிரண்டாயிரம் பேர்கள்,
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்
பகைவர்கள் பனூ ஹவாஜின், பனூ தக்கீஃப், பனூ முளர் முதலியவர்கள்.
கடும் போர் நிகழ்ந்தது. முஸ்லிம்களில் ஆறு பேர் ஷஹீதானார்கள். பகைவரில் 71 பேர் கொல்லப்பட்டனர். ஆறாயிரம் பேர்கள் கைதிகளாயினர். பின்னர் அவர்கள் யாவரும் விடுதலையானார்கள்.

75. பெயர் கஸ்வத்து தாயிஃப்,
ஹிஜ்ரீ எட்டாம் ஆண்டு ஷவ்வால் மாதம்,
கி.பி.630 பிப்ரவரி.
முஸலிம்கள் பன்னிரெண்டாயிரம் பேர்,
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,
பகைவர்கள் பனூ தக்கீப் கோத்திரத்தார்.
ஒரு மாதம் முற்றுகை நடந்தது. பின்னர் முஸ்லிம்கள் முற்றுகையைக் கைவிட்டனர். பகைவர்கள் பின்னர் தாங்களாக வந்து இஸ்லாமைத் தழுவினர்.

76. பெயர் ஸரிய்யத்து உயைனத்தப்னி ஹஸீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
ஹிஜ்ரீ ஒன்பதாம் ஆண்டு முஹர்ரம் மாதம்.
கி.பி.630 ஏப்ரல்.
முஸ்லிம்கள் ஐம்பது வாகனக்காரர்கள்,
தலைவர் உயைனத்துப்னு ஹஸீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு பகைவர்கள் பனூ தமீம் கோத்திரத்தார்.
தங்களுக்குக் கீழிலுள்ள கோத்திரங்களைத் தூண்டி விட்டு வரி கொடா இயக்கத்தைத் தோற்றுவித்தனர். உயைனத்துப்னு ஹஸீன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு தம் தோழர்களுடன் சென்று அறுபத்தி இரண்டு பேர்களைக் கைது செய்தார். இயக்கம் நின்றது, பின்னர் கைதிகள் விடுதலை அடைந்தனர்.

77. பெயர் ஸரிய்யத்து குத்பத்தப்னி ஆமிர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு .
ஹிஜ்ரீ ஒன்பதாம் ஆண்டு ஸஃபர் மாதம்,
முஸ்லிம்கள் ஐம்பது பேர்கள், ௫0
தலைவர் குத்பத்துப்னு ஆமிர் ரலியல்லாஹு அன்ஹு
பகைவர்கள் கஷ்அம் கோத்திரத்தார்.
முஸ்லிம்களுக்கு விரோதமாக புரட்சி செய்ய ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். அவர்களை அடக்க மேற்கண்ட முஸ்லிம்கள் சென்றனர். போர் நடந்தது. முஸ்லிம்களில் பாதிக்கு மேல் காயமடைந்தனர். பகைவரில் பாதிக்கு மேல் கைதிகளாயினர். புரட்சி அடக்கப்பட்டது. பின்னர் அவர்கள் யாவரும் விடுதலை அடைந்தனர்.

78. பெயர் ஸரிய்யத்து ளஹ்ஹாக் கிப்னி ஸுஃப்யான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
ஹிஜ்ரீ ஒன்பதாம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம்.
முஸ்லிம்கள் ளஹ்ஹாக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு முதலியவர்கள்
பகைவர்கள் பனூ கிலாப் கோத்திரத்தார்.
இவர்கள் பிரச்சாரத்திற்காகச் சென்றனர். பகைவர்கள் முட்டுக்கட்டை போட்டனர். கலகம் வந்தது. சிறு எதிர்ப்பு இருந்தமையால் பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்கள் இதனைக் குறிப்பிடுவது இல்லை.

79. பெயர் ஸரிய்யத்து அப்தில்லாஹிப்னி ஹுதாஃபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு
ஹிஜ்ரீ ஒன்பதாம் ஆண்டு ரபீஉல் அவ்வல் மாதம்,
முஸ்லிம்கள் முன்னூறு பேர்கள். 300
தலைவர் அப்துல்லாஹிப்னு ஹுதாஃபத்தஸ்ஸஹ்மீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் கடற் கொள்ளைக்காரர்களான இவர்கள் திரு மக்காவின் மீது படையெடுக்க ஜித்தா பக்கத்தில் கடலோரமாக ஒன்று திரண்டுகொண்டிருந்தனர். முஸ்லிம் படைகளின் வருகையறிந்து கலைந்து விட்டனர்.

80. பெயர் ஸரிய்யத்து பனீ தைய்யி
ஹிஜ்ரீ ஒன்பதாம் ஆண்டு முஸ்லிம்கள் நூற்றைம்பது பேர்கள், தலைவர் அலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் பனூ தைய்யி கோத்திரத்தார்.
ஹாத்திம் தையியின் புதல்வியுட்பட பலர் கைதிகளாயினர். யாவரையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விடுதலை செய்தார்கள்.

81. பெயர் கஸ்வத்து தபூக்,
ஹிஜ்ரீ ஒன்பதாம் ஆண்டு ரஜபு மாதம்
கி.பி.630. செப்டம்பர் - அக்டோபர்.

முஸ்லிம்கள் முப்பதாயிரம் பேர்கள், 30,000
தலைவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்.
பகைவர்கள் உரோமச் சக்கரவர்த்தியான ஹிர்க்கல்.
மூத்தா போரில் ஏற்பட்ட களங்கத்தைப் போக்க திருமதீனாவின் மீது படையெடுக்க உரோமச் சக்கரவர்த்தி ஏற்பாடு செய்வதாக தெரிந்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் படையுடன் அரப் நாட்டு எல்லைப்புறம் வரையில் சென்றார்கள். போர் நடைபெறவில்லை. படையெடுப்பு நோக்கத்தை ரோமச் சக்கரவர்த்தி கைவிட்டார்.

82. பெயர் ஸரிய்யத்து தூமத்தல் ஜன்தல்,
ஹிஜ்ரீ ஒன்பதாம் ஆண்டு
கி.பி.631 ஜூன்
முஸ்லிம்கள் நானூற்று இருபது பேர்கள், 420
தலைவர் காலிதுப்னுல் வலீத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு
பகைவர்கள் தூமத்துல் ஜன்தல் அதிபதி எக்கீதர்.
தூமத்துல் ஜன்தல் அதிபர் கைது செய்யப்பட்டார். அவருடைய சகோதரர் கொல்லப்பட்டார். அவரை

விடுதலை செய்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒப்பந்தஞ் செய்து கொண்டார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவை ஹிஜ்ரத்துச் செய்ததிலிருந்து இவ்வுலகை விட்டு மறையும் வரையில் ஏறக்குறைய பதினோறு ஆண்டு காலத்தில் எண்பத்தி இரண்டு முறைகள் படையெடுக்க நேர்ந்தது. இவற்றிற்கு விளக்கம் சொல்லாமல் விட்டு வைத்தால் இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என்று சன்மார்க்க விரோதிகள் பிரச்சாரம் செய்வது சரிதான் என்று பலர் கருத நேரிடும். ஆதலால், அதனைப் பற்றிச் சிறிது விளக்குவோம்.

மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கம் 1,2,3,8,18,68 ஆகியவைகள் குரைஷியர் திடீரெனப் படையெடுப்பாரோ என்பதை அறிந்து தகவல் கொடுப்பதற்காக திருமக்கா செல்லும் வழியில் உளவு பார்க்க சிலர் அனுப்பப்பட்டனர். இலக்கம் 4,5,7,8 ஆகியவைகள் அக்கம் பக்கத்துக் கோத்திரங்களில் உபதேசம் செய்து அவர்களை சன்மார்க்க அபிமானிகளாக்கி ஒப்பந்தம் செய்வதுதான்.

இலக்கம் 42 சன்மார்க்கப் பிரச்சாரத்திற்காகவே

அனுப்பப்பட்டது.

இலக்கம் 33 முஹம்மதுப்னு மஸ்லமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு பகைவர் என நினைத்துக் கைது செய்த சம்பவம்தான். அவர் விடுதலை செய்யப்பட்டார். எனவே, அவர் இஸ்லாமைத் தழுவினார்.

சட்டப்படி இந்தியன் பினல் கோர்ட் 302-வது விதிப்படி குற்றம் செய்தோர், 395 -வது விதிப்படி கொள்ளக்குற்றம் புரிந்தோர்,396-வது விதிப்படி கொள்ளையும் கொலையும் புரிந்தோர், ஆகியவர்களைத் தண்டிப்பதற்கான நடவடிக்கைகள் இலக்கம் 6,46,47,35,55,44.21 ஆகியவைகளாகும்.

இலக்கம் 10,11,16,22,31 ஆகியவைகள் தனி நபர்களின் செய்கைகள். இந்த இருபத்தி ஓர் சம்பவங்களையும் படையெடுப்பென்றோ, போர் என்றோ கூற முடியாது.

இலக்கம் 23,24,37 ஆகியவை சமயப்பிரச்சாரகர்களை பகைவர்கள் ஏமாற்றி அழைத்துச் சென்று கொலை செய்த சம்பவங்களாகும். இச்சதிகாரர்களைத் தண்டிப்பதற்காக அனுப்பப்பட்ட சம்பவம் இலக்கம் 34,38,40 ஆகியவைகளாகும். ஆக இச்சம்பவங்களுக்கும் போர்களுக்கும் சம்பந்தமில்லை.

இலக்கம் 45,73,59,69.25 ஆகிய ஐந்து சம்பவங்கள் முஸ்லிம்களையும், முஸ்லிம் அல்லாதாரையும் முஸ்லிம்கள் தவறுதலாகக் கொன்றவைகளாகும்.

இலக்கம் 70,71,72 ஆகியவைகள் அப்பகுதியில் வாழ்ந்தவர்கள் இஸ்லாமைத் தழுவி விட்டு தங்கள் சிலைகளை இடிக்கும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க நடத்தப்பட்ட சம்பவங்கள்.

இலக்கம் 14,15, 17, 27, 28, 33, 34, 36, 38, 39, 40, 41, 43, 50, 51. 52, 53, 54, 56, 57, 58, 60, 61, 62, 63, 64, 66, 67, 68, 72, 76, 77, 81 ஆகியவைகள் பகைவரின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்துவதற்காகச் செய்யப்பட்டவைகள்.

இலக்கம் 12,23,24,26,29.32,37,80 ஆகியவைகள் ஒப்பந்தம் செய்து கொண்டவர்கள். அதனை மீறி கலகம் செய்தமையால் எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

இலக்கம் 9,12,30,49,65,69,74 ஆகிய ஏழு சம்பவங்கள்தான் உண்மையான போர்கள்.

இவற்றைக் கவனித்தால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வாள் ஆயுதத்தால் இஸ்லாமைப் பரவச் செய்தார்களா? போர்கள் மதத்தைப் பரவச் செய்வதற்காக

நிகழ்த்தப்பட்டனவா? தற்காப்பிற்காக நிகழ்த்தப்பட்டனவா? என்பதைச் சுலமாக உணர்ந்து கொள்ள முடியும்.

கோத்திரங்கள்

01. இலக்கம்
1,2,3,5,6,7,13,18,19,20,27,30,47,48,52,67,69
ஆகியவைகள் குரைஷியர் சம்பந்தப்பட்டவைகள்

02. இலக்கம்
14,15,17,28,29,35,41,46,51,56,58,59,68,77
ஆகியவைகள் பனூ கத்ஃபான் அன்மார்
கோத்திரங்களுக்குச் சம்மந்தப்பட்டவைகள்.

03. இலக்கம் 24,39,53,62 ஆகியவைகள் பனூ ஸுலைம் கோத்திரத்திற்குச் சம்பந்தப்பட்டவைகள்.

04. இலக்கம் 37,38,40,55 ஆகியவைகள் பனூ தஃலபா கோத்திரத்திற்குச் சம்மந்தப்பட்டவைகள்

05. இலக்கம் 44,54,61,63 ஆகியவைகள் பனூ பஜாரா கோத்திரங்களுக்குச் சம்பந்தப்பட்டவைகள்.

06. இலக்கம் 33,57,60,78 ஆகியவைகள் பனூ கிலாப், பனூமுர்ரா கோத்திரங்களுக்குச் சம்பந்தப்பட்டவைகள்

07. இலக்கம் 23 பனூஅஸ்ல், காரா ஆகிய கோத்திரங்களுக்குச் சம்பந்தப்பட்டவைகள்.

08. இலக்கம் 21,36,66 ஆகியவைகள் பனூ அஸத் குஜாஆ ஆகிய கோத்திரங்களுக்குச் சம்மந்தப்பட்டவைகள்.

09. இலக்கம் 24 பனூ தக்வான் கோத்திரம் சம்மந்தப்பட்டது.

10. இலக்கம் 34 பனூ லஹ்யான் கோத்திரம் சம்பந்தப்பட்டது.

11. இலக்கம் 43 பனூ ஸஃதிப்னி பக்ர் கோத்திரம் சம்பந்தப்பட்டது.

12. இலக்கம் 14 பனூ ஹவாஜின் கோத்திரம் சம்மந்தப்பட்டது

13. இலக்கம் 76 பனூ தமீம் கோத்திரம் சம்மந்தப்பட்டது.

14. இலக்கம் 74,75 ஆகியவை பனூ தக்கீப் கோத்திரம் சம்மந்தப்பட்டது.

15. இலக்கம் 12,26,32,45,49,50 ஆகியவைகள் யூதர்கள் சம்மந்தப்பட்டது.

16. இலக்கம் 65,79,80,28,42,82 ஆகியவைகள் கிறிஸ்துவர்கள் சம்மந்தப்பட்டவைகள்.

கோத்திரங்களின் சம்பந்தம் (தொடர்பு)

மேலே கண்ட விபரங்களைப் பார்ப்போர் அரப் நாட்டில் வாழ்ந்த பல கோத்திரங்களை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எதிர்த்திருக்கிறார்கள் என்றே கருதுவர். ஆனால், இவற்றின் சம்பந்தங்களை அறிந்தோர் வேறு விதமாகக் கருதுவர். இக்கோத்திரங்கள் யாவும் ஒரே மனிதரின் வம்சா வழியினரே. சுகம், துக்கம் ஆகிய இரண்டிலும் ஐக்கியமாகவே இருந்து வந்தனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 17-வது தலைமுறைப் பாட்டனார் இல்யாஸுப்னு முளர் என்பவருக்கு மூன்று புதல்வர்கள். அவர்களில் ஒருவரின் பெயர் கைஸ் அய்லான் என்பது. இவரின் சந்ததியினர்தான் பனூ கத்ஃபான், பனூ தஃலபா, பனூ முஹாரிப், பனூ அஷ்ஜஃ, பனூ ஐஸான், பனூ பஜாரா ஆகிய கோத்திரங்கள்.

மற்றொருவரின் பெயர் தாஞ்சா. இவரின் சந்ததியினர் தான் பனூ தமீம் கோத்திரத்தார்.

மூன்றாமவரின் பெயர் முத்ரிக்கா. இவரின்

சந்ததியினர்தான் பனூ அஸத், பனூ ஹூன், பனூ காரா, பனூ அள்ல், பனூ கினானா ஆகிய கோத்திரங்கள். பனூ கினானாவின் கிளைகள்தான் பனூ குஜைமா, பனூ முஸ்தலக், அல் அஹாபீஷ், குரைஷ் கோத்திரங்கள்.

ஆகவே, ஒரே பாட்டனாரின் வாரிசுகளான இவர்கள் தங்களில் ஒருவரான நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் போரிட்டுக் கொண்டனர். யூதர்கள் குரைஷியர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு ஐக்கியமானவர்கள். இக்காலத்தில் மேல்நாட்டினர் ஒப்பந்தங்களின் மூலம் அணி சேருவது போல் இவர்கள் அணி சேர்ந்தவர்கள். ஆகவே, அரப் நாட்டிலுள்ள எல்லாக் கோத்திரங்களுடனும் போரிடும் வாய்ப்பு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஏற்படவில்லை.

குரைஷியர் திருமதீனாவின் மீது படையெடுக்க விரும்பினர். திரு மக்காவிற்கும், திருமதீனாவிற்கும் இடையே பனூ கினானா கோத்திரத்தாரின் நாடு இருந்தது. அக்கோத்திரத்தாருக்கும், குரைஷியருக்கும் இடையில் நீண்ட காலமாக பகையும் துவேஷமும் இருந்தன. திருமக்காவை விட்டுப் படையுடன் சென்றிருக்கும்போது பனூ கினானா கோத்திரத்தார்கள் மக்காவில் பிரவேசித்து அதனைக்

கைப்பற்றிக் கொள்வார்களோ என்ற அச்சம் குஷரஷியருக்கு இருந்ததால் படையெடுக்கத் தயங்கிக் கொண்டிருந்தனர்.

இதனை அறிந்த பனூ கினானாவின் தலைவர் சுராக்கத்துப்னு மாலிக்கில் முத்லஜியில் கினானி என்பவர் திரு மக்காவிற்குச் சென்று குரைஷித் தலைவர்களைச் சந்தித்து தங்களுடைய பழைய பகையையும் துவேஷத்தையும் அகற்றிக் கொண்டதுடன் மதீனாவின் மீது படையெடுத்து குரைஷியரின் படை வந்தால் தன் அதிகாரத்திலுள்ள பிரதேசத்தின் வழியாக அது செல்ல இடங் கொடுப்பதாகவும், குரைஷியரின் நாட்டிற்கு ஆபத்து வராமல் பார்த்துக் கொள்வதாகவும் இயன்ற வரையில் முஸ்லிம்களுக்கு விரோதமாக குரைஷியருக்கு உதவி புரிவதாகவும் வாக்களித்து ஒப்பந்தமும் செய்து கொண்டார்.

அல்அஹாபீஷும், பனூ முஸ்தலக்கும், பனூ கினானாவின் ஒப்பந்தத்தை ஆதரித்து ஐக்கியமாகி விட்டனர். ஆதலால், முதல் போரிலேயே பனூ கினானா, பனூ முஸ்தலக், அல்அஹாபீஷ் ஆகிய மூன்று கோத்திரங்களும் முஸ்லிம்களை எதிர்த்து குரைஷியருக்கு ஆதரவளித்து விட்டன.

பனூ நள்ர், பனூ மாலிக், முதய்யிபீன் ஆகிய கோத்திரங்கள் அல்அஹாபீஷைச் சேர்ந்தவர்கள். பனூ கர்த், பனூ அவ்ன், பனூ கஃப் ஆகியவை பனுல் முஸ்தலக்கைச்

சேர்ந்தவை.

பனூ அதீ, பனூ ஹுஸைல், பனூ ஜம்ஹ், பனூ முர்ரா, பனூ ஸஹ்ம், பனூ தைம், பனூ கிலாப், பனூ ஜஹ்ரா பனூ குஸய்யி ஆகிய கோத்திரங்கள் குரைஷியருக்கு சம்பந்தப்பட்டவைகள்.

இத்தனை கோத்திரங்கள் ஒன்று சேர்ந்துதான் பத்ரு என்ற இடத்தில் முஸ்லிம்களை எதிர்த்தன. போரின் முடிவு முஸ்லிம்களுக்குச் சாதகமாக வெளியான போது குரைஷியருக்கு பூரண உதவி புரியத் தவறி விட்டேனே என்று மேற் கூறப்பட்ட சுராக்கத்துப்னு மாலிக்கில் முத்லஜீயில் வருந்தியதுடன் இதனைப் பரிகரிக்க உஹதுப் போரில் தம்மாலான சகல உதவிகளையும் பூரணமாக அளித்தார்.

உஹதுப் போருக்குச் சென்ற மூன்று ஆயிரம் போர்களில் குரைஷியரின் மொத்த எண்ணிக்கை ஆயிரம்தான். மீதியுள்ளஇரண்டாயிரம் பேர்கள் மேற்கண்ட இல்யாஸுப்னு முளர் என்பவரின் சந்ததியினர்தான்.

உஹதுப் போரில் பனூ முஸ்தலக், பனூ ஹூன் கோத்திரங்கள் குரைஷியருடன் சேர்ந்திருந்ததாக **அன்ஸாபுல் உயூன்** என்ற நூலிலும், பனூ தக்கீப் கோத்திரத்தார் சேர்ந்து

இருந்ததாக **தாரீகுல் ஹலபீ** என்ற நூலிலும், அல் அஹாபீஷ் சேர்ந்திருந்ததாக **ஸீரத்துந்நபவீ** முதலிய நூல்களிலும் எழுதப்பட்டு இருக்கிறது. ஆகவே இக்கோத்திரங்கள் யாவும் ஒன்று சேர்ந்து வந்து உஹதுப் போரில் கலந்து கொண்டதால் இவற்றை எதிரிகளாக முஸ்லிம்கள் கருதுவதில் தவறில்லை என்பது தெளிவு.

உஹதுப் போருக்குப் பின்னர் பெருந்தாக்குதல் அகழி யுத்தத்தில் ஏற்பட்டது. இப்போரில் அபூஸுஃப்யான் தலைமையில் குரைஷிகள், ஸுஃப்யானுப்னு அப்திஷ் ஷம்ஸின் தலைமையில் பனூ ஸுலைம், துலைஹத்துல் அஸதீயின் தலைமையில் பனூ அஸத், அபூமஸ்ஊதின் தலைமையில் பனூ அஷ்ஜஃ, ஹர்துப்னு அவ்ஃபின் தலைமையில், பனூ முர்ரா, உயைனத்துப்னு ஹஸீன் தலைமையில் பனூ கத்ஃபான், பனூ ஐஸ், பனூ திய்யான், பனூ அஷ்ராஉ, பனூ ஸஃத், பனூ ஹஸ்ராஉ, பனூ ஷபீஃ, பனூ ஹஜ்ஜாஜ், பனூ பஜாரா கோத்திரங்கள், ஹுய்யுப்னு அக்தபின் தலைமையில் கைபர் அதன் சுற்றுப்புரம், ஃபிதக், ஜம்வாதியுல்குரா, தீமாஉ ஆகிய இடங்களிலுள்ள எழு நூறு யூதர்கள், ஆமிருப்னு துபைலின் தலைமையில் ஹவாஜின் கோத்திரம் ஆகியவைகள் போர்க்களம் வந்தன. திரு மதீனாவிலுள்ள பனூ குரைளா

கோத்திரத்து யூதர்கள் ஆயுதங்கள் புகலிடங்கள் முதலியன கொடுத்து அப்பெரும் படைக்கு உதவினர்.

இக்கோத்திரங்கள் யாவும் ஒன்று திரண்டு வந்து திருமதீனாவை முற்றுகையிட்டதன் மூலம் முஸ்லிம்களின் மீது தங்கள் பகைமையை பகிரங்கமாகக் காட்டிக் கொண்டன. ஆகவே, போரை முதலாவதாகக் துவக்கியவர்கள் இக்கோத்திரங்களேயன்றி முஸ்லிம்களல்லர். இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்ததால்தான் இக்கோத்திரங்கள் வாழும் நாடுகளுக்கு முஸ்லிம்களின் சிறு படைகள் சென்று ஆர்ப்பாட்டம் செய்ய நேர்ந்தது. திருமக்கா, ஹுனைன், தாயிஃப் முதலிய இடங்களின் மீது முஸ்லிம்கள் படையெடுத்துச் சென்றதற்கும் இதுவே காரணமாகும்.

முஸ்லிம்கள் செய்த போர்களில் எதுவும் தானாகச் சென்று செய்த போர்களல்ல. தற்காப்பு யுத்தம்தான் என்பதை இப்புள்ளி விபரங்களிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

சேதங்கள்

முஸ்லிம்களில் கைதி 1, காயமடைந்தோர் 127, கொல்லப்பட்டோர் 259, ஆக மொத்தம் 387.

பகைவரில் கைதிகள் 6564, கொல்லப்பட்டோர் 759.

ஆக மொத்தம் 7323. காயமடைந்தோர் எண்ணிக்கை கிடைக்கவில்லை. இரண்டு தரப்பிலும் சேர்த்து கைதிகள் 6565. காயமடைந்தோர் 127, கொல்லப்பட்டோர் 1018, ஆக மொத்தம் 7710.

ஏறத்தாழ பத்து வருட காலத்தில் நடைபெற்ற எண்பத்திரண்டு போர்களில் இரு தரப்பிலும் சேர்ந்து ஏற்பட்ட மொத்த உயிர் உடற் சேதங்கள் இவ்வளவுதான். இதுதானா அரப் நாடு முழுவதையும் நிர்ப்பந்தப்படுத்தி இஸ்லாமைத் தழுவச் செய்தது என்பதைச் சிந்திக்க வேண்டும்.

நம் நாட்டில் சுதந்திரப் போராட்டம் நடந்த காலத்தில் உயிர் துறந்தவர், தூக்கு மேடை ஏறியவர், சிறைத் தண்டனை அடைந்தவர் ஆகியோரின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இஸ்லாமிய யுத்தங்களின் தரம் தெரியவரும். ஆனால், இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு சாத்வீகப் போர் என்றும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் போராட்டத்திற்கு பலாத்கார யுத்தம் என்றும் கூறுவோர் நீதியை விட்டு எவ்வளவு தூரம் விலகிச் சென்றிருக்கின்றனர் என்பதை உலக மக்கள் உணர்வார்களாக.

இந்தியப் பிரதமர் காலஞ்சென்ற பண்டித ஜவஹர்லால் நேரு இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்தியாவை ஆட்சி

புரிந்து கொண்டிருந்த ஆங்கில அரசால் தண்டிக்கப்பட்டு டேராடூன் சிறையில் இருந்தார். அப்போது தமது புதல்வி இந்திராவுக்கு எழுதிய (12.04.1933ம் தேதியிட்ட) கடிதத்தில் கடந்த 1912ல் ஆரம்பமாகி 1918ம் வருடத்தில் முடிவடைந்த ஐரோப்பிய யுத்தத்தில் போரில் மாண்டவர்கள் என்று நிச்சயமாகத் தெரிந்தவர்கள் ஒரு கோடிப் பேர். போரில் மாண்டு விட்டனர் என்று கருதப்படுவோர்கள் 30 லட்சம். . போர் வீரர்களாக இல்லாமல் சிவிலியன்களாக இருந்த மக்களில் மாண்டவர் 1.30 லட்சம். யுத்தத்தால் விதவைகளான பெண்கள்50 லட்சம் பேர். அகதிகள் ஒரு கோடிப் பேர், போர்ச் செலவு, ஜெர்மன்கட்சிக்கு 1500 கோடிக்கு சற்று அதிகம் என்று எழுதியுள்ளர். இப்புள்ளி விபரம் சிறைக்கூடத்திலிருந்து எழுதியதால் ரிக்கார்டைப் பார்த்து எழுதி இருக்க முடியாது. ஆதலால், இதில் சொற்ப வித்தியாசம் இருக்கக் கூடும். எவ்வாறாயினும் பொறுப்பு வாய்ந்த ஒரு பெரும் தலைவர் எழுதியது. இவ்விபரம் உலகச் சரித்திரம் என்ற பெயரில் வெளியிடப்பட்ட புத்தகம் 3ம் பாகம், 68ம் பக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

நான்கு வருட காலம் நடந்த இச்சேத விபரத்துடன் பத்து வருடங்களுக்கு அதிகமாக நடந்த இஸ்லாமிய போராட்டத்தில் மேற்கண்ட புள்ளி விபரத்தையும் ஒப்பிட்டால் இஸ்லாமிய போராட்டத்திற்கு போர் என்ற பெயரைக் கொடுப்பது கூட சரியில்லை என்றே தோன்றும்.

ஐரோப்பிய முதல் உலகப் போரின் மேற்கண்ட சேதத்தை மேற்படி இரண்டாவது உலகப் போரின் சேதத்துடன் சீர்தூக்கிப் பார்த்தால் துரும்புக்கும் தூணுக்கும் இடையேயுள்ள அவ்வளவு வித்தியாசம் இருக்கும். அக்கடிதத்தை நேருஜி எழுதும் பொழுது இரண்டாவது உலகப் போர் நடைபெறவில்லை. எனவே, அந்த விபரத்தை அவர் தமது புதல்விக்கு தெரிவிக்கவில்லை.

முஸ்லிம்களிடம் சிக்கிய 6564 கைதிகளில் ஹுனைன் போரில் சிக்கியவர்கள் 6000 பேர்கள். இவர்கள் யாவரும் நிபந்தனையின்றி விடுதலை ஆனார்கள். எஞ்சியுள்ள 564 கைதிகளில் 347 பேர் விடுதலை அடைந்தனர். இருவர் மட்டும் அவர்களின் முந்தைய குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டார்கள். மீதியுள்ள 215 பேர்களைப் பற்றி தக்வல் கிடைக்கவில்லை. இவர்கள் இஸ்லாமைத் தழுவி முஸ்லிம்களிடம் சேர்ந்து ஐக்கியமாகி விட்டிருக்கக்கூடும்.

பிரான்க, அமெரிக்கா ஆகிய நாடுகளில் குடியரசை ஏற்படுத்திய போதும், இங்கிலாந்தில் பாராளுமன்ற ஆட்சியை ஏற்படுத்திய போதும் ஏற்பட்டசேதங்கள் எத்தனை? இதைத்தவிர கிறிஸ்துவர்களின் பரிசுத்த சபைகளின் தீர்ப்பால் கொல்லப்பட்ட கிறிஸ்துவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே முப்பது லட்சம் என்று சொல்லப்படுகிறது. ஜான் டெவன் போர்ட் என்பவரால் அப்பாலாஜி ஆப் முஹம்மது என்ற பெயரில் எழுதப்பட்ட

ஆங்கில நூலில் ஸ்பெயின் அரசாங்கம் மட்டும் மூன்று லட்சத்து பத்தாயிரம் கிறிஸ்துவர்களைக் கொன்றதாகவும் இவர்களில் இருபத்தி இரண்டாயிரம்பேர் நெருப்பில் தள்ளப்பட்டனர் என்றும் எழுதப்பட்டிருக்கிறது.

பிரான்சைப் பார்க்கினும் இரண்டு மடங்கு பரப்பளவுள்ள அரப் நாட்டில் பன்னூறு வருடங்களாக காட்டுமிராண்டித்தன வாழ்க்கையை நடத்தி வந்த அரபியரைத் திருத்தி நாகரீக உலகின் வழிகாட்டிகளாகவும், முன்மாதிரிகளாகவும் அவர்களை மாற்றி அமைத்ததில் 1012 பேர்கள் உயிரிழந்தனர் என்றால் போராட்டம் எவ்வளவு புனிதமாக இருந்திருக்க வேண்டும் என்பதை மக்கள் ஆராய்ந்து உணர்வார்களாக.

(ஷுஹதாக்கள்)

சன்மார்க்கத்திற்காக உயிர்த்தியாகம் செய்தவர்கள்

போர் நினைவுச் சின்னங்களை ஏற்படுத்துவது வென்ற நாடுகளிலும், தோற்ற நாடுகளிலும் வழக்கமாக இருக்கிறது. போரில் உயிர் துறந்தவர்களின் பெயர்களை பெரும் பெரும் ஸ்தூபிகளைக் கட்டி அவற்றில் எழுதி வைப்பதும், உயிர் நீத்தவர்களின் பெயர் தெரியாவிடில் பெயர் தெரியாத வீரர்களின் நினைவுச் சின்னம் என்று நினைவுச்சின்னங்கள் எழுப்புவதும்

வருடந்தோறும் அந்தந்த இடங்களில் அவர்களுக்கு இராணுவ மரியாதை செய்வதும் வழக்கமாக இருக்கிறது. நாட்டிற்காகவோ, சமூகத்திற்காகவோ தங்களை அர்ப்பணம் செய்தவர்களை கௌரவிப்பது உலகில் எங்கும் நடைபெறும் வழக்கமாகும். ஆனால், அவர்களை கௌரவிக்கும் முறை நாட்டுக்கு நாடும், சமூகத்திற்கு சமூகமும் வித்தியாசப்பட்டிருக்கலாம். ஒன்றுக்கொன்று முரணாகவும் இருக்கலாம். இவ்விஷயங்களை மதச் சட்டம் தெளிவாக விளக்கும். இங்குள்ள பிரச்சனை நாட்டுக்கோ, சமூகத்திற்கோ உழைத்து உயிர் கொடுத்தவர்களை உலகம் கௌரவிக்கும் போது சன்மார்க்கத்தை நிலை நிறுத்தும் முயற்சியில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன்னிலையிலும் அவர்கள் உலகில் வாழ்ந்த காலத்திலும் தங்கள் உயிர்களை தத்தம் செய்தவர்களை முஸ்லிம்கள் கௌரவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்களை எப்படி கௌரவிக்க வேண்டும் என்ற விபரத்தை சன்மார்க்கச் சட்ட நூல்களில் பார்த்து அவற்றில் சொல்லப்பட்டிருப்பதைத் தழுவி முஸ்லிம்கள் நடந்து கொள்ள வேண்டும்.

இந்த இடத்தில் எந்தெந்தப் போரில் யார் யார் உயிரைத் தியாகம் செய்து சன்மார்க்கச் சட்டப்படி ஷஹீதானார்கள் என்ற விவரம் தரப்படுகிறது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களின் சரித்திர நூல்களில் பெரும்பாலானவை இவ்விபரங்களைத் தரவில்லை. என்றாலும், இந்தியாவிலுள்ள பாட்டியாலா சமஸ்தானத்தில் முதல் வகுப்பு நீதிபதியாக இருந்த அல்ஹாஜ் காஜீ முகம்மது சுலைமான் ஸல்மான் மன்ஸூர் பூரி மர்ஹூம் அவர்கள் தம்முடைய பிரசித்தி பெற்ற திரு நபி சரித்திரமாகிய **ரஹ்மத்துன் லில்ஆலமீன்** என்ற நூலின் இரண்டாம் பாகத்தில் சில விவரங்களை எழுதியுள்ளார். அவர் ஆர்வத்துடன் பல நூல்களையும் ஆராய்ந்து எழுதியிருப்பது சன்மார்க்க பக்தியுள்ள உலகுக்கு அவர் நூதனமாகச் செய்த பேருபகாரமாகும். பீருமஊனா, மூத்தா ஆகிய இடங்களில் நிகழ்ந்த போர்களில் ஷஹீதானவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பது தெரிந்த போதிலும் அவர்கள் யார் யார் என்ற முழு விபரமும் அவருக்குக் கிடைக்கவில்லை. இன்ஷா அல்லாஹுதஆலா இவ்வுலக வாழ்வு வாய்ப்புக் கொடுத்தால் பின்னர் அதனைப் பூர்த்தி செய்வதாகவும், அதற்கு இயலாவிடில் வேறு யாரும் அப்பணியைப் பூர்த்தி செய்யக்கூடும் என்றும் தம்முடைய அந்த நூலில் குறிப்பிட்டிருக்கிறார். அதனைப் பூர்த்தி செய்யாமலேயே அவர் இவ்வுலகை விட்டு மறைந்து விட்டார். அதனைப் பூர்த்தி செய்யும் பாக்கியம் எவருக்கு இருக்கிறது என்பதை அல்லாஹ்தான் அறிவான். ஆதலின், அவர் தந்துள்ள விபரத்தை இங்கு நாம் எழுதுவதும் குறையாகத்தான்

இருக்கும். ஆயினும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்திலும் அவர்கள் முன்னிலையிலும் உயிரை அர்ப்பணித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சந்தோஷத்திற்குரியவர்களான இத்தியாகிகளின் பெயர்களை ஒன்று திரட்டும் விஷயத்தில் அந்நூலை எழுதியவர் எடுத்துக்கொண்ட முயற்சி பாராட்டத்தக்கதாகும். அவருடைய இம்முயற்சியை எல்லாம் வல்ல ரஹ்மான் அங்கீகரித்து அதனை பூர்த்தி செய்யும் பாக்கியத்தை தந்து அருள்புரிவானாக, ஆமீன்.

பத்ருப் போரில் உயிர் நீத்த தியாகிகள் : 14

01. மஹ்ஜ உப்னு ஸாலிஹ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் ஸெய்யிதுனா உமர் ஃபாரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களால் விடுதலை செய்யப்பட்ட முன்னாள் அடிமை. அக் என்ற வர்க்கத்தைச் சேர்ந்தவர். இவர் தான் முதன் முதலாக சன்மார்க்கத்திற்கு எதிரான போர்க் களத்தில் உயிர் துறந்தவர். இவரது தியாகத்தை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பாராட்டி **ஸெய்யிதுஷ்ஷுஹதாஉ** என்றழைத்தார்கள். இஸ்லாம் ஒன்றில்தான் அடிமை சுதந்திரன் என்ற

பாகுபாடின்றி அவரவரின் செய்கைகளுக்கு முதன் முதலாக பாராட்டளிக்கப்படுகிறது.

02. உபைதத்துப்னு ஹாரிதிப்னி அப்தில் முத்தலிப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெரிய தந்தையின் புதல்வரான இவர் தம்முடைய 63 வது வயதில் ஷஹீதானார். இவருக்கு அபுல் ஹாரித் என்றும், அபூ முஆவியா என்றும் இரு காரணப் பெயர்கள் இருக்கின்றன. முஸ்லிம் படைக்குத் தலைமை வகிக்கும் பாக்கியத்தை இவர் முதன் முதலாகப் பெற்றார்.

03. உமைருப்னு அபீ வக்காஸ் (மாலிக்) இப்னி உஹைபிப்னி அப்தி மனாப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

சுவர்க்கவாதிகள் என்று நற்செய்தி சொல்லப்பட்ட பத்துப் பெரியோர்களில் ஒருவரான ஸஃதுப்னு அபீவக்காஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் இளைய சகோதரரான இவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தாயார் ஆமினா அவர்களின் கோத்திரமான பனூ ஜஹ்ராவில் பிறந்த குரைஷியர்.

பதினாறு வயதில் ஷஹீதானார். இவருக்கு பருவ குறைவாக இருக்கிறது என்பதைக் கருதி இராணுவத்தில் சேர்க்காதிருக்க நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விரும்பினார்கள். இவர் எனவே, இராணுவத்தில் சேர்க்கப்பட்டு உற்சாகமாக போரிட்டு உற்சாகமாக உயிரைக் கொடுத்தார்.

04. ஆக்கிலுப்னு புக்கைரிப்னி அப்தியாலல் ரலியல். தஆலா அன்ஹு

இவர் குரைஷிக் குலத்தினர். இவருடைய சகோதரர் காலித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அல்ரஜீஉ போரில் ஷஹீதானவர்களில் ஒருவர்.

05. உமைருப்னு அப்தி உமைரிப்னி நள்லா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

துஷ்ஷிமாலைன் என்ற சிறப்புப் பெயருள்ளவர். அபூ முஹம்மது என்பது இவரின் காரணப் பெயர். பனூ ஜஹ்ரா கோத்திரத்தின் நேயர்.

06. அவ்ஃபு (அவ்து) ப்னு அப்ராஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களின் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச்

யூ சேர்ந்தவர். அப்ராஉ என்பது அவரது அன்னையின் தில் பெயர். தந்தையின் பெயர் அல்ஹாரித்.

07 ஹுறி ஃவதுப்னு அப்ராஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு
ரார்.

கப் ற்கண்ட ஆறாவது இலக்கத்தில் குறிப்பிடப்பட்டவரின் சகோதரர்.

O ஹாரிது (ஹாரிதத்து)ப்னு சுராக்கத்தப்னி ஹாரித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவருடைய தாயார் அனஸுப்னு மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் மாமி (அத்தை). இவருடைய தொண்டையில் அம்பு பாய்ந்து ஷஹீதானார்.

09. யஜீதுப்னு ஹாரிதி (ஷர்தி) ப்னி கைஸிப்னி மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களில் புனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

10. ராஃபிஉப்னு முஅல்லப்னி லவ்தான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களில் ஒருவர்.

11. உமைருப்னு ஹுமாமிப்னி ஜமூஹிப்னி ஜைதிப்னி ஹராம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெரிய தந்தையின் புதல்வர், உபைதா (2-வது இலக்கம்) அவர்களுக்கு சகோதரத்துவம் அளித்த இவர், அன்ஸார்களில் உள்ளவர். சன்மார்க்க பக்தர் என்ற முறையில் முஹாஜிர்களை சகோதரர்களாக ஏற்றுக் கொண்ட அன்ஸார்களைச் சேர்ந்த இவர் தம்முடைய முஹாஜிர் சகோதரருடன் சேர்ந்து ஒரே போர்க்களத்தில் உயிரை அர்ப்பணித்தது குறிப்பிடத்தக்கது.

12. அம்மாருப்னு ஜியாதிப்னி ஸக்கனிப்னி ராபிஃ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அன்ஸார்களில் பனூ அஷ்ஹல் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

13. ஸஃதுப்னு கைதமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களில் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவர். அபூ அப்தில்லாஹ் என்பது காரணப் பெயர். ஸஃதினில் கைர் என்பது பட்டப் பெயர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்

12

பிரதிநிதிகளாக அக்பாவில் நியமிக்கப்பட்ட பன்னிருவரில் ஒருவர் இவர். போருக்குப் புறப்பட்ட போது இவருடைய தந்தை. “ மகனே நீ நில், நான் செல்கிறேன் ” என்றார். அதற்கு அவர் “ தந்தை அவர்களே சுவர்க்கத்திற்குச் செல்வதை விட்டும் என்னைத் தடுக்க வேண்டாம்” என்று கூறி விட்டு போருக்கு வந்து ஷஹீதானார். இவருடைய தந்தை கைதமா ரலியல்லாஹூ தஆலா அன்ஹூ உஹதுப் போரில் ஷஹீதானார். ஆகவே, இவர் ஷஹீதுடைய புதல்வர் ஆவார்.

14. பிஷ்ருப்னு அப்தில் முன்திரிப்னி ஜுபைரிப்னி ஜைத் ரலியல்லாஹூ தஆலா அன்ஹூ

இவர் அன்ஸார்களிலுள்ள அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

குறிப்பு : பத்ருப்போரில் ஷஹீதானவர்கள் பதினான்கு பேர்கள் என்று ஸர்க்கானி, அல் இஸ்திஆல் என்ற நூற்களில் குறிப்பிட்டபடி இவ்விபரம் எழுதப்பட்டது. அங்கு இருபத்தி இரண்டு பேர்கள் ஷஹீதானதாகச் சிலர் கூறியுள்ளார்கள். அவர்களில் ஸஃதுப்னு கவல்லி ரலியல்லாஹூ தஆலா அன்ஹூ, ஸஃப்வானுப்னு பைளா ரலியல்லாஹூ தஆலா அன்ஹூ, அப்துல்லாஹிப்னு

ஸஈதிப்னில் ஆஸ் உமயீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஆகிய மூவரின் விபரம் கிடைத்தது. மற்றவை கிடைக்கவில்லை.

கஸ்வத்துஸ் ஸவீக் : 2

01. மஃபதுப்னு அம்ரினில் அன்ஸாரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு

02. அய்க் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, இவர் மேற்கண்ட மஃபத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் நேயர்.

கஸ்வத்து உஹத் : 71

01. ஹம்ஜத்துப்னு அப்தில் முத்தலிபில் ஹாஷிமீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறிய தந்தையும், பால்குடி சகோதரருமான இவருக்கு அஸதுல்லாஹி வரஸூலிஹி என்றும் ஸெய்யிதுஷ் ஷுஹதாஉ என்றும் சிறப்புப் பெயர்களுண்டு.

02. அப்துல்லாஹிப்னு ஜஹ்ஷினில் அஸதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மாமி (அத்தை) யின் புதல்வர், இவருடைய அங்கங்கள் துண்டிக்கப்பட்டன. ஆதலின், அல் முஜத்தஉ ஃபீ ஸபீலில்லாஹ் என்ற பட்டப் பெயர் கொடுக்கப்பட்டார்.

03. முஸ்அபுப்னு உமைரிப்னி ஹாஷிம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சட்டகரான (சகலை) இவர் அபிசீனியா, திருமதீனா ஆகிய இரண்டு ஹிஜ்ரத்துகளையும் செய்தவர். இவர் இஸ்லாமிய போதக ஆசிரியர் என்ற முறையில் திரு மதீனாவிற்கு வந்து நக்கீபுகளின் உதவியுடன் அவ்ஸ், கஜ்ரஜ் கோத்திரங்களை இஸ்லாமில் சேர்த்தார். பத்ருப் போரில் இஸ்லாமியக் கொடியை ஏந்திச் சென்றார். உஹதுப் போரிலும் இவரே கொடியை ஏந்திச் சென்றார். அவர் ஷஹீதான பின்னர் அலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கொடியை ஏந்தினார்கள்.

04 யமான் இப்னு ஹுதைஃபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

05. அனஸுப்னு நள்ர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களின் நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்த ஹளரத் அனஸுப்னு மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் சிறிய தந்தை. இவர் உடலில் எண்பதுக்கும் அதிகமான காயங்கள் இருந்தன. உஹதுப் போரில் இஸ்லாமியப் படையில் குலைவு ஏற்பட்டபோது நாயனே முஸ்லிம்களின் செய்கையால் உன்னிடத்தில் பாவமன்னிப்புக் கோருகிறேன். முஷ்ரிக்குகளின் செய்கையை விட்டு நான் நீங்கி இருக்கிறேன் என்பதையும் வெளியாக்கிக் கொள்கிறேன். என்று கூறி விட்டு கையில் வாள் ஏந்திச் சென்றார். வழியில் சந்தித்த ஸஃதுப்னு மஆத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரிடம் ஸஃதே, இதோ பார், சுவர்க்கத்தின் நறுமணம் எனக்கு வந்து கொண்டு இருக்கிறது என்று கூறி பகைவரின் படையினுள் பிரவேசித்து வீரப் போரிட்டு ஷஹீதானார்.

06. உனைஸுப்னு கத்தாதா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் பத்ருப் போரில் கலந்து கொண்ட அன்ஸார்களில் ஒருவர்.

07. அபூ ஹுபைரத்துப்னு ஹாரித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களில் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்தவர். அபூ உஸைரா என்பது இவரின் சகோதரரின் பெயர்.

08. அவ்ஸுப்னு அர்க்கம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களில் கஜ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர். முக்கிய ஸஹாபி.

09. இயாஸுப்னு அவ்ஸிப்னி அத்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களில் பனூ அஷ்ஹல் கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவருடைய சகோதரரான அனஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அகழி யுத்தத்தில் ஷஹீதானார்.

10. அவ்ஸுப்னு தாபித் முஜ்னீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஆஸ்தானக் கவிஞர் ஹஸ்ஸானுப்னு தாபித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் சகோதரர்.

11. ரிஃபாஅத்துப்னு வக்ஷ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களில் பனூ அஷ்ஹல் கோத்திரத்தைச் சேர்ந்தவர். வயது முதிர்ந்த பெரியவர்.

12. தாபித்துப்னு வக்ஷ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

மேற்கூறப்பட்ட 11-வது இலக்கத்திலுள்ள ரிபாஆ ரலியல்லாஹு தஆலா அன்ஹுவின் சகோதரர்.

13. அம்ருப்னு தாபித்திப்னி வக்ஷ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

ஹுதைஃபத்துப்னுல் யமான் என்ற ஸஹாபியின் சகோதரியின் புதல்வர்

14. ஸலமத்துப்னு தாபித்திப்னி வக்ர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவரும் 13-வது இலக்கத்திலுள்ளவரின் சகோதரர்.

15. தாபித்துப்னு அம்ரிப்னி ஜைத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களில் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பத்ருப் போரில் கலந்து கொண்டவர்.

16. தாபித்துப்னு வஸ்தாஹ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களில் பனூ அஜ்லான் கோத்திரத்தைச் சேர்ந்தவர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்ற வதந்தியைச் செவியேற்று ஸஹாபிகள் மனஞ்சோர்ந்த போது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இறந்தால் என்ன? அல்லாஹு தஆலா ஜீவித்திருக்கிறான், மரணமடையமாட்டான் என்று கூறி அவர்களை தேற்றி ஒரு சிறு கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு எதிரிகளின் மீது பாய்ந்து தாக்கினார். உஹதுப் போரில் கடைசியாக ஷஹீதான ஸஹாபி இவர்தான்.

17. தஃலபத்துப்னு ஸஃதிப்னி மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களில் பனூ ஸாஇத் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பிரபல ஸஹாபியான அபூ ஹமீத் ஸாஇதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரின் சிறிய தந்தை.

18. துக்பு (தக்கிபு)ப்னு பர்வத்தப்னி பத்ன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

அன்ஸார்களில பனூ ஸாஇத் கோத்திரத்தைச் சேர்ந்த இவர் அன்ஸார்களின் பரம்பரை பற்றிய அறிவில் நிபுணர்.

19. ஹாரிதுப்னு அவ்ஸிப்னி முஆத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களில் பனூ அஷ்ஹல் கோத்திரத்தைச் சேந்தவர். பத்ருப் போரில் கலந்து கொண்டவர். ஸஃதுப்னு மஆத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரின் சகோதரரின் புதல்வர். 28 வயதில் ஷஹீதானார்.

20. அம்ருப்னு மஆதினில் அஷ்ஹலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

ஸஃதுப்னு மஆத் ரலியல்லாஹுத ஆலா அன்ஹு அவர்களின் சகோதரர். 32 வயதில் ஷஹீதானார்.

21. ஹாரிதுப்னு அனஸிப்னி ராபிஃ அஷ்ஹலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

பத்ருப் போரில் கலந்து கொண்டவர்.

22. ஹாரிதுப்னு அப்தில்லாஹிப்னி ஸுஃப்யானிப்னி ஸஃதிப்னி அம்ரினில் கஜ்ரஜீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

23. ஹாரிதுப்னு தாபித்திப்னி ஸுஃப்யானிப்னி அதிய்யினில் கஜ்ரஜீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பனூ ஸாஇதா கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

24. ஹாரிதத்துப்னு அம்ர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு பனூ ஸாஇதா கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

25. ஹபீபுப்னு ஜைதிப்னி தமீம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

26. ஹன்ளலத்துப்னு அபீ ஆமிர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அன்ஸார்களில் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த இவர் போர் முரசு ஒலித்தவுடன் போருக்குச் சென்ற புது மாப்பிள்ளை. ஜுனுபாளியாக இருக்கிற நிலையிலேயே இவர் ஷஹீதாகி விட்டதால் இவரது உடலை மலக்குகள் குளிப்பாட்டினார்கள். இதனை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பார்த்து மற்றவர்களுக்கு அறிவித்தார்கள். ஆதலால், இவருக்கு கஸீலுல் மலாயிக்கா என்ற சிறப்பு பெயர் ஏற்பட்டது. இவருடைய தந்தைக்கு பாஸிக் என்பது பட்டப்பெயர். இவருடைய புதல்வர் அப்துல்லாஹ் என்பவரும் ஸஹாபி. ஹிஜ்ரீ 33ம் வருடம் நிகழ்ந்த அல்ஹர்ரா யுத்தத்தில் அப்துல்லாஹ் ஷஹீதானார்.

27. காரிஜத்து ஜைதிப்னி அபீ ஜுஹைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு .

அன்ஸார்களில் கஜ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர். அக்பாவில் நபி (ஸல்) அவர்களிடம் கை கொடுத்து உடன்படிக்கை செய்த எழுபது பேர்களில் ஒருவர். இவருடைய குடும்பத்திற்கு பனூ அஇஸ்ஸா என்று பெயர். இவருடைய புதல்வியான ஹபீபா ரலியல்லாஹு தஆலா அன்ஹா ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை மணந்தார். இவருடைய உடலில் பத்துக்கும் அதிகமான காயங்கள் இருந்தன. இவருடைய புதல்வர் அப்துல்லாஹ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு இறந்த பின்னரும் பேசியதாகச் சொல்லப்படுகிறது.

28. ஸஃதுப்னு ரபீஇல் கஜ்ரஜீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

12 இவரும் அக்பாவில் விசுவாசப் பிரமாணம் செய்தவர்களில் ஒருவர். மதீனாவில் இஸ்லாமியப் பிரச்சாரம் செய்ய நியமிக்கப்பட்ட 12 பிரதிநிதிகளில் ஒருவர். 27-வது இலக்கத்திலுள்ளவரின் சிறிய

தந்தையின் புதல்வர். இருவரும் ஒரே கப்ரில் அடக்கப்பட்டனர்.

29. கப்பாபுப்னு கைஸிய்யிப்னி அம்ரிப்னி ஸஹ்லினில் அஷ்ஹலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

30. ஸைஸிய்யுப்னு கைஸிப்னி அம்ரிப்னி ஸஹ்லனில் அஷ்ஹலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவ்விருவரும் உடன் பிறந்த சகோதரர்கள். 48-வது இலக்கத்திலுள்ளவரின் சகோதரியின் புதல்வர்கள்.

31. கைதமத்துப்னு ஹாரிதிப்னி மாலிக்கினில் அவ்ஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவருடைய புதல்வர் பத்ரில் ஷஹீதானவர்களில் 13-வது இலக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

32. தக்வானுப்னு அப்தி கைஸிப்னி கல்தத்தல் ஜர்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் கணவாயில் விசுவாசப் பிரமாணம் செய்தவர்களில் ஒருவர். பத்ருப் போரில் கலந்து கொண்டவர். முஹாஜிராகவும் அன்ஸாராகவும் இருக்கிறார். முதன் முதலாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களை கணவாயில் அஸ்அதுப்னு ஜராரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களுடன் சேர்ந்து சந்தித்தவர். திருமதீனாவில் இரகசியமாகப் பிரச்சாரம் செய்து மறு வருடத்தில் 72 பேர்களை அழைத்து வந்தவர்களில் ஒருவர்.

33. ராஃபிஉ்ப்னு மாலிக்கிப்னி அஜ்லான் அஜ்ரக்கிய்யில் கஜ்ரஜீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அபூ மாலிக் என்பது இவரின் காரணப் பெயர். கணவாயில் நிகழ்ந்த மூன்று சந்திப்புகளிலும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்டு விசுவாசப் பிரமாணம் செய்தவர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் நியமிக்கப்பட்ட 12 பிரதிநிதிகளில் இவரும் ஒருவர்.

34. ராஃபிஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு அன்ஜியத்துப்னு அம்ர் என்பவரின் முன்னால் அடிமை

35. ரிஃபாஅத்துப்னு அம்ரிப்னி ஜைதினில் கஜ்ரஜீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அபுல் வலீத் என்பது காரணப் பெயர். பத்ருப் போரிலும் கணவாயின் உடன்படிக்கையிலும் கலந்து கொண்டவர்.

பொருளடக்கம்

36. ஸஃது (ஸஈது)ப்னு ஸுவைதிப்னி கைஸிப்னி அப்ஜர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

37. ஸஹ்லுப்னு அதீய்யிப்னி ஜைதிப்னி ஆமிரினில் அஷ்ஹலி (ரலி)

38. ஸஹ்லுப்னு கைஸிப்னி அபீகஃபிப்னி கைஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

அஸ்லமீ கோத்திரத்தைச் சேர்ந்தவர். பத்ருப் போரில் கலந்து கொண்டவர்.

39. ஸுபைஉப்னு ஹாத்திபிப்னி குபைஸிப்னி ஹுபைஷத்தல் அவ்ஸீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

40. ஸுவைபக்குப்னு ஹாத்தபிப்னி ஹாரிதிப்னி ஹாத்தப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

41. ஸக்ரத்துப்னு அம்ர் (பிஷ்ரு) ரலியல்லாஹு தஆலா அன்ஹு

கஜ்ரஜ் கோத்திரத்தின் தோழர்களான பனூ கலீப் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

42. அப்துல்லாஹிப்னு ஜுபைரிப்னி நுஃமான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இப்போரில் அம்பெறி பகுதிக்குத் தலைவர். பத்ருப் போரில் கலந்து கொண்டவர். கணவாயில் உடன்படிக்கை செய்தவர்களில் ஒருவர்.

43. அப்துல்லாஹிப்னு அம்ரிப்னி வஹ்பிப்னி தஃலபா அஸ்ஸாஇதி ரலியல்லாஹு தஆலா அன்ஹு

44. அப்துல்லாஹ் முஜ்தருப்னு ஜியாத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

அன்ஸாரிகளின் கூட்டாளி. பத்ருப் போரில் கலந்து கொண்டவர்.

45. உபாதத்துப்னு கஷ்காஷிப்னி அம்ரிப்னி ஜம்ஜமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

46. நுஃமானுப்னு அப்தி அம்ரிப்னி மஸ்ஊத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ருப்போரில் கலந்து கொண்டவர். 24,45,46 இலக்கம் உள்ளவர்களுடன் ஒரே கப்ரில் அடக்கம் செய்யப்பட்டார்.

47. ஆமிருப்னு உமய்யத்தப்னி ஜைதிப்னி கஷ்காஷ் நஜ்ஜாரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ருப் போரில் கலந்து கொண்டவர். இவருடைய புதல்வர் ஷஷாம் என்பவரும் ஒரு ஸஹாபீ.

48. உபைது (அத்தீக்கு) ப்னு தீஹானிப்னி மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

அபூ ஹுஷைம் என்பது காரணப் பெயர். பத்ருப் போரில் கலந்து கொண்டவர். அக்பா உடன்படிக்கையில் சேர்ந்தவர்.

49. யஸார் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

48-வது இலக்கமுள்ளவரின் முன்னாள் அடிமை.

50. உபைதுப்னு முஅல்லா இப்னி நூதானிப்னி ஹாரிதா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவரின் சகோதரர் ராபிஃ ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவர். பத்ருப் போரில் 12-வது இலக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

51. அப்பாஸுப்னு உபாதா கஜ்ரஜீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸாரியாவார். கணவாய் உடன்படிக்கைகளில் இரண்டில் கலந்து கொண்டவர்.

52. ஆமிருப்னு முக்லதிப்னி ஹாடிதினின் னஜ்ஜாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ருப் போரில் கலந்து கொண்டவர்.

53. அமருப்னு இயாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பனூ அவ்ஃப் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

54. அம்ருப்னு மத்ருபி (முத்ரபி) ப்னி அல்கமத்தப்னி அம்ரிப்னி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அபூ ஹம்மாம் என்பது காரணப் பெயர்.

55. உத்பத்துப்னு ரபீஇ ப் ரி ராபிஃ (ரலி).

இவர் கஜ்ரஜ் கோத்திரத்திலுள்ள குத்ரீ குடும்பத்தைச் சேர்ந்தவர்.

56. உப்பாதுப்னு ஸஹ்லிப்னி மக்ரமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அவ்ஸ் கோத்திரத்துக் கிளையான பனூ அஷ்ஹல் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

57. அப்துல்லாஹிப்னு அம்ரிப்னி ஹராமினிஸ் ஸலமிய்யில் கஜ்ரஜீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

12

பிரபல ஹதீஸ் அறிவிப்பாளரான ஜாபிர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரின் தந்தையான இவர் பத்ருப்போரிலும், கணவாய் உடன்படிக்கையிலும் கலந்து கொண்டவர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பன்னிரெண்டு பிரதிநிதிகளில் ஒருவர். இவருடைய உடலுக்கு மலக்குகள் நிழலிட்டனர் என்றும், இவர் ஷஹீதான பின்னர் இவருடன் அல்லாஹ் பேசினான் என்றும் ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

58. அம்ருப்னு ஜமூஹிப்னி ஜைதிப்னி ஹராம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

இவர் அன்ஸார்களின் தலைவர்களில் ஒருவர். கால் ஊனமுற்றவர், ஊனமுற்றவனாகவே சுவர்க்கத்தில் பிரவேசிப்பேன் என்று கூறுவார். போருக்கு என வீட்டை விட்டுப் புறப்பட்டபோது நாயனே எனக்கு ஷஹாதத்தை அருள்வாயாக, என் குடும்பத்தாரிடம் வெறுங்கையாக என்னை திரும்பி வரச் செய்யாதே என்று பிரார்த்தித்தார். பெருங்கொடை வள்ளல். இவரிடத்தில் யாராவது வந்து கேட்டால், அவரை அழைத்துக்கொண்டு போய் அந்த பொருளைக் காட்டி எடுத்துக்கொள். அது திரும்ப வரக்கூடியதுதான் என்று கூறுவார். 57,58 ஆகிய

இலக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுடன் இவரும் ஒரே கப்ரில் அடக்கப்பட்டனர்.

59. கல்லாதுப்னு அம்ரிப்னி ஜமூஹ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் 58வது இலக்கத்தில் உள்ளவரின் புதல்வர்.

60. அபூ அய்மன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

58-வது இலக்கத்திலுள்ளவரின் முன்னாள் அடிமை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்ற வதந்தி திருமதீனாவிற்கு எட்டியபோது அங்குள்ள பெண்கள் தங்கள் வீடுகளை விட்டு ஓடி வந்தனர். அதற்குள்ளாக உஹதிலிருந்து முஸ்லிம்கள் திரும்ப வந்து கொண்டிருந்தனர். அவர்களை நோக்கி ஒரு பெண் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நலமாக இருக்கிறார்களா? என்று வினவினார். அவர்களில் ஒருவர் உமது புதல்வர் இறந்து விட்டார் என்று தகவல் கொடுத்தார். பின்னர் வேறு ஒருவரிடம் அதே கேள்வியை அப்பெண் கேட்டார். அதற்கவர் உமது சகோதரர் இறந்து விட்டார் என்று தகவல் கொடுத்தார். பின்னர் மூன்றாவதாக ஒருவரிடம் வினவிய போது உமது கணவர் இறந்து விட்டார் என்று தகவல்

கொடுத்தார். பின்னர் நான்காவதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அந்தப் பெண் பார்த்து தங்களைப் பார்த்த பின்னர் சகல துன்பங்களும் தூரமாகி விட்டன என்று கூறினார் என்பதாக ஒரு சம்பவம் பிரபல்யமாக இருக்கிறது. அவ்வாறு சொன்ன பெண்ணின் பெயர் அச்செய்தியில் குறிப்பிடப்படவில்லை.

அந்தப் பெயரைப் பல மாதங்கள் வரையில் ஆராய்ந்து கண்டுபிடித்ததாக ரஹ்மத்துன் லில்ஆலமீன் ஆசிரியர் குறிப்பிட்டு ஹிந்த் என்பது அந்தப் பெண்ணின் பெயர். அன்ஸார்களைச் சேர்ந்தவள். 57-வது இலக்கமுள்ளவர் அவளின் சகோதரர். 58-வது இலக்கமுள்ளவர் கணவர். 59-வது இலக்கமுள்ளவர் புதல்வர்.

இம்மூவரின் சடலங்களையும் ஒரு ஒட்டகையின் மீதேற்றி அவள் மதீனாவிற்கு கொண்டு வந்தாள். பின்னர் உஹதில் ஷஹீதான யாவரையும் அங்கேயே நல்லடக்கம் செய்யும் தகவலைத் தெரிந்து அம்மூவரையும் அங்கு திரும்பக் கொண்டுபோய் நல்லடக்கம் செய்தாள்.

மற்றொரு அறிவிப்பில் கணவர், சகோதரர், தந்தை ஆக மூவர் இறந்ததாக எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் பெண் யார்

எனபதைப் பற்றி ஆராய்ந்ததில் அஸ்மாபின்து யஜீதப்னி ஸக்கன் ரலியல்லாஹு தஆலா அன்ஹா என்பவராக இருக்கலாமோ என்று கருத வேண்டியதிருக்கிறது. இவ்வம்மையின் தந்தை யஜீதுப்னு ஸக்கன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரும், சகோதரர் ஆமிருப்னு யஜீதுப்னு ஸக்கன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரும் உஹுதுப் போரில் ஷஹீதாயினர். அவருடைய கணவர் யார் என்று தெரியவில்லை. அவருடைய கணவரும் இப்போரில் ஷஹீதாகி இருந்தால் இந்த இரண்டாவது அறிவுப்புக்கு இவ்வம்மை உரியவராவார். இவ்வம்மை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தில் ஆஜராவது வழக்கம். ஹளரத் உமர் ஃபாருக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் காலத்தில் உரோமர்களை எதிர்த்து நடத்திய இறுதிப் பெரும் போரில் கலந்து கொண்டு அதில் இவ்வம்மை ஷஹீதானார்.

61. அம்மாரத்துப்னு ஜியாதிப்னி ஸக்கனிப்னி ராபிஃ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களில் அஷ்ஹலீ கோத்திரத்தைச்

கொடுத்தார். பின்னர் நான்காவதாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அந்தப் பெண் பார்த்து தங்களைப் பார்த்த பின்னர் சகல துன்பங்களும் தூரமாகி விட்டன என்று கூறினார் என்பதாக ஒரு சம்பவம் பிரபல்யமாக இருக்கிறது. அவ்வாறு சொன்ன பெண்ணின் பெயர் அச்செய்தியில் குறிப்பிடப்படவில்லை.

அந்தப் பெயரைப் பல மாதங்கள் வரையில் ஆராய்ந்து கண்டுபிடித்ததாக ரஹ்மத்துன் லில்ஆலமீன் ஆசிரியர் குறிப்பிட்டு ஹிந்த் என்பது அந்தப் பெண்ணின் பெயர். அன்ஸாரர்களைச் சேர்ந்தவள். 57-வது இலக்கமுள்ளவர் அவளின் சகோதரர். 58-வது இலக்கமுள்ளவர் கணவர். 59-வது இலக்கமுள்ளவர் புதல்வர்.

இம்மூவரின் சடலங்களையும் ஒரு ஒட்டகையின் மீதேற்றி அவள் மதீனாவிற்கு கொண்டு வந்தாள். பின்னர் உஹதில் ஷஹீதான யாவரையும் அங்கேயே நல்லடக்கம் செய்யும் தகவலைத் தெரிந்து அம்மூவரையும் அங்கு திரும்பக் கொண்டுபோய் நல்லடக்கம் செய்தாள்.

மற்றொரு அறிவிப்பில் கணவர், சகோதரர், தந்தை ஆக மூவர் இறந்ததாக எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் பெண் யார்

எனபதைப் பற்றி ஆராய்ந்ததில் அஸ்மாபின்து யஜீதப்னி ஸக்கன் ரலியல்லாஹு தஆலா அன்ஹா என்பவராக இருக்கலாமோ என்று கருத வேண்டியதிருக்கிறது. இவ்வம்மையின் தந்தை யஜீதுப்னு ஸக்கன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரும், சகோதரர் ஆமிருப்னு யஜீதுப்னு ஸக்கன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரும் உஹதுப் போரில் ஷஹீதாயினர். அவருடைய கணவர் யார் என்று தெரியவில்லை. அவருடைய கணவரும் இப்போரில் ஷஹீதாகி இருந்தால் இந்த இரண்டாவது அறிவுப்புக்கு இவ்வம்மை உரியவராவார். இவ்வம்மை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தில் ஆஜராவது வழக்கம். ஹளரத் உமர் ஃபாரூக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் காலத்தில் உரோமர்களை எதிர்த்து நடத்திய இறுதிப் பெரும் பேரில் கலந்து கொண்டு அதில் இவ்வம்மை ஷஹீதானார்.

61. அம்மாரத்துப்னு ஜியாதிப்னி ஸக்கனிப்னி ராபிஃ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் அன்ஸார்களில் அஷ்ஹலீ கோத்திரத்தைச்

சேர்ந்தவர். இவருடைய உடலில் பதினான்கு காயங்கள் இருந்தன. இவருடைய ஆன்மா பிரியும் முன்னர் இவரிடத்தில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சென்றார்கள். அவர்களுடைய பாதத்தின் மீது தமது தலையை வைத்து உயிர் துறந்தார்.

62. யஜீதுப்னு ஸக்கன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவருக்கு அபூ அஸ்மா என்று காரணப் பெயருண்டு. இவருடைய புதல்வர் ஆமிர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரும் இதே தினத்தில் ஷஹீதானார். 61-வது இலக்கத்தில் குறிப்பிடப்பட்டிருப்பர் இவருடைய சகோதரரின் புதல்வர்.

63. அம்ருப்னு கைஸிப்னி ஜைதிப்னி ஸவாதிப்னி மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

64. கைஸுப்னு அம்ரிப்னி கைஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

63-வது இலக்கத்தில் உள்ளவரின் புதல்வர்.

65. கைஸுப்னு முக்லதிப்னி தஃலபத்தப்னி ஸக்ர்

ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ருப் போரில் கலந்து கொண்டவர். மாஜினி கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

66. மாலிக்குப்னு ஸனான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பிரபல ஹதீஸ் அறிவிப்பாளரான அபூஸஈதினில் குத்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரின் தந்தை

67. நௌஃபலுப்னு தஃலபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ருப் போரில் கலந்து கொண்டவர். கஜ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூஸாலிம் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

68. ய்ஜீதுப்னு ஹாத்தபிப்னி அம்ர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பனூ அஷ்ஹல் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

69. வஹ்புப்னு காபூஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

70. ஹாரிதுப்னு அக்பத்தப்னி காபூஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

69-வது இலக்கத்தில் கண்டவரின் சகோதரருடைய புதல்வர். முஜைனா என்ற மலையிலிருந்து ஆடுகளை விற்பனை செய்வதற்காக திருமதீனாவிற்கு வந்தார். நகரில் ஆடவர்கள் இல்லாதிருப்பதற்கான காரணத்தை அறிந்து உஹது மலையடிவாரம் சென்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பேட்டி கண்டு இஸ்லாமைத் தழுவி போரில் கலந்து ஷஹீதானார்.

71. ஹுஸைல் (யமான்) இப்னு ஜாபிரில் அபஸிய்யில் கத்ஈ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பிரபல ஸஹாபியான ஹுதைஃபத்துப்னுல் யமான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரின் தந்தை. அடையாளம் தெரியாமல் முஸ்லிம்கள் தவறுதலாக இவரைக் கொன்றுவிட்டனர்.

உஹதுப் போரில் எழுபது பேர்கள் ஷஹீதானார்கள் என்று ஸஹீஹுல் புகாரியில் எழுதப்பட்டிருக்கிறது. தவறுதலாகக் கொல்லப்பட்ட எழுபத்தி ஒன்றாவது இலக்கத்தில் கண்டவரை கணக்கில் சேர்க்காமல் எழுதி இருக்கலாம்.

இவரைத் தவிர மாலிக்குப்னு இயாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, ஹாரிதுப்னு அதிய்யிப்னி கஷ்த்

ரலியல்லாஹூ தஆலா அன்ஹூ, இயாஸுப்னு அதி ரலியல்லாஹூ தஆலா அன்ஹூ ஆகிய மூவரின் பெயர்களும் உஹதில்ஷஹீதானவர்களின் அட்டவணையில் காணப்படுகிறது. ஆயினும், பிரபல வரலாற்றாசிரியரான இப்னு இஸ்ஹாக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இப்பெயர்களை தம்முடைய சரித்திரத்தில் குறிப்பிடவில்லை. ஆதலால், அந்தப் பெயர்களை மேற்கண்ட பட்டியலில் சேர்க்கவில்லை.

அர்ரஜீஃ சம்பவம்

01. முர்ததுப்னு கினானிப்னி ஹஸீன் கனவீ ரலியல்லாஹூ தஆலா அன்ஹூ.

இவருடைய தலைமுறை ஸஃதுப்னு கைஸிப்னி ஜலானுடன் சேருகிறது. இவரும் இவருடைய தந்தையும் ஸஹாபிகள். இருவரும் பத்ருப் போரில் கலந்து கொண்டவர்கள். இஸ்லாமைத் தழுவியதற்காக மக்காவாசிகள் யார் யாரைக் கைது செய்து அடைத்து வைத்திருந்தார்களோ அவர்களை இவர் இரவில் சுவர் ஏறிக் குதித்து ஒவ்வொருவராக வெளியாக்கி பலருக்கு விடுதலையளித்தார்.

02. குபைபுப்னு அதீ ரலியல்லாஹூ தஆலா அன்ஹூ

இவரைப் பற்றிய சரித்திரம் எம்மால் மொழி பெயர்க்கப்பட்ட ஹளரத் முஹம்மத் ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இரண்டாம் பாகத்தில் (126ம் பக்கம்) விளக்கமாக எழுதப்பட்டிருக்கிறது.

03. ஆஸிமுப்னு தாபித்திப்னி அபீ அப்லஹிப்னி கைஸ் அன்ஸாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பத்ருப் போரில் கலந்து கொண்டவர்.

04. ஜைதுப்னு தத்னா அன்ஸாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் பத்ரு உஹதுப் போர்களில் கலந்து கொண்டவர். மக்கத்துக் குரைஷியர் இவரைத் தூக்கு மேடைக்கு அழைத்துச் சென்றபோது அதன் அருகில் இரண்டு ரக்கஅத் தொழ அனுமதி பெற்றுத் தொழுதார். அதிலிருந்து தூக்கு மேடை செல்வோர் கடைசியாக இரண்டு ரக்க அத்துக்கள் தொழுவது ஸுன்னத்து என்றேற்பட்டது.

05. அப்துல்லாஹிப்னு தாரிக்கிப்னி அம்ரிப்னி மாலிக்

ரலியல்லாஹு தஆலா அன்ஹு

06. காலிதுப்னு புக்கைரிப்னி அப்தியாலீல் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இதில் மூன்று பேர் ஏமாற்றப்பட்டு மூவரும் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். இருவர் மக்காவாசிகளிடம் விற்பனை செய்யப்பட்டு அவர்களால் தூக்கிலிடப்பட்டனர். மற்றொருவர் வழியில் எதிர்த்து கொல்லப்பட்டார். எம்மால் மொழி பெயர்க்கப்பட்ட ஹளரத் முஹம்மது ரசூலுல்லாஹ் பாகம் 2, பக்கம் 126ல் விளக்கமாக காண்க.

பீரு மஊனா : 26

01. முன்திருப்னு அம்ரிப்னி குனைஸ் அன்ஸாரி ஸாஇதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவர். கணவாயில் உடன்படிக்கை செய்தவர். பத்ருப் போரில் கலந்து கொண்டவர். ஸெய்யிதுஷ்ஷுஹதா என்ற பட்டம் பெற்றவர்.

02. ஹக்கமுப்னு கியான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

மௌலா ஹிஷாம் மக்ஜுமீ. நக்லாவில் கைது செய்யப்பட்டுக் கொண்டு வரப்பெற்றார். திருமதீனாவில் இஸ்லாமைத் தழுவி ஷஹீதாகும் பாக்கியம் பெற்றார்.

03. ஹராமுப்னு மில்ஹான் (மாலிக்) இப்னு காலிதில் அன்ஸாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ரு, உஹதுப் போர்களில் கலந்து கொண்டவர். இவருடைய சகோதரியான உம்முஸுலைம் ரலியல்லாஹு தஆலா அன்ஹா என்பவர் பிரபல பெண் ஸஹாபி அனஸுப்னு மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் தாயார். மற்றொரு சகோதரியான உம்மு மில்ஹான் ரலியல்லாஹு தஆலா அன்ஹா என்பவரும் பெண் ஸஹாபி. இவர் காயமடைந்து குருதி கொட்டிய போது அதனைக் கையால் பிடித்து முகத்தில் தடவிக் கொண்டு கஃபாவின் றப்பின் மீது ஆணையாக நான் வெற்றி பெற்று விட்டேன் என்று கூறினார்.

04. ஸுலைமுப்னு மில்ஹான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

3-வது இலக்கத்திலுள்ளவரின் சகோதரர்.

05. ஆமிருப்னு புஹைறா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

ஹளரத் அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் இவரை விலைக்கு வாங்கி விடுதலை செய்தார்கள். இஸ்து கோத்திரத்தைச் சேர்ந்தவர். கருப்பர். ஆரம்பகால முஸ்லிம். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரத்துச் செய்த போது இவரும் அவர்களுடன் சென்றார். இவர் ஷஹீதாகும் போது வயது நாற்பது. இவரைக் கொலை செய்த ஆமிருப்னு துபைல் இவர் மீது அம்பால் எய்த போது இவருடைய உடலிலிருந்து ஒரு ஜோதி வெளிப்பட்டது. அதைப் பார்த்த கொலைகார ஆமிருப்னு துபைல் இஸ்லாமைத் தழுவினார். அவருடைய சடலம் அங்கு ஷஹீதான மற்றவர்களின் உடலங்களுடன் காணப்படவில்லை.

06. உர்வத்துப்னு ஸமாஅப்னி ஸலத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

இவர் பனூ ஸுலைம் கோத்திரத்தைச் சேர்ந்தவர்தான். இவரைக் கொன்றவரும் அதே கோத்திரத்தைச் சேர்ந்தவர்தான். ஆதலால், கோத்திர அபிமானத்தால் முஸ்லிம்களை விட்டு விலகிக் கொள்ளும்படி அவர் கூறினார். உயிருக்காக முஸ்லிம்களை விட்டு விலக

மறுத்து விட்டார்.

07. ஹாரிதுப்னு ஸம்மா அன்ஸாரீ நஜ்ஜாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ருப் போரில் கலந்து கொள்வதற்காகவே வந்தார். வழியில் காயமடைந்தார். ஆதலால், கலந்து கொள்ள முடியவில்லை. உஹதுப் போரில் தளராமல் போரிட்டவர்களில் ஒருவர். இவர் ஷஹீதாகும் போது இவரது உடலை அம்புகள் சல்லடையாகத் துளைத்து இருந்தன.

08. தாபித்துப்னு காலித் நஜ்ஜாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ரு, உஹதுப் போர்களில் கலந்து கொண்டவர்.

09. ஆயிதுப்னு மாஇஸிப்னி கைஸிப்னி கல்தா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ருப் போரில் கலந்து கொண்டவர். அன்ஸார்களில் ஜர்க்கீ கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

10. முஆதுப்னு மாஇஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

9- வது இலக்கத்திலுள்ளவரின் சகோதரர். பத்ரு, உஹதுப் போரில் கலந்து கொண்டவர்.

11. மஸ்ஊதுப்னு ஸஃதிப்னி கைஸிப்னி காலித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

9,10 இலக்கங்களில் உள்ளவர்களுக்கு ஒன்று விட்ட சகோதரர்.

12. ஸுஃப்யானுப்னு தர்பித் அன்ஸாரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு

13. மாலிக்குப்னு தாபித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

12-வது இலக்கத்திலுள்ளவரின் சகோதரர்.

14. ஸுஃப்யானுப்னு ஹாத்திபிப்னி உமய்யா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

உஹதுப் போரில் கலந்து கொண்ட அன்ஸாரீ.

15. ஸுஹைலுப்னு ஆமிரிப்னி தக்கீபினில் அன்ஸாரீ (ரலி)

16. ஸஃதுப்னு அம்ரிப்னி தக்கீப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

15-வது இலக்கத்திலுள்ளவரின் ஒன்று விட்ட சகோதரர்.

17. துஃபைலுப்னு ஸ்ஃதிப்னி அம்ரிப்னி தக்கிப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

16-வது இலக்கத்திலுள்ளவரின் புதல்வர், உஹதுப் போரில் கலந்து கொண்டவர்.

18. ஸஹ்லுப்னு அம்ரிப்னி தக்கீப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

16-வது இலக்கத்திலுள்ளவரின் சகோதரர்.

19. குத்பத்துப்னு அப்தி அம்ரிப்னி மஸ்ஊதிப்னி அப்தில் அஷ்ஹல் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

அன்ஸார்களில் கஜ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

20. முன்திருப்னு முஹம்மதிப்னி அக்பா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ரு, உஹதுப் போர்களில் கலந்து கொண்டவர். அன்ஸார்களில் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

21. நாபிஉப்னு புதைலுப்னு வரக்கா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பனூஸஹ்ம் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

22. அனஸுப்னு மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பனூ அம்ரிப்னிமாலிக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்..

23. உபய்யுப்னு தாபித்திப்னி முன்திர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அபுல்ஃபத்தஹ் என்பது இவரின் காரணப் பெயர்.

24,25. உபய்யுப்னு முஆதிப்னி அனஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ருப் போரில் கலந்து கொண்டவர். அன்ஸார்களில் புனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இருவரும் சகோதரர்கள். இவர்களை வாக்கிதீ இங்கு ஷஹீதானவர்களின் அட்டவணையில் சேர்த்து எழுதியுள்ளார்.

26. மஸ்ஊதுப்னு கல்தத்திப்னி ஆமிரிப்னி ஜுரைக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் பத்ரு, உஹதுப் போர்களில் கலந்து கொண்டவர். கைபர் போரில் இவர் ஷஹீதானதாக சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

குறிப்பு : பீரு மஊனாவில் அறுபத்தி ஒன்பது பேர்

கொல்லப்பட்டதாகவும், அம்ருப்னு உமய்யத்தள்ளம்ரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்ற ஒருவர் மட்டும் காயமடைந்து உயிர் தப்பியதாகவும் தெரிகிறது. ஆக மொத்தம் எழுபது பேர்களும் போருக்குச் சென்றவர்கள் அல்லர். சன்மார்க்கப் பிரச்சாரத்திற்குச் சென்றவர்கள். அவர்களில் மேற்கண்ட இருபத்தாறு பேர்களுக்குத்தான் விபரம் கிடைத்தது. மற்றவர்களைப் பற்றிய விபரம் தெரியவில்லை.

மரீஸீஃ :|

01. ஹிஷாமுப்னு ஸப்பாபத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் மக்கீஸுப்னு ஸப்பாபத்தின் சகோதரர். ஒரு முஸ்லிமுடைய கையினாலேயே தவறுதலாகக் கொல்லப்பட்டார்.

கந்தக் (அகழி) :6

01. அனஸுப்னு அவ்ஸிப்னி அத்தீக்கிப்னி அம்ர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

இவர் அன்ஸார்களில் பனூ அஷ்ஹல் கோத்திரத்தைச் சேர்ந்தவர். உஹதுப் போரில் கலந்து கொண்டவர். அம்புக்காயங்களால் ஷஹீதானார். இவருடைய சகோதரர் இயாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு உஹதுப் போரில் ஷஹீதானார்.

02. அப்துல்லாஹிப்னு ஸஹ்லிப்னி ஜைத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ருப் போரில் கலந்து கொண்ட அன்ஸாரி.

03. தஃலபத்துப்னு அத்மத்தப்னி அதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

கணவாய் உடன்படிக்கையிலும், உஹதுப் போரிலும் கலந்து கொண்டவர். அன்ஸார்களில் பனூஸல்மா கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

04. துபைலுப்னு மாலிக்கிப்னி நுஃமான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

கணவாய் உடன்படிக்கையிலும் பத்ரு, உஹதுப் போர்களிலும் கலந்து கொண்டவர். உஹதுப் போரில் முப்பத்தியொரு காயங்களை அடைந்து குணமானார். பின்னர் இப்போரிலும் கலந்து கொண்டார். அன்ஸார்களில் பனூ ஸல்மா கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

05. கஃபுப்னு ஜைதிப்னி கைஸிப்னி மாலிக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

06. ஸஃதுப்னு முஆதிப்னி நுஃமான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அன்ஸார்களில் அவ்ஸ் கோத்திரத்தின் தலைவர். இப்போரில் அம்புக்காயமடைந்தார். மஸ்ஜிதுந் நபவியில் வைத்து ஒரு மாத காலம் வரையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நேரடி பார்வையில் சிகிச்சை செய்யப்பட்டது. இவருடைய மரணத்தால் அர்ஷ் நடுங்கிற்று என்று ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது.

பனூ குறைளா :

01. கல்லாதுப்னு ஸுவைதிப்னி தஃலபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

மதீனாவிலுள்ள கஜ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த இவர் கணவாய் உடன்படிக்கையிலும் உஹது, அகழி ஆகிய போர்களிலும் கலந்து கொண்டவர்.

02. ஸனானுப்னு மிஹ்ஸன் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இந்தப் பெயர் ஸீரத்து இப்னு தஹ்லானில் இருந்து எடுக்கப்பட்டது. அல்இஸ்திஆபில் ஸனான் இப்னு

வஹ்பிபினி மிஹ்ஸன் என்று எழுதப்பட்டிருக்கிறது. வாக்கிதியுடைய அறிவிப்பில் இவர் ஹிஜ்ரீ 32ல் காலமானதாக எழுதப்பட்டிருக்கிறது. வாக்கிதியுடைய தகவல் இவரல்லாத வேறு யாரையும் பற்றியதாகவும் இருக்கலாம்.

கஸ்வத்து காபர : 3

01. தர்ருப்னு அபீ தர்ரு ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் கொல்லப்படுவார் என்ற செய்தியை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன்னறிக்கை செய்திருந்தார்கள்.

02. மிஹ்ரஜுப்னு நள்லா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பனூ அஸத் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பத்ரு, உஹத், அகழி போர்களில் கலந்து கொண்டவர்.

03. வக்காஸுப்னு மிஹ்ரஜ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பனூ முத்லஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

துல்கிஸ்ஸா : 5

01. ஸல்கானுப்னு ஸலாமத்திப்னி வக்ஷிப்னி ஜஹ்பா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அபூ நாயிலா என்பது காரணப் பெயர். அன்ஸார்களில் பனூ அஷ்ஹல் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

02. ஹாரிதுப்னு அவ்ஸிப்னி முஅல்லப்னி லவ்தான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவருடைய சிறிய தந்தை ராஃபிஉ ரலியல்லாஹு தஆலா அன்ஹு, பத்ருப் போரிலும், மற்றொரு சிறிய தந்தையான உபைத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவர் உஹதுப் போரிலும் ஷஹீதானார்கள்.

03,04 முஜைனா கோத்திரத்தைச் சேர்ந்த இருவர்.

05. பனூ கத்ஃபான் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர்.

இங்கு ஷஹீதானவர்கள் ஒன்பது பேர்கள். முதல் இருவரைத் தவிர மற்றவர்களின் பெயர்கள் நிச்சயமாகத் தெரியவில்லை. வாக்கிதீ ரஹ்மத்துல்லாஹு அலைஹி மற்றும் ஐவர் பெயர்களைக் குறிப்பிட்டிருக்கிறார். அவைகள் சரியானவைகளில்லை என்ற ஜர்க்கானி ரஹ்மத்துல்லாஹு அலைஹி கூறியுள்ளார்.

ஸரிய்யத்து வாதியுல் குரா

01. தர்துப்னு மிர்தாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

இங்கு ஷஹீதானவர்கள் ஒன்பது பேர்கள் ஆயினும், ஒருவரின் பெயர்தான் தெளிவாகத் தெரிந்தது.

உரைனீயீன்

01. யஸார் நௌபி ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பணியாளர்.

கஸ்வத்து வாதியுல்குரா

01. மித்அம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

இவர் அபிசினியர், அடிமை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் விடுதலை செய்யப்பட்டவர்.

கஸ்வத்து கைபர்

01. அவ்ஸுப்னு ஜைப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

நாஇம் கோட்டைச் சண்டையில் ஷஹீதானார். அன்ஸார்களில் ஒருவர்.

02. அவ்ஸுப்னு பாக்பிஹ் (பாத்திக்) ரலியல்லாஹு தஆலா அன்ஹு .

அன்ஸார்களில் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

03. அவ்ஸுப்னு கானித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பொருளடக்கம்

04. அஸ்லம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

கைபரிலுள்ள ஒரு யூதரின் அபிசினிய அடிமையாகிய இவர் கைபர் போரின் போது கைபரிலேயே இஸ்லாமைத் தழுவி உடனே போரில் சம்பந்தப்பட்டு அன்றே ஷஹீதானார். அவருடைய சடலம் ஒரு கூடாரத்தினுள் வைக்கப்பட்டிருந்தது. அதனைப் பார்க்கச் சென்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உள்ளே சென்றதும் திரும்பி வந்து அவருடைய சுவர்க்கத்து மனைவி ஹுருல் ஈன் அருகில் அமர்ந்திருக்கிறார் என்று கூறினார்கள்.

05. தாபித்துப்னு வாதிலா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

06. ஹாரிதுப்னு ஹாத்திப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அன்ஸார்களில் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பத்ருப் போரின் போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஏதோ ஒரு அலுவலாக அவர் இருந்ததால் போரில் கலந்து கொள்ளவில்லை. உஹுது, அகழி ஆகிய போர்களிலும், ஹுதைபிய்யா உடன்படிக்கையிலும் கலந்து கொண்டார். கோட்டையிலிருந்து வந்த ஒரு அம்பினால் மூளை எலும்பு முறிந்து ஷஹீதானார்.

07. ரிபாஅத்துப்னு மஸ்ரூஹ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பனூ அஸத் கோத்திரத்தைச் சேர்ந்த இவர் பனூ அப்திஷ் ஷம்ஸ் கோத்திரத்தின் நேயர்.

08. ரபீஅத்துப்னு குதமிப்னி ஸன்ஜரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பனூ அஸத் கோத்திரத்தைச் சேர்ந்த இவர் முஹாஜிர்களில் ஒருவர்.அபூ யஜீத் என்பது காரணப் பெயர். பத்ரு, உஹத், அகழி போர்களிலும் ஹுதைபிய்யா உடன்படிக்கையிலும் கலந்து கொண்டார். மிகவும் குள்ளமானவர். ஆயினும், துணிச்சல் மிக்கவர். 34 வயதில் ஷஹீதானார்.

09. ஸுலைமுப்னு தாபித்திப்னி வக்ஷிப்னி ஜஃபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

யூதர்களின் பிரபல வீரனான மர்ஹபினால் காயமடைந்து ஷஹீதானார். உஹது, அகழி போர்களிலும், ஹுதைபிய்யா உடன்படிக்கையிலும் கலந்து கொண்டார். இவருடைய தந்தையும் இரு சகோதரர்களும் உஹதுப் போரில் ஷஹீதானார்கள்.

10. ஆமிருப்னு அக்வஃ (ஸனான்) ரலியல்லாஹு தஆலா

அன்ஹு.

பிரபலமான மல்யுத்த வீரர். ஸலாமத்துப்னு அம்ரிப்னி அக்வஃ ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்ற பிரபல ஸஹாபியின் சிறிய தந்தை.

11. அப்துல்லாஹிப்னு அபீ உமய்யத்தப்னி வஹ்ப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பனூ அஸதுப்னு அப்தில் உஸ்ஸா கோத்திரத்தின் தோழர். அவர்களின் சகோதரியின் புதல்வருங்கூட (வாக்கிதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் மட்டும்தான் இந்தப் பெயரைக் குறிப்பிட்டுள்ளார்).

12. அப்துல்லாஹிப்னு ஹுபைபிப்னி உஹைப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அஸ்அதி, லைதீ கோத்திரங்களைச் சேர்ந்தவர்.

13. அதிய்யுப்னு முர்ரத்திப்னி ஸுராக்கத்தப்னி குப்பாப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

குஜாஆ கோத்திரத்தைச் சேர்ந்தவர். நெஞ்சில் அம்பு தைத்து ஷஹீதானார்.

14. உர்வத்துப்னு முர்ரத்திப்னி ஸுராக்கா ரலியல்லாஹு தஆலா அன்ஹு. அன்ஸாரீ.

15. அம்மாரத்துப்னு அக்பா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பனூ இஸாரிப்னி பலீல் கோத்திரத்தைச் சேர்ந்த இவர் அம்படிபட்டு ஷஹீதானார்

16. அபூ சுஃப்யானிப்னு ஹாரிதிப்னி கைஸினில் அன்ஸாரி ரலியல்லாஹு த ஆலா அன்ஹு

17. உமைருப்னு தாபித்தினில் அன்ஸாரியில் அவ்ஸீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ரு, உஹது, அகழி போர்களிலும், ஹுதைபிய்யா உடன்படிக்கையிலும் கலந்து கொண்டவர். அபூளய்யாஹ் என்பது இவரின் காரணப்பெயர்.

18. மஸ்ஊதுப்னு ஸஃதிப்னி ஆமிரிப்னி அதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அன்ஸார்களில் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்தவர். பத்ருப் போரில் கலந்து கொண்டவர்.

19. மஹ்மூதுப்னு மஸ்லமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அன்ஸார்களில் பனூஹாரித் கோத்திரத்தைச் சேர்ந்தவர். உஹத், அகழிப் போர்களில் கலந்து கொண்டவர். கோட்டைச் சுவருக்கடியில் நின்று கொண்டிருக்கும்போது

திருகைக் கல் விழுந்து காயமடைந்து மூன்று நாள் சிரமப்பட்டு ஷஹீதானார்.

குறிப்பு : -

கைபர் போரில் ஷஹீதானவர்களின் எண்ணிக்கை ஐந்து என்றும், ஒன்பது என்றும், இருபத்தி மூன்று என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு பத்தொன்பது பேர்களின் பெயர்கள்தான் எழுதப்பட்டிருக்கின்றன. ஜீனபுப்னு ஹபீப் என்னும் பெயரை தப்ரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி மட்டும் எழுதியுள்ளார். இவர்களைத் தவிர பிஷ்ருப்னு பரா அப்னி மஃரூர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவர் நஞ்சு கலந்த இறைச்சியைச் சாப்பிட்டதால் போர் முடிந்த பின்னர் மரணமடைந்தார்.

ஸரிய்யத்து கிர்பா

O1. மிர்தாஸுப்னு நுஹைக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

பனூ பஜாரா கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

ஸரிய்யத்து இப்னி அபில் அவ்ஜா

O1. அஹ்ரஜமுப்னு அபில் அவ்ஜா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அத்லஹ் ! 1

01. கஃபுப்னு உமைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு. அன்ஸார்களிலுள்ளவர். கிஃபாரி கோத்திரத்தைச் சேர்ந்தவர். முக்கியமான ஸஹாபிகளில் ஒருவர். பெரும்பாலான போர்களுக்கு தலைவராகச் செனறவர். இப்போரில் இவர் ஒருவர் தான் எஞ்சினார் என ஒரு வரலாற்றாசிரியர் கூறியுள்ளார். அங்கு யாவரும் ஷஹீதாகி விட்டனர். ஆயினும், இவர் ஒருவருடைய பெயர்தான் கிடைத்தது எனறு இப்னு இஸ்ஹாக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் எழுதியுள்ளார்.

மூத்தா சண்டை ! 13

01. ஜைதுப்னு ஹாரிதத்திப்னி ஷர்ஹபீலில் கல்பி ரலியல்லாஹு தஆலா அன்ஹு

தந்தை வழியில் இவர் குஜாஆ கோத்திரத்தைச் சேர்ந்தவர். தாய் வழியில் பனூதைய்யி கோத்திரத்தைச் சேர்ந்தவர். குழந்தைப் பருவத்தில் இவரை வழிப்பறி திருடர்கள் அழைத்து வந்து விற்பனை செய்துவிட்டனர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

பொருளடக்கம்

இவருக்கு விடுதலை அளித்தார்கள். யாவருக்கும் முதலில் இஸ்லாமைத் தழுவிய முன்னாள் அடிமை. பத்ருப் போரில் கலந்து கொண்டவர். ஏழு படையெடுப்புகளுக்குத் தலைமை வகித்தார். இந்தப் போரிலும் அவர் தலைவராகத்தான் சென்றார். இவரைப் பற்றிய விபரம் ஹளரத் முஹம்மது ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மூன்று பாகத்திலும், பெருமானாரின் துணைவியர் என்ற நூலிலும் எழுதப்பட்டிருக்கிறது.

02. ஜஃபரு (தய்யாரு)ப்னு அபீதாலிபிப்னி அப்தில் முத்தலிப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெரிய தந்தையின் புதல்வர். இவரைப் பற்றிய விபரம் ஹளரத் முஹம்மத் ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் முதற்பாகம் அபிசினிய ஹிஜ்ரத்திலும், மூன்றாம் பாகம் கைபர் போரின் விபரத்திலும் மூத்தா போர்க்களத்திலும் எழுதப்பட்டு இருக்கிறது.

03. அப்துல்லாஹிப்னு ரவாஹத்திப்னி தஃலபத்தல் கஜ்ரஜீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

திருமதீனாவில் இஸ்லாமியப் பிரச்சாரத்திற்காக நியமிக்கப்பட்ட பன்னிரெண்டு பிரதிநிதிகளில் ஒருவர். கணவாய் உடன்படிக்கையில் பங்கு கொண்டவர். பத்ரு. உஹது, அகழி, ஹுதைபிய்யா, உம்ரத்துல் களா ஆகிய ஒவ்வொன்றிலும் கலந்து கொண்டவர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஆஸ்தானக் கவிஞர்களில் ஒருவர்.பெரும் வணக்கஸ்தர். ஒரு பிரயாணத்தின் போது கடுமையான வெய்யில். ஸஹாபாக்கள் தங்கள் கைகளை தலையில் படாமல் தடுத்துக்கொண்டிருந்தனர். அக்கடுமையான உஷ்ணத்திலுங்கூட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், இவரும் நோன்பு நோற்றிருந்தனர்.

இப்போருக்கு இவர் புறப்பட்டபோது நலமாக வரவேண்டும் என்று பிரார்த்தித்து வழி அனுப்பினர். அப்பொழுது அவர் என்னுடைய பிரார்த்தனை ரஹ்மானிடத்தில் மன்னிப்பையும், மண்டை ஓட்டைப் பிளந்து கொண்டு மூளையைத் தாக்கிடும்படியான வாள் அடியையும், வாளும் அம்பும் தாக்கி எம் மார்பைத் துளைத்து இருதயத்தை பிளப்பதையும் கேட்கிறேன். என் உடலத்தை பார்க்கும் மனிதர்கள் சபாஷ் நல்ல வீரன்,

நன்கு உழைத்தான் என்று கூறவேண்டும் என்று கேட்கிறேன் என்ற கருத்துள்ள செய்யுள்களைப் பாடிக் கொண்டு விடை பெற்றுக் கொண்டார்.

04. ஜாபிருப்னு அபீ ஸஃஸஅத்தப்னி ஜைதினில் மாஜினியில் அன்ஸாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

05. அபூ கிலாபிப்னி அபீ ஸஃஸஅத்தப்னி ஜைதினில் மாஜினியில் அன்ஸாரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு. இவரும் 4-வது இலக்கத்தில் உள்ளவரும் சகோதரர்கள். இவ்வருடைய சகோதரர்களில் ஒருவரான கைஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரை பத்ருப் போரின் போது பின்னணிப் பிரிவிற்குத் தளபதியாக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நியமித்தார்கள். மற்றொரு சகோதரரான ஹாரித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு ஹளரத் அபூபக்சர் ஸித்தீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் காலத்தில் நடந்த யமாமா போரில் ஷஹீதானார்.

06. ஸுராக்கத்துப்னு அம்ரிப்னி அத்திய்யத்தில் அன்ஸாரியில் நஜ்ஜாரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ரு, உஹது, அகழி, ஹுதைபிய்யா, உம்ரத்தல்களா ஆகியவற்றிலும் கலந்து கொண்டவர்.

07. உப்பாதுப்னு கைஸிப்னி அப்ஸத்தல் அன்ஸாரியில் கஜ்ரஜீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ருப் போரில் தம் சகோதரர் ஸுபைஉப்னு கைஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு உடன் சேர்ந்து வந்து கலந்து கொண்டார்.

08. வஹ்புப்னு ஸஃதிப்னி அபீ ஸரஹில் கர்ஷிய்யில் ஆமிரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

உஹது, அகழி, ஹுதைபிய்யா, கைபர் ஆகியவற்றில் கலந்து கொண்டார்.

09. மஸ்ஊதுப்னு ஸுவைதிப்னி ஹாரிதத்தில் கர்ஷிய்யில் அதவி ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

பனூ அதீ கோத்திரத்திலிருந்து ஹிஜ்ரத்துச் செய்த எழுபது பேர்களில் ஒருவர்.

10. மஸ்ஊதுப்னுஅஸ்வதப்னில் ஹாரிதா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

9-வது இலக்கத்திலுள்ளவருக்கு ஒன்று விட்ட சகோதரர். ஹுதைபிய்யா உடன்படிக்கையில் சம்பந்தப்பட்டவர்.

11. உபாதத்துப்னு கைஸிப்னி ஜைதிப்னி உமய்யத்தல்

அன்ஸாரிய்யில் கஜ்ரஜீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பத்ரு, உஹது, அகழி, ஹுதைபிய்யா, கைபர் ஆகியவற்றில் கலந்து கொண்டவர்.

12. ஸுவைதுப்னு அம்ர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

8-வது இலக்கமுள்ளவருடன் இஸ்லாமிய சகோதரத்துவத்தில் இணைக்கப்பட்டவர்.

13. ஹுவைஜத்துப்னு புஹைரிப்னில் ஆமிரில் லப்தீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

ஃபத்ஹு மக்கா : 9

01. **ஹுபைஷுப்னு அஷ்அரிப்னி முன்கிதிப்னி ரபீஆ ரலியல்லாஹு தஆலா அன்ஹு**

குஜாஆ கோத்திரத்தைச் சேர்ந்தவர். (காலிதுல் அஷ்கதுல் குஜாமீ)

02. குர்ஜுப்னு ஜாபிரிப்னி ஹஸீல் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் குரைஷியரிலுள்ளவர். முஹாஜிர். இவ்விரு வரும் வழி தவறி தனிமையில் அகப்பட்டுக்கொண்டதால் தாக்கப்பட்டு ஷஹீதானார்கள்.

ஹுனைன் யுத்தம் 16

01. அய்மனுப்னு அப்த் ஹபஷீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தந்தையின் சொத்து எனக் கிடைத்த உம்மு அய்மன் ரலியல்லாஹு தஆலா அன்ஹா என்ற அடிமைப் பெண் வயிற்றில் அப்து என்ற அபிசினியருக்குப் பிறந்தவர். இவருடைய பெயரைத் தழுவியே இவருடைய தாயாருக்கு உம்மு அய்மன் என்ற பெயர் வந்தது. இவருடைய தந்தை அப்துக்குப் பின்னர் ஜைதுப்னு ஹாரிதா ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை மணந்து உஸாமா ரலியல்லாஹு தஆலா அன்ஹு என்பவரைப் பிரசவித்தார். இப்போரில் பகைவரின் தாக்குதலுக்கு ஆற்றாமல் முஸ்லிம்கள் சிதறி ஓடிய போது அவர்களுடன் சேராமல் போர்க்களத்தில் உறுதியாக நின்று போரிட்ட வீரர்களில் இவரும் ஒருவர்.

02. ஹுவைரிதுப்னு அப்தில்லாஹிப்னி ஹலப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அன்ஸார்களிலுள்ளவர். கிஃபார் கோத்திரத்தைச் சேர்ந்தவர். அபுல் லஹ்ப் என்பது காரணப் பெயர்.

விக்கிரஹங்களுக்குப் படைத்த இறைச்சிகளை இவர் இஸ்லாமைத் தழுவுவதற்கு முன்னரும் அருந்தியதில்லை.

03. முர்ரத்துப்னு சுராக்கா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

04. சுராக்கத்துப்னு ஹாரிதிப்னி அதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் பனூ அஜ்லான் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

05. சுராக்கத்துப்னு ஹுப்பாபினில் அன்ஸாரி ரலியல்லாஹு தஆலா அன்ஹு

06. யஜீதுப்னு ஜம்அத்தப்னி அஸ்வதிப்னி முத்தலிப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அன்னை உம்மு ஸல்மா ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்களின் சகோதரியின் புதல்வர். குரைஷித் தலைவர்களில் ஒருவர். சமூகப் பொதுக் காரியங்களில் இவருடைய ஆலோசனையைக் கேட்காமல் குரைஷியர் எதையும் செய்வதில்லை.

தாயிஃப் போர் ! | 3

01. ஹாரிதுப்னு ஸஹ்லிப்னி அபீ ஸஃஸஆ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அன்ஸார்களில் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்த இவரின் இரு சிறிய தந்தையர்கள் மூத்தா போரிலும் ஒரு சிறிய தந்தை யமாமா போரிலும் ஷஹீதானார்கள்.

02. ஹுப்பாபுப்னு ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

03. அர்பத்துப்னு ஹுப்பாபிப்னி ஜுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இரண்டாவது இலக்கத்தில் குறிப்பிடப்பட்டவரின் புதல்வராகிய இவர் பனூ உமய்யா கோத்திரத்தாருக்குத் தோழர்.

04. ஜுலைஹத்துப்னு அப்தில்லாஹிப்னி ஹாரிதில் லைதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

05. ரக்கீமுப்னு தாபித்தினில் அன்ஸாரியில் அவ்ஸீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

06. தாபித்துப்னு ஜதஇனில் அன்ஸாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

கனைவாய் உடன்படிக்கையிலும், புஃறுப் போரிலும் கலந்து கொண்டவர்.

07. ஸஈதுப்னு ஸஈதிப்னி ஆஸிப்னி உமய்யத்தல் குரஷிய்யில் உமவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

08. அப்துல்லாஹிப்னு அபீ உமய்யத்திப்னி முகய்யரா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அன்னை உம்மு ஸலமா ரலியல்லாஹா தஆலா அன்ஹா அவர்களின் மற்றொரு தாயின் புதல்வர்.

09. அப்துல்லாஹிப்னு ஹாரிஸிப்னி அப்தில் முத்தலிப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

நபீ ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெரிய தந்தையின் புதல்வர்.

10. ஸாயிபுப்னு ஹாரிதிப்னி கைஸிப்னி அதீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் குறைஷியரில் பனூ ஸஹ்ம் கோத்திரத்தைச் சேர்ந்தவர். தாயிஃப் போரில் இவர் காயம் அடைந்தார். ஷஹீதாகவில்லை. ஹிஜ்ரி 13ம் வருடத்தில் நிகழ்ந்த பஹ்ல் போரில் ஷஹீதானார் என்றும் சிலர் கூறியுள்ளனர்.

11. அப்துல்லாஹ்பின் ஆமிர்பின் ஸஃது அதவீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

12. அம்ருப்னு கய்ஸிப்னி ஸைதிப்னி வக்ஷிப்னி தஃலபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

உஹதுப் போரிலும் அதற்குப் பின்னர் நிகழ்ந்த எல்லாப் போர்களிலும் கலந்து கொண்டவர். பனூ அதீ கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

13. முன்திருப்னு அப்திப்னி கல்லாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

பன்னிரெண்டாவது இலக்கத்தில் குறிப்பிடப்பட்டவரின் புதல்வர்.

இதர யுத்தங்களில் உயிர் நீத்தவர்கள் : 12

01. குர்ரத்துப்னு உத்ப (அல்ப) நிஹல் அன்ஸாரியில் அஷ்ஹலீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

02. மாலிக்குப்னு கலைபிப்னி அம்ரில் ஜுனா ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

உஹதுப் போரில் தம்முடைய சகோதரர் நுஃமான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு உடன் குதிரைப் படையில் பணியாற்றினார்.

03. முகைரீக் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

இவர் யூதர்களிலுள்ள பனூ நுளைர் கோத்திரத்தைச் சேர்ந்த அறிஞர். அப்போரில் யூதர்கள் சூழ்ச்சி செய்த போது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மெய்யான நபி என்பதைத் தெரிந்து கொண்டே அவரை எதிர்ப்பது கூடாது என யூதர்களைக் கண்டித்து விட்டு உஹதுப் போரில் முஸ்லிம்களுடன் சேர்ந்து போரிட்டு ஷஹீதானார். போரில் உயிர் துறந்தால் தம்முடைய சொத்துக்கள் யாவற்றையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒப்படைத்து விட வேண்டும் என வஸிய்யத்துச் செய்து விட்டு போரில் கலந்து கொண்டார். இவர் வஸியத்துப்படி இவருடைய சொத்துக்கள் யாவற்றையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சேர்க்கப்பட்டன.

04. தாபித்துப்னு நுஃமானிப்னி உமய்யா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

அபூ ஹன்னா என்பது காரணப் பெயர். பத்ருப் போரில் கலந்து கொண்டவர்.

05. ஸஹ்லுப்னு ருமிய்யிப்னி வக்ஷிப்னி ஜஃபா ரலியல்லாஹு தஆலா அன்ஹு

06. யஜீதுப்னு ஸஈதினில் கந்தீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

ஸாயிப் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் தந்தை

07. பிஷ்ருப்னு பராஅப்னி மஃருரினில் அன்ஸாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

கைபரில் நஞ்சூட்டப்பட்ட ஆட்டின் இறைச்சியைச் சாப்பிட்டதால் உயிர் துறந்தவர்.

08. துபைலுப்னு நுஃமானிப்னி கனஸா அல்அன்ஸாரீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

09. மஸ்ஊதுப்னு கல்தத்தல் அன்ஸாரிய்யில் ஸர்க்கீ ரலியல்லாஹு தஆலா அன்ஹு

10. அப்துல்லாஹி (ஹக்கமு)ப்னு ஸஈதிப்னில் ஆஸிப்னி உமய்யா ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

பத்ருப் போரில் கலந்து கொண்டவர். குரைஷிக் குலத்தைச் சேர்ந்தவர்.

பொருளடக்கம்.

11. மஸ்ஊதுப்னுல் அஸ்வதிப்னி ஹாரித் ரலியல்லாஹு தஆலா அன்ஹு.

குரைஷிக் கோத்திரத்தில அதீ கிளையைச் சேர்ந்தவர்.

12. ஹுபாருப்னு ஸுஃப்யானிப்னி அப்தில் அஸத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு

குரைஷியரில் மக்ஜூமி கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவர்கள் யாவரும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலேயே சன்மார்க்கப் போரில் ஷஹீதானார்கள் என்பதில் எவருக்கும் கருத்து வேற்றுமை இல்லை. என்றாலும் எந்தப் போரில் அவர்கள் ஷஹீதானார்கள் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை.

போர் ஒழித்தல்

அரப் நாட்டிலுள்ள மக்கள் அற்பக் காரணங்களுக்காவும் கூட நூற்றுக்கணக்கான வருடங்கள் போரிடுவர். மனித உயிர்கள் அவர்களுக்கு சாதாரண பொருளாகக் கூட இருக்கவில்லை. அவர்களின் போர் ஆவேசத்தைப் பற்றி அன்ஸார்களின் பூர்வீக வரலாறு, ஹர்புல் ஃபுஜ்ஜார், ஹர்புல் ஃபுகாத் ஆகியவை பற்றி எம்மால் மொழி பெயர்க்கப்பட்ட ஹளரத் முஹம்மத் ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் முதலாவது , இரண்டாவது பாகத்தில் காணலாம்.

நாகரீக முன்னேற்றம் அடைந்ததாகக் கூறப்படுகிற கி.பி. இருபதாம் நூற்றாண்டில் போயர் யுத்தம், ரஷ்ய ஜப்பான் யுத்தம், துருக்கி - இத்தாலி யுத்தம், துருக்கிஸ்தான் யுத்தம், முதல் ஐரோப்பிய மகா யுத்தம், இத்தாலி அபிசினிய யுத்தம், சீன - ஜப்பான் யுத்தம், இரண்டாவது ஐரோப்பிய மகா யுத்தம் ஆகியவையும், சுதந்திரப் போர்கள் பலவும் நடைபெற்றிருக்கின்றன. இவை யாவற்றுக்கும் அடிப்படைக் காரணம் நாடு பிடித்தல், நாடாளுதல், ஆதிக்கம் செலுத்துதல், பழி வாங்கல் போன்றவைகளேயாகும். இவற்றிற்காகப் போரிடுவதை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை.

அநீதி செய்யப்பட்டோருக்கு உதவுதல், பலவீனர்கள், தாழ்த்தப்பட்டோர், பெண்கள், குழந்தைகள், முதலியோரை அக்கிரமக்காரர்களிடமிருந்து விடுவித்தல், பற் பல மதங்களும் சமூகங்களும் நியாயமான முறையில் கூடி வாழ வகை செய்தல் போன்றவற்றிற்கு கடைசி ஆயுதமாகப் போரை மேற்கொள்ள இஸ்லாம் அனுமதிக்கிறது. இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவு, இல்லையேல் போருக்கு வா என்று இஸ்லாம் சொல்லவில்லை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நபிப் பதவியை அடைந்து பதினைந்து வருட காலம் வரையில் போருக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை. அக்காலத்தில் நூற்றுக்கணக்கில் முஸ்லிம்கள் இருந்தனர். இறைவனை வணங்கவும், அமைதியாக வாழவும் வெளிநாடுகளுக்குக்காவது செல்லலாம் என்று தான் அனுமதி கொடுக்கப்பட்டது.

ஸஹாபிகள் அபிசினிய நாட்டிற்கு இரு முறை சென்று குடியேறினர். மூன்றாவதாக திருமதீனாவில் குடியேறினர்.

அமைதியை நாடி அந்நிய நாடுகளுக்குச் சென்றவர்களையும் கூட அயர்ந்திருக்க விடாமல் போருக்கு வந்த பின்னர் தான் தற்காப்புப் போருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

أُذِنَ لِلَّذِينَ يُقَٰتَلُونَ بِأَنَّهُمْ ظُلِمُوا۟ ۚ وَإِنَّ ٱللَّهَ عَلَىٰ نَصْرِهِمْ
لَقَدِيرٌ ﴿٣٩﴾ ٱلَّذِينَ أُخْرِجُوا۟ مِن دِيَٰرِهِم بِغَيْرِ حَقٍّ إِلَّآ أَن
يَقُولُوا۟ رَبُّنَا ٱللَّهُ ۗ وَلَوْلَا دَفْعُ ٱللَّهِ ٱلنَّاسَ بَعْضَهُم بِبَعْضٍ لَّهُدِّمَتْ
صَوَٰمِعُ وَبِيَعٌ وَصَلَوَٰتٌ وَمَسَٰجِدُ يُذْكَرُ فِيهَا ٱسْمُ ٱللَّهِ
كَثِيرًا ۗ وَلَيَنصُرَنَّ ٱللَّهُ مَن يَنصُرُهُۥٓ ۗ إِنَّ ٱللَّهَ لَقَوِىٌّ
عَزِيزٌ ﴿٤٠﴾

போர் தொடுக்கப்பட்டோருக்கு (ஓர் இறை நம்பிக்கையாளர்களுக்கு) நிச்சயமாக அவர்கள் அநியாயம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதனால் (அவ்வாறு போர் தொடுத்த நிராகரிப்பாளர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு) அனும்தியளிக்கப்பட்டிருக்கிறது; நிச்சயமாக அவர்களுக்கு உதவி செய்ய அல்லாஹ் பேராற்றலுடையவன். அவர்கள்

எத்தகையோரென்றால், தம் வீடுகளை விட்டும், நியாயமின்றி அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள், எங்களுடைய றப்பு அல்லாஹ்தான் என்று அவர்கள் கூறியதைத் தவிர (வேறு எதற்காகவும் இல்லை) மனிதர்களை - அவர்களில் சிலரை சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்கவில்லையானால் (அந்தந்தக் காலத்தில் இருந்து வந்த) ஆசிரமங்களும், கிறிஸ்துவ ஆலயங்களும், யூதக் கோயில்களும்,மஸ்ஜிதுகளும் இவற்றில் அல்லாஹ்வின் திருப்பெயர்கள் அதிகமதிகம் நினைவு கூறப்படுபவை (யாவும்) இடிக்கப்பட்டு போயிருக்கும் ; அல்லாஹ் தனது மார்க்கத்துக்கு உதவி செய்கிறவனுக்குத் திட்டமாக உதவி செய்வான் ; நிச்சயமாக அல்லாஹ் வலிமை மிக்கவன் ; யாவற்றையும் மிகைத்தவன் 22:39,40.

وَمَا لَكُمْ لَا تُقَٰتِلُونَ فِى سَبِيلِ ٱللَّهِ وَٱلْمُسْتَضْعَفِينَ مِنَ ٱلرِّجَالِ
وَٱلنِّسَآءِ وَٱلْوِلْدَٰنِ ٱلَّذِينَ يَقُولُونَ رَبَّنَآ أَخْرِجْنَا مِنْ هَٰذِهِ ٱلْقَرْيَةِ
ٱلظَّالِمِ أَهْلُهَا وَٱجْعَل لَّنَا مِن لَّدُنكَ وَلِيًّا وَٱجْعَل لَّنَا مِن لَّدُنكَ
نَصِيرًا ﴿٧٥﴾

அல்லாஹ்வின் பாதையிலும் (கொடுமைக்கு ஆளான) ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோரில்

பலவீனமானவர்களின் (பாதுகாப்பு) விஷயத்திலும் நீங்கள் போரிடாமலிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? (பலவீனமான) அவர்கள் எங்கள் றப்பே, இந்த ஊரை விட்டும் எங்களை நீ வெளியேற்றி விடுவாயாக; அதில் வசிப்பவர்கள் அநியாயக்காரர்களாக இருக்கின்றனர். உன்னிடத்திலிருந்து எங்களுக்கு பொறுப்பேற்பார் ஒருவரை எங்களுக்கு நீ ஆக்கிடுவாயாக; இன்னும் உன்னிடத்திலிருந்து உதவியாளர் ஒருவரையும் எங்களுக்கு நீ ஆக்கிடுவாயாக என்று கூறிக் கொண்டு இருக்கின்றனர். (4:75)

இக்கட்டளைப்படி பலவீனர்களான ஆடவர்கள், பெண்கள், குழந்தைகள், ஆகியவர்களை அக்கிரமஸ்தர்களை விட்டும் காப்பாற்றுவதற்காகவும், யூதர், கிறிஸ்துவர், பாரசீகர், முஸ்லிம்கள் ஆகிய பல மதத்தினரின் வழிபாட்டுத் தலங்கள் அக்கிரமக்காரர்களால் இடிக்கப்படாமல் காப்பாற்றப்படுவதற்காகவும், முஸ்லிம்கள் ஆயுதபாணிகளாக வேண்டும் என்றுதான் கட்டளையிடப்பட்டு இருக்கிறார்கள். நாட்டின் எல்லைப்புறத்தை விஸ்தரிப்பதற்காக பிறரை அடக்கியாள்வதற்காக வாளேந்தும்படி கட்டளையிடப்படவில்லை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் 'அவர்கள் தங்களின் வாழ்நாள் முழுவதிலும் எடுத்துக் கொண்ட இராணுவ

நடவடிக்கைகளும் அதற்கான காரணங்களும் அந்நடவடிக்கைகளால் ஏற்பட்ட இரு தரப்பு சேதங்களும் புள்ளி விபரத்துடன் மேலே தரப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒரு சம்பவமாவது அல்லது ஒரு தனி நபர் சண்டையாவது மத வித்தியாசத்திற்காக நடத்தப்பட்டது. கொல்லப்பட்டது என்பதை நிரூபிக்க முடியுமா? யாராவது பலவந்தமாக மதமாற்றம் செய்யப்பட்டார் என்று சொல்ல முடியுமா? என்பதைச் சிந்திக்க வேண்டும்.

மத வித்தியாசத்திற்காக முஸ்லிம்கள் வாளேந்த வில்லை என்பதற்கு யூதர்கள், கிறிஸ்துவர்கள், முஷ்ரிக்குகளுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்து கொண்ட நேச ஒப்பந்தங்கள், நடுநிலை ஒப்பந்தங்கள், போர் நிறுத்த ஒப்பந்தங்கள் முதலியவை சம்பந்தமாக எம்மால் மொழி பெயர்க்கப்பட்ட ஹளரத் முஹம்மத் ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மூன்று பாகங்களிலும் விபரிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தங்களில் ஒரு நிபந்தனையிலாவது மத துவேஷ நிபந்தனை ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா? இதற்கு நேர்மாறாக அந்தந்த மத ஸ்தாபனங்கள் கௌரவிக்கப்படுவதற்கான நிபந்தனைகளே இருக்கின்றன. இவ்விதமான உடன்படிக்கைகளை இதர மதத்தலைவர்கள் செய்து பிற மத ஸ்தாபனங்களைக் காப்பாற்றிய சம்பவங்கள் உலகில் அதற்கு முன்னால் எங்காவது

இருந்திருக்கின்றனரா? என்பதை நிரூபிக்க எவராலும் இயலாது.

மத வித்தியாசத்திற்காக போர் தொடுக்கக்கூடாது. அது அநாகரிகமான செயல், மத ஸ்தாபனங்களை இடிக்கக் கூடாது. ஒவ்வொருவருக்கும் மத சுதந்திரமுண்டு. அதனை கௌரவிக்க வேண்டும் என்ற உணர்வு உலக மக்களுக்கு உண்டானது கூட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் செய்கையில் காட்டிய முன் மாதிரிக்குப் பின்னர்தான் என்பது சரித்திரங் கண்ட உண்மை.

இந்நீதிகளை இன்றைய உலகம் சர்வதேசச் சட்டமாக அங்கீகரித்துக் கௌரவிக்கின்றன. ஆயினும், சில சமூகங்களும் போரில் ஈடுபட்டவர்களும் மத ஸ்தாபனங்கள், வணக்கஸ்தலங்கள் முதலியவற்றை ஆக்கிரமித்துக் கொள்கின்றனர். குண்டுகளைப் பொழிந்து தரை மட்டமாக்குகின்றனர். அவற்றை எதிரிகள் மத ஸ்தாபனங்கள் என்ற அந்தஸ்தில் வைக்காமல் இராணுவ முகாம்களாக மாற்றினர். அதனால்தான் நாங்கள் அவற்றை ஆக்கிரமித்தோம்; குண்டு வீச்சுக்கு இரையாக்கினோம் என்று சொல்லிக் கொள்கின்றனர்.

இவ்வாறே முதியோர்கள், நோயாளிகள், பெண்கள், குழந்தைகள், உட்பட போரில் ஈடுபடாத சாமான்யர்களை ஒன்றுஞ் செய்யக்கூடாது. அவர்களுக்கு எவ்விதமான இடையூறும்

செய்யக் கூடாது என்ற சட்டத்தையும் இவ்விதிகளைக் குறித்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் தளபதிகளுக்கு விதித்த கட்டளைகளிலும் திருமக்காவின் வெற்றியின் போது விடுத்த பிரகடனத்திலும் காணலாம். எம்மால் மொழி பெயர்க்கப்பட்ட ஹஸரத் முஹம்மது ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மூன்று பாகங்களிலும் போர்கள் பற்றிய அத்தியாயத்தில் இவ்விபரங்கள் இருக்கின்றன.

இவற்றைத் தவிர இக்காலத்தில் (அல்டி மேட்டம்) இறுதிக் கெடு விதிக்கின்றனர். இதுவும் கூட அன்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் தான் முதன் முதலாக உலகுக்கு அறிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட தவணையை நிர்ணயித்து இறுதிக் கெடு விதிப்பது சம்பந்தப்பட்ட நாடுகள் நன்கு ஆலோசனை செய்து சமரசம் செய்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குவதுதான் இதன் நோக்கம். இதனை அல்லாஹுதஆலா தனது திருமறையில் சூறத்துத் தௌபாவில் நான்கு மாதங்களுக்கு நாட்டில் பயணம் செய்து கொள்ளுங்கள் என்ற வசனத்தின் மூலம் அறிவித்துள்ளான். முஷ்ரிக்குகளுக்கு இஸ்லாம் அளித்த இறுதிக் கெடுவில் நான்கு மாத தவணை கொடுக்கப்பட்டது. இவ்வளவு நீண்ட கால தவணையை போரிடும் நாடுகள் கொடுத்ததாகத் தோன்றவில்லை.

இவ்வாறு (அல்டிமேட்டம்) இறுதிக் கெடு கொடுக்கப்பட்ட

பொருளடக்கம்

பின்னர் முறைப்படி போர் தொடங்கிவிட்டால், உங்களுடன் ஒப்பந்தம் செய்திருப்பவர்களின் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், போர்க்களத்திற்கு வந்த பின்னர் உங்களை எதிர்த்துச் சண்டையிடவோ அல்லது தங்கள் சமூகத்தாரை எதிர்த்துச் சண்டையிடவோ விருப்பமில்லாமல் நடுநிலை வகிப்பவர்கள், உங்களை விட்டுப் பிரிந்து உங்களை எதிர்த்துச் சண்டையிடாமல் இருந்து கொண்டு உங்களிடம் சமாதானத்திற்கு வருபவர்கள் ஆகியவர்களை நீங்கள் தாக்கலாகாது' என்ற போர் விதிகளையும் திருக்குர்ஆன் கூறி இருக்கிறது. இவைகள் யாவும் இக்கால போர் விதிகளில் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆயினும், இஸ்லாமிற்கு முன்னர் இவைகள் செயல்படவில்லை என்பது உண்மை. இச்சட்ட விதிகளுக்கு உட்பட்ட முஸ்லிம்கள் இஸ்லாமைத் தழுவாதவர்களை வாள் முனையில் நிர்ப்பந்தித்து இஸ்லாமைப் பரப்பினர் என்று கூற முற்படுவது பொருந்துமா? என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆகவே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் நடந்த போர்கள் அனைத்துக்கும் அடிப்படை மதம் அல்ல என்பது நியாய புத்தி படைத்தவர்களுக்கு புரியாததன்று.

பிற்சேர்க்கை

இந்நூல் அறுபதுகளில் எழுதப்பட்டது. ஆப்கன் மக்கள் தொகை ஒரு கோடியே எண்பது இலட்சம் பேர்தான். ஆப்கன் –

ரஷ்ய போரில் 15 இலட்சம்பேர் மாண்டனர். 10 இலட்சம் பேர் காயமடைந்தனர். 60 இலட்சம் பேர் அகதிகளாயினர். அதன் பின்னர் நடந்த அமெரிக்காவின் தலைமையில் கீழ் 37 நாடுகளைச் சேர்ந்த பன்னாட்டுப் படைகள் கொத்துக் கொத்தாக மனிதர்களைப் பூண்டோடு ஒழித்தது. விமானங்கள் மூலம் மாநகரங்கள் மண் மேடாயின. ஏவுகணைகளால் இஷ்டம் போல் ஏதுமறியாத அப்பாவிகள் கொல்லப்பட்டனர். கடந்த 30 ஆண்டுகளாக ஆப்கனை வல்லரசுகள் அழித்து வருகின்றன.

இராக்கின் மொத்த மக்கள்தொகை இரண்டரைக் கோடிப் பேர். இதில் இது வரை இருபத்தி ஆறு இலட்சம் முஸ்லிம்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஐந்து இலட்சம் குழந்தைகள் உயிர் இழந்திருக்கிறார்கள். நாற்பது இலட்சம் குழந்தைகள் போதிய உணவில்லாமல் பிறக்கும் போதே ஊனமாகி விடுகின்றனர். கடந்த 17 ஆண்டு கால தாக்குதலில் பல தலை முறைகளை அமெரிக்கா அழித்திருக்கிறது.

அல்ஜீரியா, சோமாலியா போன்ற நாடுகளும் அமெரிக்கா ஏகாதிபத்தியத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. அமெரிக்காவின் அடுத்த இலக்கு ஈரான் மற்றும் சிரியா ஆகிய நாடுகளாகும். இவற்றிற்கெல்லாம் அடிப்படைக் கரணம் என்னவென்பதை வாசகர்கள் நன்கு அறிவர்.

[redacted] புதல்வர்

ஸல்லல்லாஹு அலா முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

பொருளடக்கம்

நூல் விபரம்

நூலின் பெயர் : நபிகளார் (ஸல்) காலத்துயுத்தங்கள்

மூல நூல் : ரஹ்மத்துன் லில்ஆலமீன்

மூலநூலாசிரியர் : மர்ஹூம் அல்ஹாஜ்.
காரீ. முஹம்மது சுலைமான் ஸல்மான்
மன்சூர்பூரி அவர்கள், முதல் வகுப்பு நீதிபதி,
பாட்டியாலா சமஸ்தானம்

மொழி பெயர்ப்பு : எஸ். எஸ் முஹம்மது அப்துல் காதிர்
சாஹிப் பாக்கவி (ரஹ்)

விலை : ரூ. 25. 00

முதல் பதிப்பு : ஜூன் – 2008

பக்கங்கள் : 168 பிரதிகள் : 1000

அச்சிட்டோர் : ஆசியா கிராபிக்ஸ்
8 மயிலை பெரிய தம்பி தெரு,
சென்னை– 600 001

வெளியீடு : இஸ்லாமிய நூல்கள்
மலிவுப்பதிப்பு பப்ளிஷர்ஸ் & புக் செல்லர்ஸ்,
62/1 மலையப்பன் தெரு, மண்ணடி,
சென்னை – 600 001. போன் : 65287503
செல் : 9840273818

பொருளடக்கம்

பதிப்புரை

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهُ وَنَسْتَعِيْنُهُ وَنَسْتَغْفِرُهُ وَنُؤْمِنُ بِهِ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّاٰتِ اَعْمَالِنَا مَنْ يَهْدِهِ اللّٰهُ فَلاَ مُضِلَّ لَهُ وَمَنْ يُضْلِلْهُ فَلاَ هَادِيَ لَهُ وَنَشْهَدُ اَنْ لاَ اِلٰهَ اِلاَّ اللّٰهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَهُ وَنَشْهَدُ اَنَّ سَيِّدِنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

அருளாளன் அன்பினன் அல்லாஹ்வின் திருப்பெயரால்

உலகம் எண்ணிலடங்காத எத்தனையோ வரலாறுகளைக் கண்டு வருகிறது. அவற்றுள் எத்தனை முறை படித்தாலும் சலிப்பு ஏற்படுத்தாத வரலாறு - மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் வரலாறு - பல்வேறு கோணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் வரலாறு - அன்றன்று அணுகப் புதிய சுவையைக் குன்றாமல் கொடுத்து வரும் வரலாறு - உலகத்தில் வரலாறுகளை உருவாக்கிக் கொண்டிருக்கிற வரலாறு - உலகுக்கு ஒளியாய், வழியாய் ஒப்பற்ற அருட்கொடையாய்த் திகழ்ந்து வரும் தன்னேரில்லாத தலைவரின் தனிச்சிறந்த

வரலாறு [illegible] நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வரலாறுதான் என்பதை அறிஞர் பெருமக்கள் அறிவர்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வரலாறு நமது தாய்மொழியாம் தமிழ்மொழியில் பல அறிஞர்களாலும் எழுதப்பட்டு வெளிவந்துள்ளது. அவற்றுள் மௌலானா எஸ்.எஸ்.முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் பாக்கவி (ரஹ்) அவர்களால் சுமார் ஆயிரம் பக்கங்களில் மூன்று பாகங்களாக வெளிவந்த ஹளரத் முஹம்மது ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எனும் நூலும் குறிப்பிடத்தக்கதாகும். இது தவிர மகா உண்மையாளர், நபிகள் கோன், திருத்தூதர், நற்குண நாதர் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றி மௌலானா அவர்கள் இருபதுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் எழுதியுள்ளார்கள்.

மேலும், பெருமானாரின் பரம்பரை, பெருமானாரின் துணைவியர் என்ற நூலும் மௌலானா அவர்களால் எழுதப்பட்டு வெளிவந்தது. தற்போது அறுபதுகளிலேயே எழுதப்பட்டு இதுவரை வெளிவராத நபிகளார் காலத்து யுத்தங்கள் எனும் நூலை வெளியிடுகிறோம். அல்ஹம்துலில்லாஹ்

மௌலானா எஸ்.எஸ்.ஹஜ்ரத் அவர்கள்

பொருளடக்கம்

இஸ்லாமியத்தின் அனைத்துக்கலைகளையும் தாய்மொழியாம் தமிழ்மொழியில் எழுதிக் குவித்த எழுத்துலக ஜாம்பவான். இஸ்லாமிய இலக்கியங்களை தமிழில் எழுதுவதிலேயே தனது உடல் பொருள் ஆவியனைத்தையும் அர்ப்பணித்த தியாகமேரு.

அவர்கள் எழுதி முடித்தது நூற்றுக்கும் மேற்பட்டவைகள். மௌலானா அவர்களால் எழுதப்பட்ட தஜ்ரீதுல் ஜாமிஇஸ் ஸஹீஹில் புகாரீ, இமாம் நவவீ (ரஹ்) அவர்களின் நாற்பது ஹதீஸுகள் (விளக்கவுரையுடன்) திருக்குர்ஆன் தொகுக்கப்பட்ட வரலாறு ஆகிய நூற்களை வெளியிட்டோம். அதன் தொடராக இந்நூலையும் வெளியிடுவதில் பெருமையடைகிறோம்.

அன்பர்கள் வாங்கிப்படித்து ஆதரவளிப்பதுடன் சகோதர சமயத்தினருக்கும் வாங்கி அன்பளிப்புச் செய்ய வேண்டுகிறேன். இந்நூலை வெளியிட அனுமதியளித்த மௌலானாவின் புதல்வர் மௌலவி, அல்ஹாஜ் எஸ்.எஸ்.எம்.முஹம்மது ஜாபர் ஜமாலி அவர்களுக்கும் அழகிய முறையில் அச்சிட்டுத்தந்த தம்பி ஷாஜஹான் அவர்களுக்கும் ஆயிரக்கணக்கான வாசகப் பெருமக்களுக்கும் உளமார்ந்த நன்றிகள். வஸ்ஸலாம்

நன்றியுடன்

சன்மார்க்க ஊழியன்

ஹாஜி எஸ்.முஸ்தஃபா கமால்,

சென்னை.

பொருளடக்கம்

முன்னுரை

بسم الله الرحمن الرحيم

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهُ وَنَسْتَعِيْنُهُ وَنَسْتَغْفِرُهُ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ
وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّاٰتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا
مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا
شَرِيْكَ لَهٗ وَنَشْهَدُ اَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

இவ்வுலகிலுள்ள மக்கள் யாவரையும் அல்லாஹ்வுக்கு நெருக்கமான நல்லடியார்களாக சேர்த்து வைத்து, அல்லாஹ்வுக்கு அடியார்கள் ஆற்ற வேண்டிய கடமைகளையும் கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும், பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் தம் பெற்றோர்களுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் போன்று அடியார்கள் தங்களுக்குள் பரஸ்பரம் நடந்து கொள்ள வேண்டிய கடமைகளை உணர்த்தி, அவர்களுக்கு நல்லொழுக்கங்களைப் போதித்து, சன்மார்க்க நெறியைக் காண்பிப்பதற்காகவே நபிமார்கள் எனும் இறைத்தூதர்கள் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டனர்.

இவற்றைச் செய்வதற்கு உபதேசமே போதுமானது.

இவற்றிற்காக வாளேந்திப் போரிட வேண்டிய அவசியமில்லை. ஆயினும், இறைத்தூதர்களில் ஹளரத் தாவூது (அலை) போன்ற சில இறைத்தூதர்களின் வரலாற்றில், அவர்கள் போர்க்களம் சென்ற செய்திகளை திருக்குர்ஆனில் படிக்கிறோம்.

அவ்வாறே நபி (ஸல்) அவர்களின் வரலாற்றிலும் அவர்கள் போர்க்களம் சென்ற செய்திகள் இறைவேதமான திருக்குர்ஆனில் பதிவு செய்யப்பட்டுள்ளது. என்றாலும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போர்க்களம் சென்றதை முஸ்லிம் அல்லாதாரில் சிலர் பெரிதுபடுத்தி, இஸ்லாம் வாள் பலத்தால்தான் பரவிற்று என்று பிரச்சாரம் செய்கின்றனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீஸ்களைத் தொகுத்த ஹதீஃஸ் கலை வல்லுநர்களும், போர்கள் (கிதாபுல் மஙாஜீ) என்று தனித்தலைப்பிட்டு எழுதியுள்ளனர். இப்போர்கள் நிகழ்வதற்குக் காரணம் என்ன? என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அரபு நாடு வறண்ட பிரதேசம். அதன் வெளிப்புறங்கள் யாவும் வறண்ட மலைகளாலும் கற்களாலும் சூழப்பட்டிருக்கின்றன. நடுவிலுள்ள பகுதி விசாலமான மணல் வெளியாகும். கல், மணல், தரை ஆகியவை சூரியனுடைய வெப்பத்தை அதி விரைவாக வாங்கிக் கொள்வதும், அதி

விரைவில் அந்த வெப்பங்கள் நீங்கி, அவை குளிர்ந்து விடுவதும் இயற்கையாக இருப்பதற்கேற்ப, அந்நாட்டில் கடுமையான வெப்பமும் கடுமையான குளிச்சியும் இருப்பதை இன்றும் நாம் காணலாம்.

இவ்வியற்கையின் காரணமாக அங்கு விவசாயம் சிறப்பாக நடைபெற வசதியில்லை. தாயிஃப், அல்ஹாயில் போன்ற சில இடங்கள் விவசாயத்துக்கேற்ற பகுதிகளாக இருந்தாலும், அங்கு விளையும் பொருட்கள் அந்நாட்டின் தேவைக்கே போதாது. முற்காலத்திலிருந்தே பற்றாக்குறையான நாடாகவே இருந்து வருகிறது.

இந்நாட்டில் வழ்வோரில் ஒரு பிரிவினர் தங்கள் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் இருக்கின்றனவா? என்பதைத் தேடிக் கண்டுபிடித்து சில செழிப்பான சிறு பிரதேசங்களில் குடியேறி நிரந்தரமாக வாழ்ந்து வருகின்றனர். மற்றவர்கள் நாடோடிகளாக வாழ்கின்றனர்.

உணவுப்பற்றாக்குறை, மேய்ச்சலின்மை ஆகியவை காரணமாக இந்நாட்டில் வாழ்வோர் வெளிநாடுகளுக்குச் சென்று, உணவுப்பொருட்களையும் தேவையான இதர பொருட்களையும் வாங்கி வர வேண்டிய அவசியமும் இந்நாட்டில் உள்ள சில பொருட்களை வெளிநாடுகளில் விற்பனை செய்ய வேண்டிய அவசியமும் இருந்தது.

இதனால் உள்நாட்டில் பல பாகங்களுக்கும் கொள்முதல் செய்யவும் விற்பனை செய்யவும் அவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்தனர். நாடோடிகளாக வாழ்ந்தவர்கள் இந்த வியாபாரிகளிடம் கொள்ளையடித்தும், வழிப்பறி செய்தும், திருடியும்தான் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இவர்களை விட்டும் தங்களை பாதுகாக்கும் நோக்கத்தில் இவ்வியாபாரிகளும் தங்களுடன் போரிடத் தகுந்தவர்களையும் ஆயுதங்களையும் கொண்டு சென்றனர். இதனால் நாடெங்கும் சண்டையும், திருட்டும், கொள்ளையும், வழிப்பறியும் நிகழ்ந்து கொண்டிருந்தன. ஒரு தலைமையின் கீழில் கட்டுப்பாடாக இருந்து அவர்கள் அமைதியான வாழ்க்கையை நடத்த முடியாமல் இருந்தனர்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இத்தகைய வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள இம்மக்களிடத்தில்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இஸ்லாமிய சன்மார்க்கத்தைப் போதித்தார்கள். இவர்களுடைய போதனைகளுக்கு கட்டுப்பட்டு இஸ்லாமைத் தழுவினால் தங்களுடைய வாழ்க்கைக்குரிய நிரந்தர தொழில்களாகிய மேற்கண்டவற்றை விட்டு விட்டு ஒரு தலைமையின் கீழில் ஐக்கியமாகி விட வேண்டும், இவ்வாறு செய்தால் தங்களுடைய

வாழ்வுக்கு எந்த வழியும் இல்லை.

எனவே, இந்தப் பிரச்சாரம் தங்களுடைய இவ்வுலக வாழ்க்கைக்கு முற்றிலும் விரோதமானது என்று அந்நாட்டு மக்களின் பொதுவான கருத்தாக இருந்தது. ஆதலால், அவர்களில் பெரும்பாலோர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை எதிர்த்தனர். ஆயினும், திருமக்காவாசிகளும், குறிப்பாக குரைஷியரும் அந்நாட்டு மக்களுக்கு இவ்வுலகக் காரியங்களில் தலைமை வகிப்பவர்களாக இருந்ததாலும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் முஸ்லிம்கள் மீதும் அவர்கள் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டு வாளாவிருந்தனர்.

இந்நிலையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் திருமக்காவை விட்டு வெளியேறி ஏறத்தாழ முன்னூறு மைல்களுக்கு அப்பால் உள்ள திருமதீனாவில் குடியேறி, தங்களை பலப்படுத்திக் கொண்டதன் காரணமாக குரைஷியரின் எதிர்ப்புத் தோற்றுவிட்டது போலாயிற்று.

எனவே, அவர்கள் ஆத்திரமடைந்து முஸ்லிம்களை எவ்விதத்திலும் நசுக்கி ஒழித்து விட வேண்டுமென உறுதி பூண்டனர். திருமதீனாவிலுள்ள அப்துல்லாஹிப்னு

உபய்யினுஸ்ஸலூல் என்பவருக்கு உங்களிடத்திலிருந்து முஹம்மதை வெளியேற்றி விடுங்கள். இல்லையேல் உங்களையும் முஹம்மதையும் நாங்கள் கொன்று விடுவோம் என்று எச்சரிக்கை செய்தனர்.

இவ்விஷயம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எட்டிற்று. உடனே அப்துல்லாஹிப்னு உபய்யினுஸ் ஸலூலிடம் சென்று எங்களை நீங்கள் வெளியேற்றினால், உங்கள் சகோதரர்களும், மக்களும் உங்களை எதிர்த்துப் போரிடுவார்கள். அவ்வெச்சரிக்கையை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம். மக்காவாசிகள் படையெடுத்து வந்தால் நாம் அனைவரும் சேர்ந்து அவர்களை எதிர்ப்போம் என்று கூறினார்கள்.

திருமதீனாவிலுள்ள முக்கிய கோத்திரங்களான அவ்ஸ், கஜ்ரஜ் கோத்திரங்களைச் சேர்ந்த அனைவரும் முஸ்லிம்களாகி விட்டதால், நிலைமையை உணர்ந்து தம் தோழர்களிடம் ஆலோசனை செய்து மக்காவாசிகளின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாதிருந்து விட்டார்.

திருமக்காவாசிகள் தங்கள் அறிவிப்புப்படி அக்கம் பக்கத்திலுள்ள ஏனைய அரபி கோத்திரங்களிடம் சென்று, எதிர்ப்புப் பிரச்சாரம் செய்து தங்களுக்கு பக்க பலத்தை

ஏற்படுத்திக் கொண்டு போரிட ஆயத்த மாயினர். இச்செய்தி திருமதீனாவிற்கு எட்டிற்று. எனவே, சில நேரங்களில் திருமக்காவிலிருந்து குடிபெயர்ந்து வந்த முஹாஜிர்களும், தற்காப்பின் நிமித்தம், ஆயுதபாணிகளான நிலையிலேயே இரவு நேரங்களில் தூங்கினர். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் கூட சில நேரங்களில் தூங்காமல் விழித்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், தற்காப்பின் நிமித்தமாக திருமதீனாவிலிருந்த யூதர்கள். கிறிஸ்தவர்கள், அக்கம்பக்கத்திலிருந்த இதர கோத்திரங்கள் முதலியவர்களிடம் சென்று ஆக்கிரமிக்கக்கூடாது என்ற சமாதான ஒப்பந்தங்களைச் செய்ய முனைந்தார்கள். திருமக்காவாசிகளின் நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்வதற்காக சிலரை அனுப்பி விஷயங்களைச் சேகரிப்பதிலும் ஈடுபட்டார்கள். இவை யாவற்றையும் அக்காலத்து வரலாற்றாசிரியர்கள் போர் என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்து விட்டனர்.

தவிர, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நேரடியாக கலந்து கொண்ட போருக்கு கஸ்வா என்றும், அவர்கள் நேரில் செல்லாமல் மற்றவர்களை அனுப்பியவற்றிற்கு ஸிரிய்யத் என்றும் தலைப்புகளைக் கொடுத்து விட்டனர்.

இத்தலைப்புகள்தாம் இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என்று சன்மார்க்க விரோதிகளால் பிரச்சாரம் செய்வதற்கு சாதகங்களாக அமைந்து விட்டன.

★ வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் கடந்த 3700 ஆண்டுகளில் 250 ஆண்டுகள் மட்டுமே உலகில் யுத்தம் இல்லாமலிருந்தது, என்கிறார் வரலாற்று மேதை ட்யூராண்ட்.

1945 ல் இரண்டாம் உலகப்போர் முடிந்து சமாதானம் நிலவிய பிறகு மட்டும் 160 யுத்தங்கள் நடந்ததாக தெரிவிக்கிறார் ஆல்வின் டாஃப்ளர், அதில் இறந்த இராணுவ வீரர்கள் மட்டும் 72 இலட்சமாகும். 1990ம் ஆண்டில் மட்டும் 31 யுத்தங்கள் நிகழ்ந்துள்ளன. 1945ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06ம் தேதி அமெரிக்கா வீசிய அணுகுண்டால் ஹிரோசிமாவில் இறந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சம். அடுத்த இரண்டு நாட்களில் நாகாஸாகியில் வீசிய அமெரிக்க அணுகுண்டால் 75,000 பேர் மடிந்தனர்.

1987-97க்கு மத்தியில் நடந்த குட்டிக்குட்டி யுத்தங்களில் நடந்த மோதல்களில் இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை இருபது இலட்சம். பெற்றோரை இழந்த குழந்தைகளின் எண்ணிக்கை பத்து இலட்சம்.

மற்றொரு பயங்கரம் உலக அளவில் சிறுவர்களை

இராணுவ வீரர்களாக்கும் கொடுமை. 176 நாடுகள் ஒப்புக் கொண்டு கையெழுத்திட்ட ஐ.நா.தீர்மானத்தின் படியும், ஜெனீவா ஒப்பந்தத்தின்படியும் பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களை துப்பாக்கி ஏந்த வைப்பது சர்வதேசக் குற்றம்.

ஆனால், 9 லிருந்து 12 வயது வரையுள்ள இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பல நாடுகளில் நடக்கும் போர்களில் தீவிரமாகப் பங்கேற்கின்றனர். அவர்களுக்கு ஏ.கே.47, எம்.16 ரக துப்பாக்கிகளின் எடை வெறும் மூன்று கிலோதான். சிறுவர்களால் இவற்றை அலட்சியமாக உபயோகிக்க முடியும்.

வேட்டுச் சத்தத்தையும், பீரிடும் இரத்தத்தையும் பார்த்து வரும்இந்த இலட்சக்கணக்கான சிறுவர்கள் நாளை என்னவாகப் போகிறார்கள்? என்பது வேறு விஷயம்.

தீவிரவாதிகளால் உலகுக்கு அச்சுறுத்தல் என்று சொல்லி, தீவிரவாத ஒழிப்பு இயக்கத்தை முன்னின்று நடத்தி வரும் அமெரிக்காவின் வரலாற்றைப் பாருங்கள், கியூபா, வியட்நாம், மெக்ஸிகோ, ருவாண்டோ, ஈக்வடார், ஸ்பெயின், கொரிய, ஆஃப்கானிஸ்தான், இராக் என்று தன் முத்திரை பதிக்காத நாடே இல்லை.

நானூறு வருட சரித்திரம் கொண்ட அமெரிக்கா குறைந்தது நூறு யுத்தங்களிலாவது பங்கேற்றிருக்கிறது. ஆனால், பிற நாடுகள் போன்று அமெரிக்கா யுத்தங்களால்

பாதிக்கப்பட்டதில்லை. முன்னின்று நடத்தும் சூத்திரதாரிகளாக இருக்கும் இவர்கள் தற்காப்பு நடவடிக்கையில் கைதேர்ந்தவர்கள். யுத்தங்களை வருமானம் தரும் ஒரு தொழிலாகவே வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

இன்று உலகில் மூன்று அல்லது நான்கு நாடுகள் தவிர மற்ற நாடுகளிலெல்லாம் அமெரிக்க தன் வர்த்தகக் காலனிகளை வைத்திருக்கிறது. காலனியாக முடியாத நாட்டில் ஒரு குடிசையாவது போட்டிருக்கிறார்கள். இந்த வர்த்தக வேட்டையில் சுணக்கம் ஏற்படும் போதெல்லாம் அமெரிக்கா யுதத்ம் நடத்துகிறது. உலக யுத்தம் தொடங்கி வளைகுடா யுத்தம் வரை அமெரிக்கா ஈடுபட்ட அத்தனை யுத்தங்களுக்கும் இதுதான் அடிப்படை.

இவர்கள்தான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் எடுக்கப்பட்ட சில தற்காப்பு நடவடிக்கைகளை ஊதிப் பெரிதாக்கி இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என்று துஷ்பிரச்சாரம் செய்கின்றனர். நபிகளார் காலத்து யுத்தங்கள் என்னும் இந்நூலைப் படிப்போர் யுத்தங்கள் ஏன்றே கூறத் துணிய மாட்டார்கள்.

எங்கள் தந்தையார் அவர்களால் எழுதப்பட்ட நூற்களை ஆர்வமுடன் வாங்கிப் படிக்கும் வாசகப் பெருமக்களுக்கும்

இப்பணியில் தங்களின் மேலான ஒத்துழைப்புகளை தல்கிவரும் புதுக்கோட்டை ஜாமிஆ சிராஜுல் முனீர் அரபிக் கல்லூரி பேராசிரியர் மௌலானா, மௌலவி **எம்.ஏ.ஹுசைன் முஹம்மது** தாவூதி, பாக்கவி அவர்களுக்கும், உத்தமபாளையம் கௌதிய்யா மத்ரஸா ஆசிரியர் மௌலானா, மௌலவி ஹாபிஜ் **எம்.ஷாஜஹான்** பாக்கவி அவர்களுக்கும் எம் தந்தையார் அவர்களின் நூற்களை தொடர்ந்து வெளியிட்டு வரும் பெரியவர் ஹாஜி **எஸ்.முஸ்தஃபா கமால்** அவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றி. வஸ்ஸலாம்.

மௌலவி, அல்ஹாஜ்

எஸ்.எஸ்.எம். முஹம்மது ஜாஃபர் ஜமாலி

(மௌலானாவின் புதல்வர்)